# இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி

முனைவர் பெ. சுயம்பு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி

முனைவர் பெ. சுயம்பு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளைச்
சொற்பொழிவு

அறக்கட்டளை நிறுவியவர் - டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார்

வரிசை எண்: 8 நாள்: 12-01-05

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Ilakkaṇa Nūlkaḷil Karuttu Vaḷarcci** |
| Author | : | Dr. P. Suyambu<br>Dept. of Tamil<br>Adithanar College<br>Thiruchendur |
| General Editor | : | Dr. S. Krishnamoorthy<br>Director<br>IITS, Chennai - 600 113. |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Taramani, Chennai - 600 113.<br>Phone: 044-22542992 |
| Publication No | : | 528 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 2004 |
| Paper Used | : | 18.6 kg TNPL Map litho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | vi + 122 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 35/- (Rupees Thirty Five only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road,<br>Chennai - 600 004. |
| Subject | : | Grammar |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

**முனைவர் சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

# அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழாய்வுப் பணிகளுக்காக வள்ளல் பெருந்தகை டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்கள் தம் பெயரில் நிறுவிய அறக்கட்டளையின் எட்டாம் சொற்பொழிவின் நூல் வடிவமே முனைவர் பெ. சுயம்புவின் **இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி** என்பது.

தமிழில் **அகத்தியம், தொல்காப்பியம்** எனும் இலக்கண நூல்களுக்கு முன்பும் இலக்கணக் கருத்துகள் நிலவியிருந்தன. அக்காலத்திய தமிழ்மொழியின் இயல்பைப் பதிவு செய்து வைத்தது இந்நூல்கள் எனில் மிகையாகாது. **தொல்காப்பியத்துக்குப்** பின்பு தமிழ்மொழியில் ஏற்பட்ட மாற்றங்களை இலக்கண, இலக்கிய உரைகளும் **நிகண்டு**களும் **நன்னூல்** தொடக்கமாக ஏற்பட்ட இலக்கண நூல்களும் பதிவு செய்து வைத்துள்ளன. தொடர்ந்து தமிழில் ஏற்பட்ட மொழிமாற்றங்களையும், மொழி இழப்புகளையும், வளர்ச்சிகளையும் இக்கால மொழியியலாரும், அகராதியியலாரும் ஆய்வாளர்களும் தமிழில் பதிவு செய்து பேரளவில் இலக்கண ஆய்வு நூல்களை எழுதியுள்ளனர். அவ்வரிசையில் முனைவர் பெ. சுயம்புவின் இந்நூலும் அமைந்துள்ளது. அதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

இலக்கண ஆய்வுகள் அருகி வருகின்ற இக்காலத்தில் இந்நூல் வெளிவருவது பெரிதும் சிறப்புக்குரியதாகும். உயர் தனிச்செம்மொழியாம் தமிழ்மொழியின் அரிய கருத்துகளை ஆவணப்படுத்துதலுக்காக நிறுவப்பட்ட இவ்அறக்கட்டளையின் சீரிய நோக்கம் இதன்வழி நிறைவேற்றப் பட்டுள்ளமையை அறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்புச் செய்த திருமதி இரா. வெண்ணிலாவுக்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் நன்றியும் பாராட்டுகளும் உரியன.

சென்னை
29-12-2004

**இயக்குநர்**

# முன்னுரை

தமிழ் இலக்கண வரலாறு நெடுங்காலத் தொடர்ச்சியை உடையது. கி.மு. காலத்தது என்று கருதப்படுகிற தொல்காப்பியம் முதலாகத் தற்காலம் வரையிலும் இலக்கண வரலாற்றிற்கு எழுத்துச் சான்றுகள் கிடைக்கின்றன. இதன் தொடக்கத்தை இன்ன காலத்தது என்று அறுதியிட்டுக் கூறவியலவில்லை. தொல்காப்பியத்திலேயே முந்நூற்றுக்கு மேற்பட்ட நூற்பாக்களில் என்ப, என்மனார் புலவர், என மொழிப, உயர்மொழிப் புலவர் என்பன போன்ற சொல்லாட்சியைக் காணலாம். இவை தொல்காப்பியத்திற்கு முந்தைய இலக்கண நூல்களைப் புலப்படுத்துகின்றன.

பழைய வழக்குகள் சில மறைதலும் புதிய வழக்குகள் சில தோன்றுதலும் மொழியமைப்பின் வளர்ச்சி ஆகும். அறிவார்ந்த மக்கள் வழங்குகிற மொழியில் மொழியமைப்பிற்கேற்பவும் கொள்கைகளுக்கு ஏற்பவும் அவ்வப்போது புதிய புதிய இலக்கண நூல்கள் தோன்றுவது இயல்பு. மிகத் தொன்மையான நாகரிக - பண்பாடும் அறிவு வளர்ச்சியும் கொண்ட தமிழினத்தின் மொழியில் காலந்தோறும் இலக்கண நூல்கள் தோன்றுவது ஒன்றும் புதுமையானது அன்று.

தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தமிழில் பல இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் வீரசோழியம் (11-ஆம் நூற்றாண்டு), நேமிநாதம் (12-ஆம் நூற்றாண்டு), நன்னூல் (13-ஆம் நூற்றாண்டு), இலக்கண விளக்கம் (17-ஆம் நூற்றாண்டு), தொன்னூல் விளக்கம் (18-ஆம் நூற்றாண்டு), சுவாமிநாதம் (19-ஆம் நூற்றாண்டு), முத்து வீரியம் (19-ஆம் நூற்றாண்டு) ஆகியன தமிழ் மொழி அமைப்பை விவரிப்பனவற்றுள் குறிப்பிடத்தக்கன. இந்நூல்களும் தொல்காப்பியமும் விவரிக்கிற கருத்துக்களுள் சிலவும் அவற்றின் வளர்ச்சிக்கான காரணங்களும் இங்கு விவரிக்கப்படுகின்றன.

பெ. சுயம்பு

# தன் விவரக்குறிப்பு



| | |
|---|---|
| **பெயர்** | : பெ. சுயம்பு |
| **தற்போதைய பணி** | : தமிழ் இணைப் பேராசிரியர்<br>ஆதித்தனார் கல்லூரி<br>திருச்செந்தூர் (1987 முதல்) |
| **முந்தைய பணி அனுபவம்** | : ஆய்வு உதவியாளர்<br>பன்மொழி அகராதி ஆக்கம்<br>ஆசியவியல் நிறுவனம், சென்னை.<br>(ஓராண்டு)<br>முதன்மைப் பதிப்பாசிரியரின் உதவியாளர்<br>வாழ்வியற் களஞ்சியம்<br>தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்<br>(ஓராண்டு) |
| **கல்வித் தகுதி** | : முனைவர் (தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும்)<br>மேற்பார்வையாளர்:<br>பேராசிரியர் முனைவர் மோ. இசரயேல்<br>துறைத்தலைவர், மொழியியற்றுறை<br>மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்<br>முதுநிலை (தமிழ், இந்தியப் பண்பாடு)<br>இளநிலை (சிறப்புத் தமிழ் Specialised Tamil)<br>புலவர் (பண்டிதம்)<br>பட்டயம் (இந்தி, தொலை நெறிக் கல்வி, காந்தியம்)<br>சான்றிதழ் (மொழிபெயர்ப்பியல்) |
| **நூல்கள்** | : 10 |
| **ஆய்வுக் கட்டுரைகள்** | : 50க்கு மேற்பட்டவை. |

# நன்றி

'உடல் மண்ணுக்கு; உயிர் தமிழுக்கு' என்ற கொள்கையே தம் மூச்சாகக் கொண்டு, அதற்குச் செயல் வடிவமாக வாழ்ந்தவர் பெருந்தகை சி.பா. ஆதித்தனார் அவர்கள். 'தந்தையர் ஒப்பர் தம் மக்கள்' என்ற தொன்மொழிக்கு இலக்கியமாகிப் பணியாற்றி வருகிறவர் எம் கல்லூரி ஆட்சிக் குழுத் தலைவர் **செம்மனச் செம்மல் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார்** அவர்கள். ஐயா பெயரில் தமிழ்ப்பணிக்காக நிறுவப் பெற்றுள்ள அறக்கட்டளை சார்பில் '**இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி**' என்னும் பொருளில் பொழிவு நிகழ்த்திட அரிய வாய்ப்பினை வழங்கியமைக்காக அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழாய்வில் பல்வேறு வகைகளில் என்னை ஊக்கப்படுத்தி வரும் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு. **நெல்லை நெடுமாறன்** அவர்களை நினைத்துப் பார்க்கிறேன்.

தமிழ்ப்பணி செய்தவற்கென்றே தம்மை ஆளாக்கிக் கொண்டு, இவ்வறக்கட்டளையின் பொறுப்பாளராகவும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநராகவும் தொண்டாற்றி வரும் பேராசிரியர் **முனைவர் சா. கிருட்டினமூர்த்தி** அவர்களும் அறக்கட்டளையின் ஏனைய உறுப்பினர்களும் பரிந்துரைத்தமையே இவ்வாய்ப்பினை யான் பெறுதற்குக் காரணம் என உணர்கிறேன். இச்சான்றோர்களின் அருள் உள்ளத்தை என்றும் மறத்தற்கு இயலாது.

**பெ. சுயம்பு**

# 1. இலக்கண விவரிப்பு நெறிகள்

## எழுத்திலக்கணம்

### தொல்காப்பியம்

எழுத்திலக்கணம் தொல்காப்பியத்தில் ஒன்பது இயல்களில் விவரிக்கப்படுகிறது. தனி நின்ற எழுத்துக்களின் இயல்புகளான எண், பெயர், முறை, உருவம், மாத்திரை, இணைக்கத் தகுதி (மெய்ம்மயக்கம்) ஆகியன நூன்மரபில் கூறப்படுகின்றன. சொல்லில் வருமிடத்து உணரத் தகுந்த சார்பெழுத்துக்கள், அளபெடை ஆகியனவும் மொழி முதலிலும் இறுதியிலும் வரத் தகுந்த எழுத்துக்களும் ஈரொற்றுடனிலையும் மொழிமரபில் கூறப்படுகின்றன. எழுத்துக்கள் பிறக்கிற விதத்தைப் பிறப்பியல் கூறுகிறது. புணர்ச்சியின் அறிமுகமாகிய பொது இலக்கணத்தைப் புணரியல் குறிப்பிடுகிறது. உயிரீறு, மெய்யீறு, குற்றியலுகரவீற்றுச் சொற்கள் புணர்ச்சியின் போது ஏற்கிற ஒலிமாற்ற விதிகள் சிலவற்றைத் தொகை மரபு தொகுத்துச் சுட்டுகிறது. உருபியல் பெயர்ச்சொற்களுடன் வேற்றுமை உருபுகள் புணரும் விதத்தைக் கூறுகிறது. உயிரீற்றுச் சொற்களின் புணர்ச்சியை உயிர்மயங்கியலும் மெய்யீற்றுச் சொற்களின் புணர்ச்சியைப் புள்ளி மயங்கியலும் குற்றியலுகர வீற்றுச் சொற்களின் புணர்ச்சியைக் குற்றியலுகரப் புணரியலும் விவரிக்கின்றன.

தொல்காப்பியத்தின் இயல் பகுப்பு முறை தற்கால மொழியியலாரின் பகுப்பு முறையை ஒத்துக் காணப்படுகிறது என்பது அறிஞர்களின் கருத்து. நூன்மரபு ஒலியனியலையும் மொழி மரபு ஒலியன்கள் சொல்லில் வருதலையும் பிறப்பியல் ஒலிப்பியலையும் எஞ்சிய ஆறு இயல்களும் உருபொலியனியலையும் நினைவூட்டு கின்றன என்பர்.

நூன்மரபில் சேர்க்கப்பெற்றுள்ள செய்திகளுள் மெய்ம்மயக்கம் அறிஞர்களிடையே கருத்தாய்வுக்குட்பட்டுள்ளது. நூன்மரபின் முதல் நூற்பாவிற்கு விளக்கம் தருமிடத்து இளம்பூரணர்,

> இதனுட் கூறுகின்ற இலக்கணம் மொழியிடை
> (நின்ற) எழுத்திற்கன்றித் தனிநின்ற வெழுத்திற்கெனவுணர்க

எனக் குறிப்பிடுகிறார். இதன் வழி மெய்ம்மயக்கமும் தனி நின்ற எழுத்துக்களின் இயல்பே என்பதனை அவர் உணர்த்துகிறார். ஆனால் நச்சினார்க்கினியரோ (தொல். எழு. 22),

> இச்சூத்திரம் முதலாக, 'மெய்ந்நிலை சுட்டின்' (எழு. 30) ஈறாக மேற்கூறும் மொழிமரபிற்குப் பொருந்திய கருவி கூறுகின்றது என்று உணர்க; எழுத்துக்கள் தம்மிற் கூடிப் புணருமாறு கூறுகின்றது ஆதலின்

என்கிறார். மெய்ம்மயக்கம் மொழிமரபில் கூறப்பட வேண்டியது; அது தவறுதலாக நூன்மரபில் விவரிக்கப்பட்டுள்ளது என்பது அவரது கருத்து.

நச்சினார்க்கினியரின் கருத்துக்கு மறுப்பாகச் சிவஞான முனிவரின் கருத்து அமைந்துள்ளது.

> இவ்வெழுத்துக்கு இவ்வெழுத்து நட்பு; அல்லன
> பகை என்னும் துணையானே கருவி செய்தலின்
> இவை ஈண்டே வைக்கப்பட்டன. இஃதறியாதார்
> தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப.
>
> (தொல்காப்பியச் சூத்திர விருத்தி, பக்கம் 85)

மெய்ம்மயக்கத்தை எழுத்துக்கள் ஒன்றோடு மற்றொன்று சேர்தலாகிய இணக்கத் தகுதியாக முனிவர் கருதுதல் ஏற்புடையது.

## வீரசோழியம்

வீரசோழியம் இயல் பகுப்பு முறையில் தொல்காப்பியத்தி லிருந்து வேறுபடுகிறது. இந்நூல் எழுத்திலக்கணத்தைச் சந்திப்படலம் என்னும் ஒரே இயலில் அடக்கிக் கூறுகிறது. இதில் செய்திகள் மிகச் சுருக்கமாக அறிமுகம் என்னும் அளவில் காணப்படுகின்றன. எழுத்துக்களின் பெயர், எண்ணிக்கை, மாத்திரை, பிறப்பு, மொழி முதனிலை, மொழிஇறுதிநிலை ஆகியன எட்டு நூற்பாக்களிலும் புணர்ச்சிக் கருத்துக்கள் எஞ்சிய இருபது நூற்பாக்களிலும் கூறப்படுகின்றன. இது குறித்துப் பேராசிரியர் செ.வை. சண்முகம் (எழுத்திலக்கணக் கோட்பாடு, பக்கம் 30) பின்வருமாறு கூறுகிறார்.

> "வீரசோழியம் எழுத்ததிகாரத்தைச் சந்திப்படலம்
> என்று ஒரே இயலாக விவரிக்கிறது. ஆனால்,
> சொல்லதிகாரம் ஆறு படலமாகவும், ஏனைய
> அதிகாரங்கள் ஒவ்வொரு படலமாகவும் விளக்கப்

> பட்டுள்ளன. இந்த நிலையில் ஒரு அதிகாரத்தை உள்பிரிவு இன்றிப் பேசுவது எழுத்ததிகாரத்துக்கே உரியமுறை என்று கூற முடியாவிட்டாலும், அதில் சிறப்பு எதுவும் இல்லாததால் எழுத்ததிகாரம் ஒரே இயலாக விவரிக்கப்பட்டுள்ளது என்று கொள்ளலாம். இது இலக்கணத்தைத் தொகுத்துக் கூறும் முயற்சியின் விளைவு ஆக இருக்கலாம்"

வீரசோழியம் எழுத்திலக்கணத்தைப் போன்று பொருள், யாப்பு, அணி ஆகியவற்றையும் ஒரே இயலில் விவரிக்கிறது. ஆனால் சொல்லிலக்கணத்தை மட்டும் இந்நூல் வேற்றுமைப்படலம், உபகாரகப் படலம், தொகைப் படலம், தத்திதப் படலம், தாதுப் படலம், கிரியாபதப் படலம் என்னும் ஆறு இயல்களில் விவரிக்கிறது. இந்நூல் வடமொழியையும் தமிழையும் ஒப்பிட்டு, ஒரு மொழியை மற்றொரு மொழியாளருக்குக் கற்பிப்பதற்காக எழுதப்பெற்றது. மொழி பயிற்றுதலில் சொல்லிலக்கணமே முதன்மை பெறுகிறது. சொற்களின் கட்டமைப்பினையும் அவை சேர்ந்து அமைகிற தொடரமைப்பினையும் விரிவாக அறிந்தாலன்றி, ஒரு மொழியின் அமைப்பினைப் புரிந்துகொள்ளுதல் அரிதாகும். எனவே சொல்லிலக்கணம் விரிவாக வீரசோழியத்தில் விவரிக்கப்படுகிறது. ஏனைய எழுத்திலக்கணம் முதலியன அறிமுகம் என்ற அளவில் சுருக்கிக் கூறப்படுகின்றன.

### நேமிநாதம்

"நேமிநாதம் வீரசோழியத்தை மாதிரியாகக் கொண்டு எழுத்திலக்கணம் கூறுகின்றது. இவ்விலக்கணத்தை ஒரே உட்பிரிவில் (எழுத்ததிகாரம் என்னும் பெயரில்), மகடூஉ முன்னிலைப்படுத்துதல், எழுத்துக்களைச் சுட்டாமல் அவற்றின் நெடுங்கணக்கு வரிசை எண்ணைக் குறிப்பிடுதல், செய்திகளைக் கூறும் வரிசை, செய்திகள் எனும் இவை பெரிதும் இதனை மெய்ப்பிக்கின்றன" (பெ. சுயம்பு, இலக்கண நூற்களஞ்சியம், பக்கம் 142).

### நன்னூல்

நன்னூல் எழுத்திலக்கணத்தை எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்னும் ஐந்து இயல்களில் விவரிக்கிறது. இந்நூல் எழுத்துக்களின் இலக்கணம் பன்னிரு வகைப்படும் எனக் கருதுகிறது. இப்பன்னிரு வகைகளும் எழுத்தியலின் தொடக்கத்தில் ஒரு திட்ட நூற்பாவில்

குறிக்கப்பெற்று, அந்நூற்பாவிலுள்ள வரிசைப்படி விவரிக்கப் படுகின்றன.

**எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை**
**முதலீ றிடைநிலை போலி யென்றா**
**பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே** (நன்னூல், 57)

எழுத்திலக்கணங்களுள் எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, மொழிமுதனிலை, மொழியிறுதி நிலை, இடைநிலை, போலி என்னும் பத்தும் தனிநின்ற எழுத்துக்களின் இயல்புகளாகக் கருதப்பெற்று, எழுத்தியலில் வரிசையாக விவரிக்கப்படுகின்றன. பதம் பதவியலில் விவரிக்கப்படுகிறது. புணர்ச்சி இலக்கணம் உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுபுணரியல் என்னும் மூன்று இயல்களில் பகுத்து விவரிக்கப்படுகிறது. நன்னூலில் எழுத்தியல், பதவியல், புணர்ச்சி இயல்கள் ஆகியன முறையே ஒலியனியல், உருபனியல், உருபொலியனியல் ஆகியவற்றோடு இணைத்து நோக்கத்தக்கவை.

தொல்காப்பியத்தின் ஒன்பது இயல்களின் செய்திகளும் நன்னூலில் ஐந்து இயல்களில் அடக்கப்பெற்றுள்ளன. நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் மூன்றும் எழுத்தியலில் இணைக்கப் பெற்றுள்ளன. புணரியல், தொகை மரபு, உயிர் மயங்கியல், குற்றியலுகரப் புணரியற் செய்திகள் உயிரீற்றுப் புணரியலில் இடம் பெற்றுள்ளன. புள்ளி மயங்கியல், உருபியல் இரண்டிலும் விவரிக்கப் பெற்றுள்ளவை முறையே மெய்யீற்றுப் புணரியலிலும் உருபு புணரியலிலும் இடம்பெற்றுள்ளன. பதவியல் நன்னூல் தமிழ் இலக்கணத்திற்குப் புதிதாக வழங்கிய கொடையாகும். இவ்வியல் பகுதி என்னும் தனி உருபன்களையும் இடைநிலை, விகுதி என்னும் கட்டு உருபன்களையும் விவரிக்கிறது. மேலும், இதில் வடமொழியாக்கமும் அடக்கப்பெற்றுள்ளது.

நேமிநாதப் பாயிர உரையில் இடம்பெற்றுள்ள,

**எண்பெயர் முறைபிறப் பளவியல் வடிவு**
**புணர்தலோ டேழும் பொருந்திய வழக்கே**

என்னும் அவிநய நூற்பாவை எடுத்துக்காட்டி, அவிநயத்தைப் பின்பற்றி நன்னூல் திட்ட நூற்பாவை அமைத்துள்ளது எனக் கோ. விஜய வேணுகோபால் (A Modern Evaluation of Nannul, page 11) கூறுகிறார். ஆனால் இளம்பூரணர் உரையிலும் இத்தகைய செய்தி இடம் பெற்றுள்ளது.

எழுத்து எனைத்து வகையான் உணர்த்தினாரோவெனின், எட்டு வகையானும், எட்டிறந்த பல வகையானும் உணர்த்தினா ரென்பது. அவற்றுள், எட்டு வகையாவன: எழுத்து இனைத்தென்றலும், இன்ன பெயரவென்றலும், இன்ன முறைமைய வென்றலும், இன்ன அளவினவென்றலும், இன்ன பிறப்பினவென்றலும், இன்ன புணர்ச்சியவென்றலும், இன்னவடிவின வென்றலும், இன்ன தன்மையவென்றலும். எனவே, அவற்றுள் தன்மையும் வடிவும் ஆசிரியர் தாம் உணருவரெனினும், நமக்கு உணர்த்தல் அருமையின் ஒழிந்த ஆறுமே இதனுள் உணர்த்தினார் என உணர்க.

(தொல். எழு. 1)

இளம்பூரணர் உரைத்தவற்றுள் 'இன்ன தன்மைய' என்பது ஒழிந்த ஏழனையும் அவிநய நூற்பாவில் காணமுடிகிறது. எனவே இத்தகைய ஒரு பகுப்பு முறை தொல்காப்பியத்திற்குப் பிந்தைய காலத்தில் பரவலாக வழக்கிலிருந்தது என்றும் அதனைத் தழுவி நன்னூல் திட்ட நூற்பாவை அமைத்துள்ளது என்றும் கொள்ளலாம். இத்திட்ட நூற்பா இலக்கணத்தை எளிதில் கற்று நினைவில் இருத்திட உதவும் என்னும் பயிற்று நெறி காரணமாக நன்னூலில் அமைக்கப் பெற்றுள்ளது. இத்தகைய திட்டம் தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம் ஆகிய முந்தைய நூல்களினும் திறம் வாய்ந்த விவரிப்பு நெறி உடையதாக நன்னூலை இனம் காட்டுகிறது.

தொல்காப்பியம் முற்றியலுகரத்தையும் குற்றியலுகரத்தையும் உகரத்தின் இருவகைகளாகக் (செய்யுளியல், 4) கருதுகிறது. எனினும், இவ்விரண்டையும் வேறுபட்ட இயல்புடைய எழுத்துக்கள் எனக் கொண்டதனால், முற்றியலுகரப் புணர்ச்சியை உயிர் மயங்கியலிலும் குற்றியலுகரப் புணர்ச்சியைக் குற்றியலுகரப் புணரியலிலும் விவரிக்கிறது. ஆனால் நன்னூலோ அவை இரண்டையும் வேறுபாடின்றிக் கொண்டு, முற்றியலுகரப் புணர்ச்சியைத் தொடர்ந்து, குற்றியலுகரப் புணர்ச்சியை உயிரீற்றுப் புணரியலில் விவரிக்கிறது.

சொற்களைப் பகுதி, இடைநிலை, விகுதி என நுண்ணிதாகப் பகுத்துப் பதவியலில் நன்னூல் பட்டியலிடுகிறது. இத்தகைய பகுப்பு முறை முந்தைய நூல்களில் காணப்படவில்லை. தொல்காப்பியம் வினைச்சொற்களில் அமைகின்ற பால்-எண் விகுதிகளைப் பகுத்து வினையியலிலும் கிளவியாக்கத்திலும் கூறுகிறது. எனினும் இந்நூல் பகுதிகளையோ இடைநிலைகளையோ பகுத்து இனம் காட்டவில்லை. தொடரில் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே இயைபு இருத்தல்

வேண்டும் என்பதை அறிவுறுத்தும் நோக்கில் தொல்காப்பியச் சொற்பகுப்பு இடம்பெற்றுள்ளது. வீரசோழியமோ பகுதி, பகுதியல்லாதன (கால இடைநிலை+பால்-எண் விகுதி) எனச் சொற்களைப் பகுத்து விவரிக்கிறது. அயல் மொழியாளருக்கு ஒரு மொழியைப் பயிற்றுவிக்கும் சிறந்த நெறியாக வீரசோழியப் பகுப்பு முறை காணப்படுகிறது.

நன்னூலின் விளக்க நெறிகளுள் குறிப்பிடத்தகுந்தது சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலாகும். இதனை ஒரு நூலுக்கான அழகுகளுள் ஒன்று எனக் குறிப்பிடும் நன்னூல் (13), இவ்வழகினைத் தன்னுள் பல இடங்களில் சிறப்பாகப் பேணியுள்ளது. தொல்காப்பியத்தின் விரிந்த செய்திகள், குறிப்பாகப் புணர்ச்சி விதிகள் நன்னூலில் மிகச் சுருக்கமாக - விளக்கம் குன்றாமல் இடம் பெற்றுள்ளன.

## இலக்கண விளக்கம்

இலக்கண விளக்கம் நன்னூலைப் பின்பற்றி எழுத்திலக்கணத்தை எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என ஐந்து இயல்களில் விவரிக்கிறது. மேலும், இந்நூலிலும் நன்னூலில் உள்ளதைப் போன்ற திட்ட நூற்பா ஒன்று இடம் பெற்றுள்ளது.

**எண்பெயர் முறைபிறப்பு உருவளவு முதலீ**
**றிடைநிலை போலியொடு பதம்புணர் புளப்பட**
**வாறிரு பகுதித் ததுவென மொழிப. (இலக்கண விளக்கம், 2)**

இத்திட்ட நூற்பாவின் அடிப்படையில் செய்திகள் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

இலக்கண விளக்கம் நூற்பாவில் நன்னூலைப் போன்று சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது. ஆனால் உரையில் தொல்காப்பியக் கருத்துக்கள் தழுவப்பெற்று, விரித்துரைக்கப் பட்டுள்ளன. இவ்வுரைச் செய்திகள் நன்னூலுக்கு எதிரானவும் தொல்காப்பியத்திற்கு ஆதரவானவுமான பல கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. கருத்தளவில் நன்னூலுக்கு எதிராகத் தோன்றிய நூலாக இருப்பினும், நூலமைப்பளவில் இந்நூல் நன்னூலையே பெரிதும் சார்ந்துள்ளது. எழுத்ததிகார, சொல்லதிகார இயல் பகுப்புக்கள் நன்னூலை ஒட்டியவை. மேலும், இந்நூலின் நூற்பாக்களுள் இருநூற்றுத் தொண்ணூற்று மூன்று நன்னூலிலிருந்து எடுக்கப் பெற்றவை. அவற்றுள் நூற்று இருபத்தைந்து எவ்வித மாற்றமுமின்றி ஏற்கப் பெற்றவை; நூற்று அறுபத்தெட்டு மாற்றி அமைக்கப் பெற்றவையாகும். இலக்கண விளக்கத்தில் எழுத்ததிகாரம்,

சொல்லதிகாரம் இரண்டிலுமாக முந்நூற்று எழுபத்திரண்டு நூற்பாக்களே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இலக்கண விளக்கப் பதவியல் வடமொழியாக்கம் தவிர்த்த நன்னூற் செய்திகள் யாவற்றையும் கொண்டுள்ளது. இலக்கியத்திற்கு உரிய சொற்களுள் ஒன்றாக வடசொற்களை ஏற்றுள்ள போதிலும், அச்சொற்களைத் தமிழ்ப்படுத்தும் முறையை இந்நூல் ஏற்கவில்லை. ஏனெனில், ஒரு மொழியில் பல அயல் மொழிச் சொற்கள் வந்து வழங்கலாம். அவற்றுக்கெல்லாம் விளக்கம் தருவது ஓர் இலக்கண நூலால் இயலாது என இந்நூல் கருதுகிறது. இது தொல்காப்பிய நெறியும் ஆகும்.

## தொன்னூல் விளக்கம்

தொன்னூல் விளக்கம் எழுத்திலக்கணத்தை முந்தைய இலக்கண நூல்களைப் போன்று எழுத்ததிகாரத்தில் (PART I - LETTERS) விவரிக்கிறது. இவ்வதிகாரம் எழுத்தியல் (Chapter I - Nature of Letters), எழுத்தின் வகுப்பு (Chapter II - Classification Of Letters), எழுத்தின் விகாரம் (Chapter III Changes of Letters) என மூன்று இயல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது. எழுத்தியலின் முதல் நூற்பா எழுத்திலக்கணப் பகுப்பினை விவரிக்கிறது.

**தோற்றமும் வகுப்புந் தோன்றும் விகாரமும்**
***சாற்றுளித் தோன்றும் தானெழுத் தியல்பே***

*(தொன்னூல் விளக்கம், 2)*

தொன்னூல் விளக்க எழுத்தியல் எழுத்துக்களின் பொதுப்பிறப்பினைக் கூறும் ஒரு நூற்பாவினை மட்டுமே கொண்டுள்ளது. தொடர்ந்து, எழுத்தின் வகுப்பும் அதனைத் தொடர்ந்து விகாரமும் பல நூற்பாக்களில் விவரிக்கப்படுகின்றன. எழுத்துக்களின் வகை, எண்ணிக்கை, பெயர், உருவம், மாத்திரை, மொழி முதனிலை, இறுதி நிலை ஆகியவற்றை எழுத்தின் வகுப்பு அடக்கியுள்ளது. விகாரம் என்னும் பகுதியில் புணர்ச்சிக் கருத்துக்கள் கூறப்படுகின்றன.

தொன்னூல் விளக்கத்தின் இயல் பகுப்பு ஒலிப்பியல், ஒலியனில், உருபொலியனியல் எனும் இக்கால மொழியியல் முறையில் காணப்படுகிறது (பெ. சுயம்பு, இலக்கண நூற் களஞ்சியம், பக்கம் 168).

தொல்காப்பியம் முதலிய நூல்கள் எழுத்துக்களை அறிமுகப்படுத்திய பின்னரே, அவற்றின் பிறப்பு முறையைக் கூறுதலை

நெறியாகக் கொண்டுள்ளன. இவ்விளக்க நெறியினைத் தமிழ் மரபு நெறி எனலாம். ஆனால் தொன்னூல் விளக்கமோ பிறப்பு முறைக்குப் பின்னரே அறிமுகத்தைத் தொடர்கிறது. எனவே வீரமாமுனிவர் தம் மேலை நாட்டு முறையை ஒட்டி இலக்கணம் கூறுகிறார் என்று கூறலாம். கொடுந்தமிழ், செந்தமிழ், கிலாவிஸ் எனும் அவரது பிற இலக்கண நூல்களிலும் தமிழ் மரபில் இடம்பெற்றிராத புதிய நெறிகள் சிலவற்றைக் (இயல் பகுப்பு, பெயரிடுதல், கருத்துக்களுக்கு எண்ணிடுதல், முன்னும் பின்னுமுள்ள கருத்துக்களை அவற்றுக்கான எண் வழியே ஒத்துப் பார்க்கச் சொல்லுதல் போல்வன) காண முடிகிறது.

தொன்னூல் விளக்கத்தில் தற்கால அறிவியலார்ந்த நெறிகள் சில காணப்படினும், செய்திகளை வகைப்படுத்தித் தொகுத்துத் தருவதில் சீர்மை இடம் பெறவில்லை. உடம்படுமெய் குறித்த செய்தியை எழுத்தின் வகுப்பில் இணைத்துக் கூறுதல்; சுட்டு, வினா, திசை, எண்ணுப் பெயர்களின் புணர்ச்சி விதிகளைச் சொல்லிலக்கணத்தில் அடக்கிக் கூறுதல் போல்வன சீர்மை இன்மைக்குச் சில சான்றுகளாகும்.

தொன்னூல் விளக்க உரையில் நூலாசிரியர் நன்னூல் நூற்பாக்களை மேற்கோள் காட்டித் தம் கருத்துக்களை விவரிக்கிறார்.

### சுவாமிநாதம்

சுவாமிநாதம் ஒரு வழிநூலே என்பதும் முந்தைய நூல்கள் செய்திகளை விரிவாகக் கூற, இந்நூல் சுருக்கமாக விளக்குகிறது என்பதும் சிறப்புப் பாயிர அடிகளின் கருத்தாகும்.

> "செப்பெழுத்துச் சொற்பொருள்யாப் பலங்காரம் எனுமைந்
> தமிழ்தனிலக் கணவிரிவை ஒவ்வொருமூன் றியலாய்
> அடக்கிமொழி குவன்சுவாமி நாதமிந்நூற் பெயரே" (13)

சுருக்கி என்பதை ஆசிரியர் 'அடக்கி' என்ற சொல்லால் குறிப்பிடுதல் சிறப்பானது. இங்கு முன்னூல்கள் விரித்துரைத்த பொருள்கள் யாவும் விடுதலின்றி அடக்கி எனும் கருத்தும் வெளிப்படுகின்றது.

நேமிநாதம் எழுத்து, சொல் எனும் ஈரிலக்கணங்களை மட்டும் சுருக்கி உரைக்கும் நூலாகும். வீரசோழியம் ஐந்திலக்கணங்களையும் சுருக்கி உரைத்தாலும், வடமொழியின் தழுவல் அந்நூலில் மிகுதியாக இடம்பெற்றுளது. எனவே தமிழ் மரபைத் தழுவி ஐந்திலக்கணங் களையும் சுருக்கிக் கூறும் நூல் தேவை என்று கருதி, ஆசிரியர் சுவாமிநாதத்தை இயற்றினார் எனக் கொள்ளலாம்.

பெரும் பிரிவு ஏனைய நூல்களைப் போலவே அதிகாரம் என்ற பெயரை இந்நூலிலும் பெற்றுளது. ஆனால் உட்பிரிவுகள் யாவும் மரபு என்ற பெயரைப் பெற்றிருத்தல் இந்நூற்கே உரிய தனியியல்பாகும். மரபு என்னும் பெயரை உட்பிரிவுக்குச் சூட்டுதல் தொல்காப்பியத்திலும் நேமிநாதத்திலும் மேற்கொள்ளப்பட்ட நெறியே. எனினும் அந்நூல்களில் எல்லா உட்பிரிவுகளும் 'மரபு' என்று குறிப்பிடப்படவில்லை.

ஒவ்வோர் அதிகாரமும் மூன்று மரபுகளாகப் பகுத்துக் கூறுதல் இந்நூலில் மட்டுமே காணப்படும் விளக்க நெறியாகும். நன்னூலைப் போன்று திட்டம் அமைத்து இந்நூலும் இலக்கணம் விவரிக்கிறது. திட்டம் குறித்த நூற்பா வருமாறு:

> **"பெயர்எண் முறைபிறப்பு வடிவளவு முதனிலையே**
> **பின்னிலையே இடைநிலை போலியதாம் பத்துடனே**
> **முயல்பதமும் புணர்வுமுறப் பன்னிரண்டாய்"** *(14)*

"எழுத்ததிகாரத்தைப் பொறுத்த மட்டில் எழுத்ததிகார மரபு, பதமரபு, புணர்ச்சி மரபு என்ற சிறப்புப் பெயர் பெற்றுள்ளன. மூலம் மட்டும் உள்ள கையெழுத்துப் பிரதியிலும் இந்தப் பிரிவுகள் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது" (செ.வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, பக்கம் 34-35).

எழுத்ததிகாரத்தின் முதலாம் இயலான எழுத்தாக்கமரபு நன்னூல், இலக்கண விளக்கம் ஆகியவற்றின் எழுத்தியல் செய்திகளைக் கொண்டுளது. பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனும் ஆறனையும் பதமரபு கூறுகிறது. புணர்ச்சி மரபு புணர்ச்சி விதிகளை விவரிக்கிறது; இவ்வியலின் இறுதியில் வடமொழியாக்கம் இடம் பெற்றுளது. வடமொழியாக்கம் நன்னூலில் பதவியலின் இறுதியில் கூறப்படுகிறது என்பது குறிக்கத்தக்கது.

## முத்துவீரியம்

"முத்துவீரியம் எழுத்ததிகாரப் பாகுபாடு ஒன்றையும் குறிப்பிடவில்லை. ஆனால், பதிப்பாசிரியர்கள் எழுத்தியல், மொழியியல், புணரியல் என்ற மூன்று பிரிவாக வகுத்துக் காட்டியுள்ளார்கள்" (செ.வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, பக்கம் 34).

எழுத்துக்களின் வகை, பிறப்பு, அவை சொல்லில் வரும் இடங்கள், மாத்திரை, எழுத்துச்சாரியைகள், போலி என்பன

எழுத்தியலில் இடம் பெற்றுள்ளன. மொழி முதனிலை, இடைநிலை, இறுதிநிலை என்னும் வரிசை முத்துவீரியத்தில் காணப்படுகிறது. இவ்வரிசை புதியது. ஏனைய நூல்களில் முதனிலை, இறுதிநிலை, இடைநிலை என்னும் வரிசையே இடம் பெற்றுளது.

## சொல்லிலக்கணம்

### தொல்காப்பியம்

தொல்காப்பியம் சொல்லிலக்கணத்தையும் ஏனைய எழுத்து, பொருள் இலக்கணங்களைப் போலவே ஒன்பது இயல்களில் விவரிக்கிறது. கிளவியாக்கம் என்னும் முதல் இயல் தொடராக்கமாகக் காணப்படுகிறது. இங்குத் தொல்காப்பியம் தொடர் என்னும் பொருளில் கிளவி என்ற சொல்லைக் கையாள்கிறது. எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே உள்ள இயைபு, சில பெயர்த் தொடர்களின் அமைப்பு, தொடர்களை ஆளுங்கால் பின்பற்றப்பட வேண்டிய மொழி மரபு போன்ற செய்திகள் இவ்வியலில் விவரிக்கப்படுகின்றன.

கிளவியாக்கத்தைத் தொடர்ந்து வரும் மூன்று இயல்கள் வேற்றுமைகள் குறித்தவை. வேற்றுமைகளின் புற அமைப்பாகிய உருபுகளும் அக அமைப்பாகிய பொருள்களும் வேற்றுமை இயலில் இடம் பெற்றுள்ளன. வேற்றுமைகளுக்குத் தொல்காப்பியம் எண், உருபு ஆகியவற்றின் அடிப்படையில் இரண்டாகுவது, ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி என்றாற் போன்று பெயரிட்டுள்ளது. ஓர் வேற்றுமைக்கு ஓர் உருபு என்ற திட்டம் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

வேற்றுமை மயங்கியல் வேற்றுமைத் தொடர்களில் அமையத் தகுந்த இருண்மை நிலையினை விவரிக்கிறது. ஒன்றற்கு மேற்பட்ட வேற்றுமைகளுக்குப் பொதுவாகக் குறிப்பிட்ட சில பொருள்கள் வருதலை வேற்றுமை மயக்கம் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இவ்வியல் வேற்றுமையியலுக்குப் புறம்பானதாகவும் மொழி வழக்கை அமைதிப்படுத்துவதாகவும் காணப்படுகிறது.

விளிவேற்றுமை புறநிலையிலுள்ள ஒரு சொல் மட்டுமே அகநிலையில் முற்றுத் தொடராக அமைவதாகும். இவ்வேற்றுமையையும் தொல்காப்பியம் ஏனைய வேற்றுமைகளின் இயல்பினை விவரிக்கிற வேற்றுமை இயலில் விவரித்திருக்கலாம். எனினும் அவ்வாறன்றித் தனி ஓர் இயலை இதற்காக அமைத்து விவரிக்கிறது. 'வேற்றுமை தாமே ஏழென மொழிப' என்னும் பிறர் கொள்கையை மறுத்து, 'விளிகொள் வதன்கண் விளியொ டெட்டே'

என்னும் தமது கொள்கையை வலியுறுத்தும் நோக்கில் தொல்காப்பியம் விளிக்குத் தனி இயலை அமைத்திருக்கிறது எனக் கருத இடமுளது.

வேற்றுமை பெயர்ச் சொல்லின் இலக்கணத்திற்கு உட்பட்டது. எனினும், வேற்றுமை அமைப்பு பெயர் போன்று தனிச் சொல்லாக வருதலின்றி, தொடராக இருப்பதனால் தொல்காப்பியம் வேற்றுமைகளைத் தனி இயல்களில் விவரிக்கிறது.

தொடர் இலக்கணத்தை முதலிலும் சொல் இலக்கணத்தை இரண்டாவதுமாகத் தொல்காப்பியம் விவரிக்கும் நெறியைச் சொல்லதிகாரத்தில் மேற்கொண்டுள்ளது. எனவே வேற்றுமை இலக்கணம் கூறிய பின்னர்ப் பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களையும் தனித்தனி இயல்களில் இந்நூல் விவரிக்கிறது. இறுதியான எச்சவியலில் முந்தைய எட்டு இயல்களிலும் விவரிக்கப்படாது எஞ்சிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. செய்யுள் ஈட்டச் சொற்கள், செய்யுட் பொருளை அறிதற்கான சில உத்திகள் (பொருள்கோள்கள்) என்னும் செய்யுள் அமைப்புச் செய்திகள், தொகை மொழித் தொடர்கள் போல்வன இவ்வியற் செய்திகளாகும்.

## வீரசோழியம்

வீரசோழியம் சொல்லிலக்கணத்திற்கு முதன்மை தருகிறது. இந்நூலில் எழுத்து, பொருள், யாப்பு, அலங்காரம் என்னும் நான்கு இலக்கணங்களும் ஒவ்வோர் இயலில் மட்டுமே விவரிக்கப்படுகின்றன. ஆனால் சொல்லிலக்கணம் வேற்றுமைப் படலம், உபகாரகப் படலம், தொகைப் படலம், தத்திதப் படலம், தாதுப் படலம், கிரியா பதப் படலம் என்னும் ஆறு இயல்களை உரிமையாக்கியுள்ளது.

வேற்றுமைப் படலமும் உபகாரகப் படலமும் வேற்றுமைக் கருத்துக்களை விவரிக்கின்றன. இவற்றுள் முதல் இயல் தொல்காப்பியத்தின் வேற்றுமை இயலுக்கு நிகரானது. இரண்டாவது இயல் தமிழ் வேற்றுமைச் சொற்களுக்கு இணையான வடசொற்களைத் தருவதோடு, வேற்றுமை மயக்கச் செய்திகள் சிலவற்றையும் குறிப்பிடுகிறது.

வேற்றுமைத் தொகை முதலான தொகை மொழித் தொடர் அமைப்புக்களைத் தொகைப்படலம் விவரிக்கிறது. இத்தொடர்கள் யாவும் வடமொழிப் பெயர்களால் கூறப்படுகின்றன. எனினும், தமிழ்த் தொகைகள் யாவும் ஒரு நூற்பாவில் சுட்டப்படுதலையும் காண முடிகிறது.

தத்திதப் படலம், தாதுப்படலம், கிரியா படலம் மூன்றும் சொல்லமைப்பு பற்றியவை. இவற்றுள் முதலாவது குறிப்பு வினையாலணையும் பெயர்கள், பண்புப் பெயர்கள் என்னும் ஆக்கப் பெயர்களின் விகுதிகளை விவரிக்கிறது. தாதுப்படலமும் கிரியாபதப் படலமும் வினைச் சொற்கள் பற்றியவை. இவற்றில் முறையே வினைப் பகுதிகளும் பகுதி ஒழிந்த பாகமும் (கால இடைநிலையும் விகுதியும்) கூறப்படுகின்றன. இவை தவிர, வடமொழி ஒலிகளைத் தமிழில் எழுதும் வடமொழியாக்கச் செய்திகளையும் வீரசோழியம் விரிவாகத் தத்திதப் படலத்தில் விளக்குகிறது.

## நேமிநாதம்

நேமிநாதம் எழுத்திலக்கணத்தை வீரசோழியத்தைப் போன்று ஒரே இயலில் விவரிக்கிறது. எனினும் சொல்லிலக்கணத்திற்கு இந்நூல் ஒன்பது இயல்களை அமைத்துள்ளது. மொழியாக்க மரபு, வேற்றுமை மரபு, உருபு மயங்கியல், விளிமரபு, பெயர் மரபு, வினை மரபு, இடைச்சொல் மரபு, உரிச்சொல் மரபு, எச்ச மரபு என்னும் ஒன்பதும் தொல்காப்பியத்தின் கிளவியாக்கம் முதலான ஒன்பதற்கும் நிகரானவை.

நேமிநாதம் தொல்காப்பிய இலக்கணத்தைச் சுருக்கமாகவும் எளிதாகவும் விளக்கும் பொருட்டு எழுதப்பட்ட நூலாகத் தோன்றுகிறது.

> **தொல்காப் பியக்கடலிற் சொற்றீபச் சுற்றளக்கப்**
> **பல்காற்கொண் டோடும் படகென்ப - பல்கோட்டுக்**
> **கோமிகா மற்புலனை வெல்லும் குணவீர**
> **நேமிநா தத்தி னெறி**

என்னும் சிறப்புப்பாயிரப் பாடலும் இக்கருத்தையே வெளிப்படுத்துகிறது. மேலும், இந்நூலின் மறுபெயரான 'சின்னூல்' என்பதும் இதனை ஒரு சுருக்க இலக்கண நூல் என்றே காட்டுகிறது.

நேமிநாத இயல்களின் தொகையும் பெயரும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தைப் படி எடுத்தது போன்று காணப்படுகின்றன. "தொல்காப்பியம் கிளவி என்பதை நேமிநாதம் மொழி என்று குறிப்பிடுகிறது. இரண்டும் சொல் எனும் பொருளை உணர்த்துவன என்று குணவீர பண்டிதர் கருதுகின்றார். அவரது கருத்துப்படி, மொழியாக்க மரபு தமிழ்த் தொடர்களின் அமைப்பையும் பொருளமைதியினையும் விவரித்த போதிலும், அவ்விலக்கணம் யாவும் சொல்லிலக்கணத்தின் கூறுகளே என்பதாகும். ஆனால்

தொல்காப்பியமோ எழுத்து, சொல், தொடர், வடிவம் போன்ற பல பொருட்களை உணர்த்தும் சொல்லாகக் கிளவி என்பதைப் பயன்படுத்துகின்றது. எனவே கிளவியாக்கம் என்பதில் தொல்காப்பியம் தொடராக்கம் என்ற கருத்தில் கிளவி எனும் சொல்லைப் பயன்படுத்துகின்றது எனலாம். நேமிநாதம் உருபுமயங்கியல் தவிர்த்த எட்டு இயல்களையும் மரபு என்று குறிப்பிடுகின்றது. மரபு வழி வரும் பழைமையான தமிழிலக்கணத்தைத் தொகுத்துச் சுருக்கித் தரும் நூல் நேமிநாதமாகும். இந்நூல் தோன்றியதன் நோக்கமும் இதுவே என்பது ஆசிரியர் கருத்து" (பெ. சுயம்பு, இலக்கண நூற் களஞ்சியம், பக்கம் 79-80).

சொல்லின் பொது இலக்கணத்தைத் தொகுத்துக் கூறும் முறை நேமிநாதத்திலேயே முதலில் காணப்படுகிறது. இதனைச் சொல்லதிகாரத்தின் இரண்டாவது நூற்பாவான,

> **ஏற்ற திணையிரண்டும் பாலைந்தும் ஏழ்வழுவும்**
> **வேற்றுமை எட்டும் தொகையாறும் – மாற்றரிய**
> **மூன்றிடமும் காலங்கள் மூன்றும் இரண்டிடத்தாற்**
> **தோன்ற உரைப்பதாஞ் சொல்**

என்னும் வெண்பா கூறுகிறது. இத்தகு முறையினை நேமிநாதம் இளம்பூரணர் உரையிலிருந்து பெற்றிருக்கலாம்.

> *மற்று, அச்சொல் எனைத்து வகையான் உணர்த்தினானோ வெனின், எட்டு வகைப்பட்ட இலக்கணத்தான் உணர்த்தி னான் என்க. அவையாவன, இரண்டு திணை வகுத்து, அத்திணைக்கண் ஐந்து பால் வகுத்து, ஏழு வழு வகுத்து, எட்டு வேற்றுமை வகுத்து, அறுவகை ஒட்டு வகுத்து, மூன்று இடம் வகுத்து, மூன்று காலம் வகுத்து, இரண்டு இடத்தான் ஆராய்தல் (தொல்.சொல். 1)*

### நன்னூல்

நன்னூல் எழுத்திலக்கணத்தைப் போன்று சொல்லிலக்கணத் தையும் ஐந்து இயல்களில் விவரிக்கிறது. சொல்லின் பொது இலக்கணம், பெயர்ச்சொல் இலக்கணம், வேற்றுமை இலக்கணம் என்பன பெயரியலில் அடக்கப் பெற்றுள்ளன. வேற்றுமையைச் சொல்லிலக்கணமாகவும் பெயர்ச்சொல்லின் கூறாகவும் இந்நூல் கருதுதலை இங்கு அறிய முடிகிறது. வினையியல், இடையியல், உரியியல் மூன்றும் முறையே வினைச் சொல், இடைச்சொல், உரிச்சொல் குறித்த செய்திகளை விவரிக்கின்றன. பொதுவியல்

தொல்காப்பியத்தின் கிளவியாக்கம், எச்சவியற் செய்திகளைத் தொகுத்துக் கூறுகிறது.

நன்னூலில் சொல்லதிகார முகப்பிலும் நேமிநாதத்தில் உள்ளதைப் போன்ற சொல்லின் பொது இலக்கணம் காணப்படுகிறது.

ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா
இருதிணை ஐம்பாற் பொருளையுந் தன்னையும்
மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே (நன்னூல், 259)

நன்னூலின் பொது இலக்கணம் நேமிநாதத்திலிருந்து சிறிது வேறுபடுகிறது. எனினும், பொது இலக்கணத்தை முதலில் கூறுதல் என்னும் முறையில் நேமிநாதமே நன்னூலுக்கு வழிகாட்டி எனலாம்.

## இலக்கண விளக்கம்

பிற்கால நூல்களுள் இலக்கண விளக்கம் நன்னூலைப் பின்பற்றிச் சொல்லிலக்கணத்தை விவரிக்கிறது.

## தொன்னூல் விளக்கம்

தொன்னூல் விளக்கமும் நன்னூலைப் போன்று ஐந்து இயல்களாகப் பகுத்துச் சொல்லிலக்கணத்தை விவரிக்கிறது. எனினும், இயல்களின் முறை வைப்பிலும் செய்திகளை வரிசைப்படுத்துவதிலும் இந்நூல் வேறுபடுகிறது. சொற்பொதுவியல், பெயர் வினைச் சொல்லியல், இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல் என்பன தொன்னூல் விளக்கத்தின் இயல்களாகும்.

இயற்சொல், திரிசொல், மூவகை மொழிகள், பகாப்பதம், பகுபதம், ஆகுபெயர், இருதிணை, மூவிடப் பெயர்கள், சாரியைகள் ஆகியன சொற் பொதுவியலில் இடம் பெற்றுள்ளன. பகாப்பதம், பகுபதம், சாரியைகளைச் சொல்லிலக்கணத்தின் கூறுகளாகக் கொள்வது இந்நூலின் சிறப்புக்களுள் ஒன்றாகும்.

பெயர் என்னும் இயல் பெயர் வேற்றுமையியல், பகுபதப் பெயரியல், தொகை நிலைத் தொடர் மொழிப் பெயரியல், சுட்டு வினா எனப் பகுத்து விளக்கப்படுகிறது. முதற் பகுதியில் பெயரின் பொது இலக்கணமும் வேற்றுமைகளும் விளக்கப்படுகின்றன. இரண்டாம் பகுதியில் இளைஞர், அறிஞர், மொழிநர் போன்ற ஆக்கப் பெயர்கள் கூறப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து, வேற்றுமைத் தொகை முதலான தொகைச் சொற்களும் சுட்டு வினாச் சொற்களும் விவரிக்கப்படுகின்றன. ஏனைய இயல்கள் நன்னூலை ஒத்துள்ளன.

## சுவாமிநாதமும் முத்துவீரியமும்

சுவாமிநாதமும் முத்துவீரியமும் இயல் பகுப்பில் தனித்துக் காணப்படுகின்றன. இவை சொல்லிலக்கணத்தை மூன்றாகப் பகுத்து விவரிக்கின்றன.

சுவாமிநாதத்தில் பெயர் மரபு, வினை மரபு, எச்ச மரபு என்னும் மூன்று இயல்கள் உள்ளன. பெயர் இலக்கணம் பெயர் மரபிலும் வினை இலக்கணம் வினை மரபிலும் விவரிக்கப்படுகின்றன. இடைச்சொல், உரிச்சொல், தொகை மொழித் தொடர்கள், பொருள்கோள் போல்வன எச்ச மரபில் இடம் பெற்றுள்ளன. இடைச்சொல்லையும் உரிச்சொல்லையும் இந்நூல் பெயர், வினை இரண்டிற்கும் இணையாகக் கருத வில்லை என்பது இவை இரண்டிற்கும் தனித்தனி இயல் அமைக்காததும், இவற்றை எச்ச இலக்கணமாகக் கருதுவதும் வெளிப்படுத்துகின்றன.

முத்துவீரியம் பெயரியல், வினையியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களில் சொல்லிலக்கணத்தை அடக்கியுள்ளது. செய்திகளை அடக்கிக் கூறும் முறையில் இந்நூல் சுவாமிநாதத்தைத் தழுவுகிறது.

******

# 2. இலக்கணக் கருத்துக்கள்

## எழுத்து

தொல்காப்பியம் எழுத்துக்களை ஒலி என்னும் அளவில் விரிவாக விவரிக்கிறது. அவற்றின் வரிவடிவம் கேட்போர் உணருமாறு தெள்ளிதாகப் பேச்சளவில் உரைத்தற்கு அரிது. எனவே எழுத்துக்களின் வரிவடிவங்கள் யாவற்றையும் இந்நூல் விரித்துரைக்க வில்லை. எனினும் வரிவடிவங்கள் பற்றிய சில குறிப்புக்களையும் இந்நூல் தருகிறது.

தொல்காப்பியம் 'எழுத்து' என்னும் சொல்லுக்கான வரைவிலக்கணத்தைச் சுட்டவில்லை. உரையாசிரியர் நச்சினார்க்கினியர் (தொல்.எழு. 1),

> 'ஓசையுணர்வார்க்குக் கருவியாகிய வரிவடிவும் சிறப்பில்லா எழுத்தாகக் கொள்ளப்படும்'

என்று கூறி, தொல்காப்பியம் ஒலியையும் வரிவடிவையும் எழுத்து எனக் கருதுவதாகப் புலப்படுத்துகிறார். சுப்பிரமணிய சாஸ்திரியார் (நூன்மரபு, 1),

> 'இச்சூத்திரத்துள் 'எழுத்து' என்பது வரிவடிவத்தினையும் குறிக்கின்றதெனச் சிலர் கருதுகின்றனர். ஒலியெழுத்தினையே குறிக்கின்றதென்பது பின்வரும் காரணங்களான் விளங்கும்'

எனச் சில நூற்பாக்களிலுள்ள சொற்களைச் சுட்டிக்காட்டிக் கூறுகிறார். தெ.பொ. மீனாட்சி சுந்தரன் (தமிழ் மொழி வரலாறு, பக்கம் 75) தொல்காப்பியர் 'எழுத்து' என்பது 'ஒலி' என்ற பொருளிலேயே வழங்கியிருக்கவேண்டும்; எனினும் இச்சொல்லை 'வரிவடிவம்' என்ற பொருளில் அவர் பயன்படுத்தும் இடங்களும் உண்டு என்று கூறுகிறார்.

வீரசோழியமும் நேமிநாதமும் தொல்காப்பியத்தைப் போன்று எழுத்துக்களின் ஒலிவடிவச் செய்திகளையே விவரிக்கின்றன; இவை எழுத்தின் வரைவிலக்கணத்தைக் கூறவில்லை.

எழுத்து என்பதன் வரைவிலக்கணத்தை முதன்முதலாக வெளிப்படையாக விவரிக்கிற நூல் நன்னூலே. எழுத்தியலின் தொடக்கத்தில்,

மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே (நன்னூல், 57)

என்று விவரிக்கிறது.

தொல்காப்பியம் முதலிய முந்து நூல்கள் குறிப்பாகப் புலப்படுத்திய விளக்கத்தினை நன்னூல் வெளிப்படையாகக் கூறுகிறது. இவ்விளக்கம் ஒலிவடிவினைக் கருதி அமைத்தாகும்.

மொழிக்கு அடிப்படைக் காரணமாகிற ஒலியணுக்களின் திரள் எழுத்து என்னும் நன்னூலின் விளக்கம் மொழியியலார் ஒலியனுக்குத் தருகிற விளக்கத்தை ஓரளவு ஒத்துக் காணப்படுகிறது. பவணந்தியின் 'அணுத்திரள் ஒலி'யை மொழியியலார் (H.A. Gleason, An Introduction to Descriptive Linguistics, page 258) ஒலியன் எனக் கூறுகின்றார். மேலும், இங்கு 'அணுத்திரள்' என்ற சொல்லாட்சி பவணந்தி ஒரு சமணர் என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

ஒலி அணுத்திரளால் எழுத்து அமைதலை,

ஆற்ற லுடையுயிர் முயற்சியி னணுவியைந்
தேற்றன வொலியாய்த் தோன்றுதல் பிறப்பே

என்று அவிநயம் குறிப்பிடுகிறது. எனவே எழுத்தின் வரைவிலக்கணத்தை நன்னூல் அவிநயத்திலிருந்து பெற்றுள்ளது எனலாம்.

இலக்கண விளக்கம் நன்னூல் நூற்பாவில் சிறிது மாற்றம் செய்து விளக்குகிறது.

மொழிக்கா ரணமா நாதகா ரியவொலி
யெழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே
(இலக்கண விளக்கம், 3)

இம்மாற்றம் நன்னூலின் சமயக் கொள்கைக்கு எதிராகத் தமது சைவக் கொள்கையை வைத்தியநாத தேசிகர் பறைசாற்றுவதாகக் காணப்படுகிறது. நாதமே அனைத்தின் தோற்றத்திற்கும் காரணம் என்கிறது சைவம்.

இலக்கண விளக்கத்தின் 'நாதகாரிய வொலி எழுத்து' என்னும் விளக்கம் எழுத்தின் ஒலி வடிவம் பற்றியது. ஆனால் இதற்கு மாறாகச் செய்யுளியலில்,

எழுதப் படுதலின் எழுத்தே (இலக்கண விளக்கம், 711)

என்னும் நூற்பாவும் இடம் பெற்றுளது. இந்நூற்பா வரிவடிவத்தைக் கருத்தில் கொள்கிறது. எனவே இலக்கண விளக்கம் எழுத்து என்னும் சொல்லை ஒலி வடிவத்தையும் வரிவடிவத்தையும் குறிப்பதற்குப் பயன்படுத்துகிறது எனலாம்.

தொன்னூல் விளக்கம் நன்னூலைப் பெரிதும் போற்றிப் புகழ்கிற வீரமாமுனிவரின் நூல். எனினும் இந்நூலில் எழுத்தின் வரைவிலக்கணம் இடம் பெறவில்லை. இதில் எழுத்துக் குறித்த செய்திகள் ஒலி என்னும் அளவிலேயே விவரிக்கப்படுகின்றன. மேலும், எழுத்து என்பதற்கு இணையான சொல்லாக முனிவர் தொன்னூல் விளக்கத்தில் letter என்னும் ஆங்கிலச்சொல்லையும் கொடுந்தமிழ், செந்தமிழ், கிலாவிஸ் ஆகியவற்றில் LITERARUM என்னும் இலத்தீன் சொல்லையும் பயன்படுத்துகிறார். இச்சொற்கள் ஒலிவடிவத்தை விடவும் வரிவடிவத்திற்கே இவர் முன்னுரிமை தருதலைப் புலப்படுத்துகின்றன.

சுவாமிகவிராசரும் வைத்திய நாத தேசிகரைப் போன்று சைவ சமயத்தில் தீவிரப் பற்றுடையவர். எனவே இவர் தமது சுவாமிநாதத்தில் இலக்கண விளக்கத்தைப் போன்ற ஓர் விளக்கத்தை எழுத்துக்குத் தருகிறார்.

> . . . . . . . . . . . . . . . . . . அருளான்
> மொழிக்குக்கா ரணமாகி நாதகா ரியப்பட்
> டயீரொலியோர்ந் தெழுதில் எழுத் தாம் . . .

முத்துவீரியம் எழுத்திற்கு வரைவிலக்கணம் கூறவில்லை.

தமிழ் இலக்கண நூல்கள் யாவும் எழுத்துக்களின் ஒலி வடிவை மையமாகக் கருதி, அவற்றின் பிறப்பு, செயல்கள் ஆகியவற்றை விவரிக்கின்றன. எனினும் 'எழுதப்படுதலின் எழுத்தே' என்னும் வரிவடிவ விளக்கமே பெரும்பான்மை நூல்களில் முன்னே நிற்கிறது. தற்காலத்திலும் எழுத்து என்றால் எழுதப்படுகிற வரிவடிவமே உள்ளத்திலும் கண்ணுக்கு முன்னரும் தோன்றுகிறது.

நன்னூல், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியவற்றின் எழுத்து வரைவிலக்கணத்தில் சமயக் கொள்கையின் ஆதிக்கம் படர்ந்துள்ளது. இத்தகைய விளக்கம் சமயக் கொள்கைளும் இலக்கண நூல்கள் தோன்றுதற்குக் காரணமாகின்றன என்னும் உண்மையை வெளிப்படுத்துகிறது.

## முதலெழுத்தும் சார்பெழுத்தும்

தமிழ் இலக்கண நூல்கள் எழுத்துக்களை முதலெழுத்து, சார்பெழுத்து என வகைப்படுத்துகின்றன. இவ்வகைப்பாடு, இவற்றின் பெயர்கள் ஆகியவற்றின் தோற்றம் ஒரே சமயத்தில் நிகழ்ந்து விடவில்லை. வெவ்வேறு காலத்தைய கருத்து வளர்ச்சியால் இவை தோன்றியுள்ளன.

தொல்காப்பியம் தமிழில் இருவகை எழுத்துக்கள் உள்ளன என்பதை உணர்த்துகிறது. இந்நூல்,

*எழுத்தெனப் படுப*
*அகரமுதல் னகர விறுவாய்*
*முப்பஃ தென்ப*
*சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே* (தொல்.எழு. 1)

என்னும் நூற்பாவில் முப்பத்து மூன்று எழுத்துக்களுள் மூன்று சார்ந்து வருவன என்று கூறுகிறது. எனவே எஞ்சிய முப்பதும் தனித்து வருவன என்பது உணர்த்தப்படுகிறது.

தொல்காப்பியம் எழுத்துக்களை அவற்றின் வழக்காற்றலின் அடிப்படையில் தனித்து வருவன, சார்ந்து வருவன என இருவகைப்படுத்துகிறது; எனினும் இவ்விரு வகைக்கான பெயர்களைச் சுட்ட வில்லை. உரையாசிரியர்கள் சார்ந்து வருவனவற்றைச் சார்பெழுத்து எனக் குறிப்பிடுகின்றனர்.

சார்பெழுத்துக்களின் வரைவிலக்கணம் தொல்காப்பியத்தில் விளக்கமாக மற்றோரிடத்திலும் இடம் பெற்றுள்ளது.

*சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்*
*தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்* (தொல்.எழு. 19)

வீரசோழியத்தில் எழுத்துக்களின் இத்தகைய பகுப்பு இடம்பெற வில்லை.

நேமிநாதம் உயிர், மெய், ஆய்தம் என்பவற்றை 'முதல் வைப்பு' எனக் குறிப்பிடுகிறது.

*ஆவி அகரமுதல் ஆறிரண்டாம் ஆய்தமிடை*
*மேவுங் ககரமுதன் மெய்களாம் – மூவாறும்*
*கண்ணு முறைமையாற் காட்டியமுப் பத்தொன்று*
*நண்ணுமுதல் வைப்பாகு நன்கு* (நேமிநாதம், 1)

நேமிநாத உரையாசிரியர் உயிர், மெய், ஆய்தம் ஆகியவற்றை 'முதல் வைப்பாகிய முதல் எழுத்துக்கள்' என்றும் உயிர்மெய், வல்லொற்று மெல்லொற்று வர்க்கம், ஒற்றளபெடை, உயிரளபெடை போன்றவற்றை 'இரண்டாம் வைப்பாகிய சார்பெழுத்துக்கள்' என்றும் சுட்டுகிறார்.

உயிர், மெய், ஆய்தம் என்னும் மூவகை எழுத்துக்களே தமிழ் நெடுங்கணக்கில் வரிவடிவமும் முதன்மையும் பெற்று விளங்குதலால், இவற்றை நேமிநாதம் முதல் வைப்பு எனக் கூறுகிறது.

'முதல்', 'சார்பெழுத்து' என்னும் பெயர்கள் இந்நாளில் கிடைக்கப்பெற்றுள்ள நூல்களுள் நன்னூலிலேயே முதன் முதலில் காணப்படுகிறது.

*– – – முதல்சார் பெனவிரு வகைத்தே* (நன்னூல், 57)

*உயிரு முடம்புமா முப்பது முதலே* (நன்னூல், 58)

*உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள*
*பஃகிய இஉ ஐஔ மஃகான்*
*தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்* (நன்னூல், 59)

பேரகத்தியம் என்ற நூலில் முதல், சார்பு என்னும் பெயராட்சியும் பகுப்பும் காணப்படுதலை ஆ. சிவலிங்கனார் (சார்பு எழுத்துக்கள், தொல்காப்பிய மொழியியல், பக்கம். 95),

*'முதல் உயிர்மெய் ஆய்தம் முப்பான் ஒன்றே'* (அகத். 7)

*'உயிர்மெய் அளபெடை*
*இரண்டும் ஆய்தம் அறுகுறுக்கம் சார்பாம்"* (அகத். 38)

என்னும் நூற்பாக்களை எடுத்துக்காட்டிச் சுட்டுகிறார். பேரகத்தியம் நன்னூலுக்கு முந்தையது எனக் கருதப்படுகிறது. எனவே முதல், சார்பு எனும் பெயராட்சியும் பகுப்பும் தமக்கு முந்தைய நூல்களைப் பின்பற்றி நன்னூலில் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனலாம்.

நன்னூலுக்குப் பின்னர்த் தோன்றிய இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், முத்துவீரியம் ஆகியவற்றில் நன்னூலின் பெயராட்சியும் பகுப்பும் இடம்பெற்றுள்ளன.

## ஐ, ஔ

தொல்காப்பியம் நூன்மரபில் (4),

**ஆ ஈ ஊ**
**ஏ ஐ**
**ஓ ஔ வென்னும் அப்பா லேழும்**
**ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப**

என்று ஐ, ஔ இரண்டையும் தனி எழுத்துக்களாகக் கூறுகிறது. ஆனால் இதற்கு மாறாக மொழிமரபில் சில நூற்பாக்கள் (21-23) இடம் பெற்றுள்ளன.

**அகர இகரம் ஐகார மாகும்.**
**அகர உகரம் ஔகார மாகும்.**
**அகரத் திம்பர் யகரப் புள்ளியும்**
**ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்**

என்னும் நூற்பாக்கள் ஐகாரமும் ஔகாரமும் கூட்டெழுத்துக்களாக அமைதலைத் தெரிவிக்கின்றன.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் ஐகாரமும் ஔகாரமும் கூட்டெழுத்துக்களாக எழுதப்படுதலைப் 'போலி எழுத்து' எனக் குறிப்பிட்டு, அவ்வாறு எழுதுதலைக் கொள்ளக் கூடாது என எச்சரிக்கின்றனர். இளம்பூரணர் விளக்கம் வருமாறு:

இது போலி எழுத்தாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அகர இகரம் - அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல, ஐகாரம் ஆகும் - ஐகாரம் போல் ஆகும்.

எ-டு: ஐயர், அஇயர் எனவரும். அது கொள்ளற்க
(இளம்பூரணர், தொல். எழு. 55)

இ-ள்: அகரத்து இம்பர் யகரப் புள்ளியும் - அகரத்தின் பின்னர் இகரமே யன்றி யகரமாகிய புள்ளியும், ஐ என் நெடுஞ்சினை - ஐயெனப்பட்ட நெட்டெழுத்தாம், மெய்பெறத் தோன்றும் - அவை வடிவு பெறத் தோன்றும்.

மெய்பெறத் தோன்றும் என்றதனான் (அகரத்தின் பின்னர் உகரமே யன்றி) வகரப் புள்ளியும் ஔகாரம்

போல வரும் எனக் கொள்க என்றவாறு. ஔவை - அவ்வை எனக் கண்டு கொள்க.

(இளம்பூரணர், தொல்.எழு. 56)

நச்சினார்க்கினியர் பின்வருமாறு கூறுகிறார்:

இது சிலவெழுத்துக்கள் கூடிச் சில வெழுத்துக்கள் போல இசைக்கும் என எழுத்துப் போலி கூறுகின்றது.

இ-ள்: அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல ஐகாரம் போல இசைக்கும். அது கொள்ளற்க; எ-று. போல என்றது தொக்கது.

எ-டு. ஐவனம், அஇவனம் என வரும். ஆகும் என்றதனான் இஃது இலக்கணம் அன்றாயிற்று.

(நச்சினார்க்கினியர், தொல்.எழு. 54)

இ-ள்: அகரமும் உகரமும் கூட்டிச் சொல்ல ஔகாரம் போல இசைக்கும்; அது கொள்ளற்க; எ-று, போல என்றது தொக்கது.

எ-டு. ஔவை, அஉவை என வரும்.

(நச்சினார்க்கினியர், தொல்.எழு. 55)

இ-ள்: அகரத்தின் பின் இகரமே யன்றி யகரமாகிய புள்ளி வந்தாலும், ஐயெனப்பட்ட நெட்டெழுத்தின் வடிவு மெய் பெறத்தோன்றும்; எ-று.

எ-டு. ஐவனம் அய்வனம் என வரும். மெய் பெற என்றதனான் அகரத்தின் பின்னர் உகரமே யன்றி வகரப் புள்ளியும் ஔகாரம் போல வரும் என்று கொள்க. ஔவை - அவ்வை என வரும்.

(நச்சினார்க்கினியர், தொல்.எழு. 56)

உரையாசிரியர்கள் இருவரும் இவ்வாறு எழுதுதலைப் போலி எழுத்து என்று கூறுதலைப் பிரயோக விவேக ஆசிரியர் சுப்பிரமணிய தீட்சிதர் மறுத்து, ஐ,ஔ இரண்டையும் சந்தியக்கரம் என்கிறார்.

இனிச் சந்தியக்கரமாவது - 'அகர விகரமே கார மாகும்'. அகர வுகரமோ காரமாகும். 'இகார வுகார மென்னு மிவற்றோ - டகாரம் ஐஔ வாகலு முரித்தே'. இவ்வுரைச் சூத்திரங்களால் ஈரெழுத்தாகிய சந்தியக்கரமென்றும் ஓரெழுத்தாகிய ஏகாக்கரமென்று

> மறிக. அம்முறைமை பற்றித் தொல்காப்பியரும் "அகர விகர மைகார மாகும்" "அகர வுகர மௌகார மாகும்". "அகரத் திம்பர் யகரப் புள்ளியு - மையெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்" எனச் சந்தியக்கரமாக நேரே கூறினார். அவ்வாறு கொள்ளாது உரைகாரர் "ஐயொத்திசைக்கும்" ஔவோ ரன்ன" என நன்னூலார் மதம் பற்றி "ஐகாரமாகும்" 'ஔகாரமாகும்". "ஐயெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்" என்புழி ஐகாரம் போலவாகும் ஔகாரம் போலவாகும் ஐயெனெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் என விரித்து, விகாரமாக்கி, நலிந்து பொருள் கொண்டு, போலியெழுத்தென்றிடர்ப்படுவர். . . . இனி நச்சினார்க்கினியார் எழுத்ததிகாரத்துள் போலி யெழுத்துக் கொள்ளற்க வென்பர். கொள்ளா வெழுத்திற்கு இலக்கணங்கூறின், அந்நூற்கு நின்று பயனின்மை யென்னுங் குற்றந் தங்குமென்க.
>
> (பிரயோக விவேக உரை, 5)

> சுப்பிரமணிய சாஸ்திரியார் (தொல். எழு. 55), வித்துவான் சுன்னாகம் கணேசய்யர், 'கொள்ளற்க' என்றது பொருந்தாது; இது அக்காலத்துக் கொள்ளப்பட்டு வந்தமையின் எனக் கூறியது நோக்கற்பாலது

என்று குறிப்பிட்டு, ஐ,ஔ இரண்டையும் கூட்டெழுத்துக்களாகவும் எழுதலாம் எனத் தொல்காப்பியம் கூறுவதாக விவரிக்கிறார்.

'மொழிமரபில் இன்னொரு சிறப்பும் காணப்படுகிறது. இன்றைய எழுத்துச் சீர்திருத்தக் கருத்தே அது. ஐகாரமும் ஔகாரமும் அஇ, அய், அஉ என்று கூட்டெழுத்துக்களாக அமைந்துள்ளன. எனவே அஇயர், அய்யர்; அஉவை என்றும் எழுதலாம் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

ஐ ஔ இரண்டனையும் கூட்டெழுத்துக்களே என்று கருதுகிற தொல்காப்பியம், பெரும்பான்மையோர் நெடுங்காலமாக ஏற்றுள்ள கொள்கையினைக் கைவிடத் தயங்குகிறது. அதனாலேயே அது இவ்விரு எழுத்துக்களையும் தனி நெடில்கள் என்று உயிர்களின் பட்டியலில் சேர்த்துக் கூறுகிறது" (பெ. சுயம்பு, இலக்கண நூற்களஞ்சியம், பக்கம் 10).

தொல்காப்பியம் முந்தை நூல்களின் வழி வருகிற மரபிற்கு முன்னுரிமை தரும் நூலாகும். எனவே இந்நூல் ஐ, ஔ இரண்டனையும் முந்தை நூல்களின் வழியைத் தழுவித் தனி, நெடில்கள் என நூன்மரபில் கூறுகிறது. ஆனால் இவ்வெழுத்துக்கள் இரண்டும் சொல்லில் தனி எழுத்தாக மட்டுமன்றி, சிலரால் கூட்டெழுத்தாகவும் எழுதப்பட்டமையால் சொல்லமைப்பை விவரிக்கிற மொழிமரபில் கூட்டெழுத்துக் கருத்தினைத் தெரிவிக்கிறது.

பிரயோக விவேகம் ஐ,ஔ இரண்டையும் சந்தியக்கரம் (கூட்டெழுத்து) என்று சுட்டுவதோடு அமையாது, இவை வடமொழியிலிருந்து தழுவப்பட்டவை எனக் கூறுகிறது. தெ.பொ. மீனாட்சி சுந்தரன் (தமிழ் மொழி வரலாறு, பக்கம் 56, 88) இவற்றை உயிர்த்தொடர்கள் (Diphthongs) என்று சுட்டி, இவை சமஸ்கிருத நெடுங்கணக்கைப் பின்பற்றித் தமிழில் வந்துள்ளன எனக் கூறுகிறார்.

ஐகாரமும் ஔகாரமும் தனி எழுத்தாக மட்டுமன்றி, கூட்டெழுத்தாகவும் இலங்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் இடம்பெற்றுள்ளன.

*மைந்தரும் (கம்பராமாயணம், கிட்கிந்தாகாண்டம், 660)*
*மயிந்தன் (கம்பராமாயணம், யுத்தக் காண்டம், 6186)*
*பௌவத்தின் (புறநானூறு, 6)*
*பவ்வத்து (புறநானூறு, 380)*
*தலை, தலய் (செங்கல்பட்டுக் கல்வெட்டு, 212)*

இடைக்கால மொழியில் ஐகாரமும் ஔகாரமும் தனி எழுத்தாக வருதலோடு, கூட்டெழுத்தாகவும் வருகின்றன. அஇ, அஉ என்னும் உயிர் மயக்கங்கள் அருகி விட்டமையால், அய், அவ் என்னும் கூட்டெழுத்துக்களே காணப்படுகின்றன.

வீரசோழியமும் நேமிநாதமும் ஐகாரம் அய் என்றும் ஔகாரம் அவ் என்றும் வழங்கப்பெற்றதைச் சுட்டுகின்றன.

*அகரம் வகரத்தி னோடியைந் தௌவாம் யகரத்தினோ*
*டகர மியைந்தைய தாகும் (வீரசோழியம், 3)*

*ஆதியுயிர் வவ்வியையின் ஔவாம் அஃதன்றி*
*நீதியினால் யவ்வியையின் ஐயாகும் (நேமிநாதம், 11)*

வீரசோழியம் மரபை வெறுமனே பின்பற்றாமல், மொழிவழக்கிற்கு இலக்கணம் கூறுதலை முதன்மையாகக் கொண்ட

நூலாகும். எனவே இந்நூல் உயிர்மயக்கத்தை விடுத்து, மெய்களை இரண்டாவதாகக் கொண்ட கூட்டெழுத்துக்களை மட்டும் விவரிக்கிறது. நேமிநாதம் வீரசோழியத்தை வழி மொழிகிறது.

நன்னூல் ஐகாரமும் ஔகாரமும் கூட்டெழுத்தாகவும் வழங்குதலைப் போலி எனக் குறிப்பிட்டு, அதனை எழுத்திலக்கணம் பன்னிரண்டனுள் ஒன்றாகக் கூறுகிறது.

**அம்மு னிகரம் யகர மென்றிவை**
**எய்தி னையொத் திசைக்கு மவ்வோ**
**டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன** ***(நன்னூல், 124)***

கூட்டெழுத்திற்கு நன்னூல் தரும் விளக்கம் தொல்காப்பியத்தையும் இளம்பூரணர் உரையையும் தழுவியதாகும். 'போலி' என்னும் பெயராட்சியை நன்னூல் இளம்பூரணர் உரையிலிருந்து பெற்றுளது. எனினும் இந்நூல் இளம்பூரணர் கூறுகிற 'கொள்ளற்க' என்னும் எச்சரிக்கையை வெளிப்படையாகச் சுட்டவில்லை; போலி என்னும் பெயர் வாயிலாகக் குறிப்பாக வெளிப்படுத்துகிறது.

நன்னூலின் விளக்கத்தில் தன்கால மொழிவழக்கை விடவும் மரபைப் பின்பற்றுதல் ஆதிக்கம் செலுத்துகிறது.

இலக்கண விளக்கம் (36) போலியின் ஆக்கமும் நீக்கமும் என்னும் தலைப்பில் தொல்காப்பியம், நன்னூல் இரண்டையும் பின்பற்றி ஐகாரத்தையும் ஔகாரத்தையும் விவரிக்கிறது. மேலும், 'குற்றமின்றி எழுத்திலக்கணத்தை அறிந்தோர் அவ்விகாரங்களைக் கொள்ளாது கடிந்து பாதுகாக்க' என்று இளம்பூரணரைப் பின்பற்றி உரைப்பதையும் இந்நூலில் காணலாம்.

வைத்தியநாத தேசிகரின் பெயரர் வைத்தியநாத தேசிகர் என்பார் இந்நூலின் பொதுப்பாயிரத்தில், தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றிய இலக்கண நூல்களும் உரைகளும் தொல்காப்பிய இலக்கணத்தினைப் பிறழ உணர்ந்து, தத்தம் கருத்திற்கு ஏற்ப விளக்கிச் செல்கின்றமையால் வைத்திய நாத தேசிகர் இருளை நீக்கும் விளக்குப் போன்று இலக்கண விளக்கத்தினை இயற்றி, அதற்கு உரையும் எழுதினார் எனக் கூறுகின்றார். ஆனால் ஐகாரத்தையும் ஔகாரத்தையும் கூட்டெழுத்துக்களாக எழுதுதலை இந்நூல் போலி எனக் குறிப்பிடுதலின் வழி, தொல்காப்பியத்தைப் பிறழ விளக்குகிறது.

தமிழர்கள் நெட்டுயிர்களுடன் சேர்த்துள்ள ஐகாரம், ஔகாரம் இரண்டும் உண்மையில் கூட்டு வடிவங்களே என்று வீரமாமுனிவர் (கொடுந்தமிழ், பக்கம் 5) குறிப்பிடுகிறார்.

சுவாமிநாதம் நன்னூல், இலக்கண விளக்கத்தைப் போன்று ஐகாரத்தையும் ஔகாரத்தையும் கூட்டெழுத்துக்களாக எழுதுதலைப் போலி எனச் சுட்டுகிறது.

முத்துவீரியம் (107, 108),

**அகரமு மிகரமு மைகார மாகும்**

**அகரமு முகரமு மௌகார மாகும்**

என்று உயிர் மயக்கங்களை மட்டுமே கூறுகிறது. இக்கூற்று மொழி வழக்கிற்கு அப்பாற் பட்டதாகும்.

### சார்பெழுத்துக்கள்

தொல்காப்பியத்தில் உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம் ஆய்தக்குறுக்கம் ஆகியன பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. எனினும் இந்நூல் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்னும் மூன்றை மட்டுமே 'சார்ந்து வரல் மரபின் மூன்று' எனச் சுட்டுகிறது.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் முறையே இகர, உகரங்களின் ஒலிக்குறுக்கங்கள் ஆகும் என்று குறிப்பிடுகின்றனர்.

> சந்தனக்கோல் குறுகின விடத்துப் பிரப்பங்கோல் ஆகாது; அது போல இகர உகரங்கள் குறுகின விடத்தும் அவை உயிர் ஆகற்பாலன. அவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் நோக்கி வேறெழுத்தென்று வேண்டினார் எனவுணர்க.
>
> (இளம்பூரணர், தொல்.எழு. 2)

> சந்தனக்கோல் குறுகினாற் பிரப்பங்கோலாகாது. அதுபோல உயிரது குறுக்கமும் உயிரேயாம். இவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் பற்றி வேறோர் எழுத்தாக வேண்டினார்.
>
> (நச்சினார்க்கினியர், தொல்.எழு. 2)

சிவஞானமுனிவர் குற்றியலிகரம், குற்றியலுகரம் இரண்டும் இகர, உகரங்களின் குறுக்கம் அல்ல; அவை இயல்பாகவே அரை

மாத்திரை ஒலிப்பன; இகர, உகரங்களிலிருந்து வேறுபட்டவை என விவரிக்கிறார்.

> கேண்மியா வரகு என்பனவற்றினிகரமு முகரமும், போலுமென்புழி அரை மாத்திரையாய் நின்ற மகரம் போன்ம் என லகரம் னகரமாய்த் திரிந்து ஈரொற்றுடனின்ற காரணத்தாற் பின்னர்க் கான்மாத்திரையாய் நின்றாற் போல, முன்னரொரு மாத்திரையாய் நின்று பின்னரொரு காரணம் பற்றி அரை மாத்திரையாகாது மகரமும் வல்லெழுத்துமாகிய மெய்யெழுத்தினைச் சார்ந்து என்றும் அரை மாத்திரையாயே நிற்குமொரு தன்மையவாயினும், அப்பெற்றி யுணராது இவையரை மாத்திரை பெறுதல் மகரக்குறுக்கம் போலச் செயற்கையாற் போலுமென்று உலகமலையாமைப் பொருட்டு இவை யிங்ஙனமாதலியல் பென்பார், குற்றிகரங் குற்றுகர மென்றொழியாது குற்றியலிகரங் குற்றியலுகர மெனக் குறியிட்டார். இக்குறியீடு முணராதார் ஒரு மாத்திரையாய் நின்ற குற்றெழுத்துக்களே இடமும் பற்றுக்கோடுஞ் சார்ந்த காரணத்தால் அரை மாத்திரையாய்க் குற்றியலிகரங் குற்றியலுகரமென நின்றன வெனக் கூறித் தமதறியாமையைப் புலப்படுப்பர்.
>
> (சிவஞானமுனிவர், தொல்காப்பியச் சூத்திர விருத்தி, பக்கம் 40)

முனிவர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஒழிந்தவை சார்பெழுத்து ஆகும் தகுதி இல்லாதவை என விளக்குகிறார்.

> அளபெடை அந்நெட்டெழுத்தோடு குற்றெழுத்தொத்து நின்று நீண்டிசைப்ப தொன்றாயினும், மொழிக்காரணமாய் வேறு பொருடாராது இசை நிறைத்தன் மாத்திரைப் பயத்ததாய் நின்றலின், வேறெழுத்தென வைத்தெண்ணப்படா தாயிற்றென்பது நுண்ணுர்வா னோர்ந்துணர்க.
>
> (மேலது, பக்கம் 35)

உயிர்மெய் எழுத்துக்களை உயிர், மெய்களின் கூட்டு வடிவமே அன்றி, வேறுவகை எழுத்துக்களல்ல என விவரிக்கிற முனிவர் ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம் போன்றவற்றை எழுத்துக்களின் ஒலிக்குறுக்கம் எனக் கூறுகிறார்.

> ஐகாரக்குறுக்கம் முதலியன ஒரு காரணம் பற்றிக் குறுகின வாகலிற் சிறுமரம் பெருத்துழியும் பெருமரஞ் சிறுத்துழியும்

வேறொரு மரமாகாதவாறு போல வேறெழுத்தெனப்படா
(மேலது, பக்கம் 14-15)

தெ.பொ. மீனாட்சி சுந்தரன் (தமிழ்மொழி வரலாறு, பக்கம் 93) குற்றியலிகரத்தினை இடச்சார்பாக மாறும் ஒலி (Positional Variant) என்றும் அது வெடிப்பொலிகளை ஒலிக்குங்கால் விடுப்பொலியாக வருகின்றது என்றும் கூறுகின்றார். கமில்சுவலபில் (Comparative Dravidian Phonology, Page 53) குற்றியலிகரத்தினை யகரத்தினால் கட்டுண்ட உகரத்தின் மாற்றொலி எனக் கூறுகின்றார்.

குற்றியலுகரத்தோடு யகரம் புணரும்போது வருகிற இகரவொலி மட்டுமன்றிக் கேண்மியா, சென்மியா போன்ற சொற்களில் வருகிற இகரமும் குற்றியலிகரமாகும் என்பது தொல்காப்பியக் கருத்து. எனவே கமில்சுவலபில் கருத்து முற்றிலும் பொருத்தமானதாக அமையவில்லை.

நாடியாது (நாடு+யாது), வண்டியாது (வண்டு+யாது) போன்றவற்றில் வருகிற குற்றியலிகரம் இகரத்துடன் பொருளால் வேறுபடுகிறது.

நாடியாது
- நாட் யாது (நாடு+யாது)
- நாடி யாது (நாடி+யாது)

வண்டியாது
- வண்ட்யாது (வண்டு+யாது)
- வண்டி யாது (வண்டி+யாது)

குற்றியலிகரத்தை ஒலிக்கும் போது வல்லொற்று தெளிவாகவும் இகரம் வழுக்கொலியாகத் தெளிவின்றியும் வெளிப்படுகின்றன.

யகரப் புணர்ச்சி காரணமாகத் தோன்றுகிற குற்றியலிகரம் இகரத்துடன் பொருளால் வேறுபடுதலால் தொல்காப்பியம் இதனை ஒரு சார்பெழுத்தாகக் கருதுகிறது. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் இருவரின் கருத்தும் இதனையே புலப்படுத்துகின்றன.

குற்றியலுகரம் வல்லெழுத்துக்களோடு மட்டுமன்றி, பிற மெய்களோடும் வரும் என்பதை 'நுந்தை' என்னும் சொல் பற்றிய தொல்காப்பிய விளக்கம் புலப்படுத்துகிறது.

குற்றியலுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்
(தொல்.எழு. 56)

முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅது
அப்பெயர் மருங்கின் நிலையிய லான
(தொல்.எழு. 56)

நுந்தை என்னும் சொல்லை முற்றியலுகரமாகவும் குற்றியலுகரமாகவும் ஒலித்தாலும் சொல்லின் பொருள் வேறுபடாது எனக் கூறுவதால், வேறு சொற்களில் இவ்விருவகை உகரங்களும் பொருளை வேறுபடுத்தும் என்பது தெளிவாகிறது.

இருவகை உகரங்களும் தமக்குள் பொருள் வேறுபடுத்துதலை நச்சினார்க்கினியர் (தொல்.எழு. 67),

> காது, கட்டு, கத்து, முருக்கு, தெருட்டு என்பன முற்றுகரமும் குற்றுகரமுமாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற் போல நுந்தை என்று இதழ் குவித்து முற்றக் கூறிய விடத்தும் இதழ் குவியாமல் குறையக் கூறிய விடத்தும் ஒரு பொருளே தந்தவாறு காண்க.

என விவரிக்கிறார்.

ஆய்தம் தனிக்குறிலுக்கும் வல்லின உயிர் மெய்க்கும் இடையில் மட்டுமன்றி, அல்வழிப் புணர்ச்சியில் ல்,ள்,வ் ஆகியவற்றின் திரிபாகவும் வருகிறது.

புணர்ச்சியில் ல்,ள்,வ் ஆகிய மெய்களின் திரிந்த வடிவமாக வருதல், புள்ளி என்னும் பெயர் பெறுதல், ஒற்றளபெடையாக வருதல் என்னும் இயல்புகளால் மெய்யெழுத்துக்களை ஒத்துக் காணப்பட்டபோதிலும், புணர்ச்சியில் உயிர் ஏறுதற்கு இடமளிக்காததால் ஆய்தம் மெய்யெழுத்துக்களிலிருந்து வேறுபட்டுச் சார்பெழுத்து ஆயிற்று என வைத்தியநாத தேசிகர் (இலக்கண விளக்கம், 17) விளக்குகிறார்.

ஆய்தம் வல்லொலிகளை உரசொலிகளாக மாற்றுதற்கு வருகிறது எனத் தெ.பொ.மீனாட்சி சுந்தரன் (தமிழ்மொழி வரலாறு, பக்கம் 99), ஆ. வேலுப்பிள்ளை (தமிழ் வரலாற்றிலக்கணம், பக்கம் 56-63) ஆகியோரும் அது வல்லொலிகள் உரசொலிகளாக மாறுவதைக் குறிப்பதற்காக இடப்பட்ட குறியீடு ஆகும் எனச் செ.வை. சண்முகமும் (எழுத்திலக்கணக் கோட்பாடு, பக்கம் 60) கூறுகின்றனர்.

தொல்காப்பியம் செய்யுளியலில் ஆய்தம் பயின்று வரும் பாடல்களை நலிபுவண்ணம் எனக் குறிப்பிடுகிறது. மேலும், இந்நூல் ஆய்தல் என்ற சொல்லுக்கு உள்ளதன் நுணுக்கம் என்ற பொருளை உரியியலில் தருகிறது. எனவே அச்சொல்லின் அடியிலிருந்து (ஆய்) அமைந்துள்ள ஆய்தம் என்பதற்கும் உள்ளதன் நுணுக்கம் எனப் பொருள் கொண்டு, அது தன்னை அடுத்து வரும் வல்லொலிகளை அவற்றிலிருந்து நுணுகிய ஒலியுடைய உரசொலிகளாக மாற்றுதற்கு வருகிறது என்பது ஏற்புடையதாகிறது.

உயிர்மெய் எழுத்துக்கள் மெய்யும் உயிரும் சேர்ந்த கூட்டு வடிவங்கள். இவை எழுது பொருள், காலச் சுருக்கத்திற்காகச் செயற்கையாகப் படைக்கப்பட்ட வரிவடிவங்களே அன்றி, சொல்லமைப்பில் இவற்றிற்கு வேறு முதன்மை இடம் இல்லை. உயிரளபெடையும் ஒற்றளபெடையும் எழுத்துக்களின் ஒலி நீட்சியாகும். ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம் போல்வன எழுத்துக்களின் ஒலிக்குறுக்கங்களே. இவை சொற்களில் பொருளை வேறுபடுத்துதலோ புணர்ச்சியில் வேறுபட்ட செய்கை உடையனவோ அல்ல. எனவே தொல்காப்பியம் இவற்றைத் தனி வகை எழுத்துக்களாகக் கருதவில்லை. ஆனால் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் மூன்றும் பொருளை வேறுபடுத்தல், புணர்ச்சி வேறுபாடு உடைமை, ஒலிமாற்றியாகச் செயலாற்றுதல் ஆகிய இயல்புகளைப் பெற்றிருத்தலால் இவை தனி வகை எழுத்துக்களாகக் கருதப்படுகின்றன. இவை உயிர், மெய் என்னும் எழுத்துக்களைச் சார்ந்து, தனி எழுத்தளவிலன்றிச் சொல்லில் உணரப்படுதலால் சார்ந்து வருவன எனக் கூறப்படுகின்றன.

வீரசோழியம் குற்றியலிகரம், குற்றியலுகரம், உயிரளபெடை, மகரக்குறுக்கம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், உயிர்மெய், ஆய்தம் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. எனினும் இவற்றைச் சார்பெழுத்து என்றோ வேறு வகை எழுத்து என்றோ பெயர் சுட்டவில்லை. நேமிநாதத்திலும் வீரசோழியத்தைப் போன்ற நிலையே காணப்படுகிறது.

நன்னூல் சார்பெழுத்துக்களை வகையாகவும் விரிவாகவும் விவரிக்கிறது.

**உயிர்மெய் யாய்தமுயிரள பொற்றள**
**பஃகிய இஉ ஐஔ மஃகான்**
**தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும் (நன்னூல் 59)**

உயிர்மெய் முதலிய பத்தையும் சார்பெழுத்தின் வகைகள் எனக் குறிப்பிடுகிற நன்னூல், இவ்வெழுத்துக்கள் சார்ந்து வருகிற எழுத்துக்களையும் அவை நிற்கிற மொழிநிலைகளையும் உறழ்ந்து சார்பெழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை முந்நூற்றறு பத்தொன்பது என விரித்துக் காட்டுகிறது.

நன்னூல் சார்பெழுத்து பத்து வகைப்படும் என்று கொண்டதற்கு மயிலைநாதர் பின்வருமாறு அமைதி உரைக்கிறார்.

> என்னை? "எழுத்தெனப் படுப, அகரமுத னகர விறுவாய் முப்பஃதென்ப சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே" (தொல். நூன். 1) என ஆசிரியர் தொல்காப்பியனாரும் இவ்வாறு முதல் சார்பென வகுத்துக் கொண்டாரென்க. அஃதே, அவர் சார்பெழுத்தென மூன்றே கொண்டாராலோ வெனின், அஃதே, நன்று சொன்னாய்! ஒழிந்தவை எப்பாற்படுமென்றார்க்கு மூன்றாவதோர் பகுதி சொல்லலாவதின்மையானும் முதலெழுத்தாந் தன்மை அவற்றிற்கின்மையானும் சார்பிற் றோன்றுதலானும் இப்பத்தும் சார்பாகவே கொள்ள வேண்டு மென்பது. (நன்னூல், 59)

இலக்கண விளக்கம் ஆய்தக் குறுக்கம் ஒழிந்த ஒன்பதையும் சார்பெழுத்தின் வகை எனக் குறிப்பிடுகிறது. மேலும், இந்நூலாசிரியர் நன்னூலின் பத்து என்னும் கொள்கையை உரையில் மறுத்துரைக்கிறார்.

> ஆய்தக் குறுக்கமொன்று உளதென்றும் அதனோடு கூடச் சார்பெழுத்துப் பத்தாமென்றும் அதன் விரித்தொகை முந்நூற்றறுபத் தொன்பதா மென்றுங் கூறுவாரும் உளராலோவெனின்,
>
> "குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
> யுயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே"

என ஒரு மொழிகண் வரும் ஆய்தங் கூறி,

> "ஈறியன் மருங்கினு மிசைமை தோன்றும்"
>
> என நிலைமொழி யீறு வருமொழி முதலொடு புணர்ந்து நடக்குமிடத்துங் கஃறீது, முஃடீது எனத் தன் அரை மாத்திரையே இசைக்குந் தன்மை தோன்றுமென ஆசிரியர் தொல்காப்பியனார் அதனைப் புணர்மொழிக்கண் வரும்

ஆய்தமாகக் கூறினமையான் ஆய்தக் குறுக்கமொன்று இன்றெனவும் இன்றாகவே சார்பெழுத்துப் பத்தாமென்றல் பொருந்தாதெனவும் உயிர் மெய்யொழித்து ஏனைய வெல்லாம் இட வேற்றுமையானன்றி எழுத்து வேற்றுமையான் அங்ஙனம் பல்காமையிற் சார்பெழுத்து முந்நூற்றறுபத் தொன்பதா மென்றல் நிரம்பா தெனவும் மறுக்க. இன்னும் இடையொற்றுக்கள் டகர றகரங்களோடு தொடராமைக்கு அவர் மெய்ம்மயக்கங் கூறிய நூற்பாக்களே கரியாகலிற் குற்றிகரக் குற்றுகரங்கட்கு அவ்விட வேற்றுமையுஞ் சாலாமை யறிக.

இலக்கண விளக்கம் எழுத்துக்களின் அடிப்படையில் சார்பெழுத்துக்கள் இருநூற்று நாற்பது என விரித்துக் கூறுகிறது.

தொன்னூல் விளக்கம் நன்னூலைப் பின்பற்றிச் சார்பெழுத்து பத்து வகை எனக் கூறுகிறது.

பிற்கால நூல்களுள் முத்துவீரியம் வேறுபட்டு நிற்கிறது. இந்நூல் நன்னூல் கூறுகிற சார்பெழுத்துக்கள் பத்தையும் விவரிக்கிறது. எனினும் அவை யாவற்றையும் சார்பெழுத்து எனக் கூறவில்லை. இந்நூல் உயிர்மெய், ஆய்தம் என்னும் இரண்டை மட்டுமே சார்பெழுத்தின் வகை எனச் சுட்டுகிறது.

*சார்புயிர் மெய்தனி நிலையிரு பாலன* (முத்துவீரியம், 22)

உயிர்மெய், ஆய்தம் என்னும் இரண்டு மட்டுமே சார்பெழுத்துக்களுள் பிற்காலத்தில் வரிவடிவம் பெற்றவை. எனவே முதலெழுத்துக்களிலிருந்து தோன்றுதல், அவற்றைச் சார்ந்து வருதல், வரிவடிவம் உடைமை என்னும் இயல்புகளைப் பெற்றுள்ளவற்றை மட்டுமே முத்துவீரியம் சார்பெழுத்து எனக் கருதுகிறது.

பிற்கால இலக்கண நூல்கள் பேரளவில் நன்னூலைப் பின்பற்றிச் சார்பெழுத்துக்களை விவரிக்கின்றன. முதலெழுத்துக் களைச் சார்ந்து வருதல், அவற்றிலிருந்து தோன்றுதல், அவற்றின் ஒலி மாற்றம் ஆகியவற்றைச் சார்பெழுத்துக்களுக்குரிய அளவுக் கருவியாக இந்நூல்கள் கொள்கின்றன.

### உயிரளபெடை

தொல்காப்பியம் உயிரளபெடையின் ஒலிவடிவம், வரிவடிவம் இரண்டையும் விவரிக்கிறது.

*மூவள பிசைத்தல் ஓரெழுத் தின்றே (தொல்.எழு. 5)*

*நீட்டம் வேண்டின் அவ்வள புடைய*
*கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர் (தொல்.எழு. 6)*

தமிழில் இருமாத்திரையின் மிக்கு மூன்று மாத்திரையாக ஒலிக்கிற எழுத்து யாதும் இல்லை. இரண்டு மாத்திரையின் மிகுதியான ஓசை வேண்டுமாயின், தேவையான அளவுக்கு ஓசையைக் கூட்டி எழுப்ப வேண்டும் என்பது இந்நூற்பாக்கள் தருகிற செய்தி.

அளபெடை (புலுதம்) மூன்று மாத்திரை ஒலிக்கும் என்பது வடமொழி இலக்கணம். அதனை நினைவூட்டித் தமிழ் மொழி மரபைப் பேணும் நோக்கில் தொல்காப்பியர் 'மூவளபிசைத்தல். . என்னும் நூற்பாவை இயற்றியுள்ளார். வடமொழி அமைப்பும் தமிழ் மொழி அமைப்பும் ஒன்றே என்று கூறிய இலக்கண அறிஞர்களுக்கு மறுப்பாகத் தொல்காப்பியம் எழுதப்பட்டது என்ற கருத்துக்கு இது போன்ற சில நூற்பாக்கள் அரணாக உள்ளன. ச. அகத்தியலிங்கம் (தொல்காப்பியத்தின் தோற்றமும் ஏற்றமும், தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள், பக்கம் 2) இப்பேரிலக்கணப் பெருநூல் சமஸ்கிருத மொழியிலிருந்து முற்றிலும் மாறுபட்ட மொழி தமிழ்மொழி என்பதையும் விளக்க வந்த நூல் என எண்ணுவதில் தவறு எதுவும் இல்லை எனக் கூறுதல் இங்குக் குறிக்கத் தக்கது.

பேச்சு வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் தேவைக்கு ஏற்ப ஓசையை நீட்டி ஒலிப்பதே இயல்பு. இந்நீட்சிக்குக் குறிப்பிட்ட ஒலி வரையறை கூறுவது ஏற்புடையதல்ல. எனவே தொல்காப்பியத்தின் அளபெடை ஒலி வடிவம் குறித்த இச்செய்தி அறிவார்ந்ததாகும்.

தொல்காப்பியம் மொழிமரபில் குறிப்பிடுகிற,

*குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்*
*நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே*

என்னும் நூற்பா எழுத்து மொழியில் உயிரளபெடையின் அமைப்பினைச் சுட்டுகிறது. நெடிலை அடுத்து அதன் இனக்குறில் எழுதப்படுவது அளபெடையை அடையாளம் காட்டுவதாகும்.

வீரசோழியமும் நேமிநாதமும் உயிரளபெடை மூன்று மாத்திரை ஒலிக்கும் எனக் கூறுகின்றன. இக்கூற்று வடமொழி மரபைச் சார்ந்தது.

நன்னூல் வீரசோழியத்தைப் போன்று உயிரளபெடை மூன்று மாத்திரை ஒலிக்கும் என்கிறது. மேலும், இந்நூல் உயிரளபெடைக்கு வரைவிலக்கணமும் கூறுகிறது.

**இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்**
**அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே (நன்னூல், 90)**

உயிரளபெடையில் நெடிலே அளபெடுக்கும், இனக்குறில் அடையாளமாக இடப்பெறும் என்பது நன்னூல் கருத்து.

இலக்கண விளக்கம் நெடில் அளபெடுக்கும் என்னும் நன்னூல் கருத்தினை மறுத்து,

**இசைகெடின் மொழிமுத லிடைகடை நெடில்வழித்**
**தத்த மொத்தகுற்றெழுத் தோடள**
**பெழூஉ மையெள இஉ என்னு**
**மாயீரெழுத்தோ டளபெழு மென்ப (இலக்கண விளக்கம், 19)**

என்று கூறுகிறது. இந்நூல் நெடிலும் அதன் இனக்குறிலும் ஒத்திசைந்து அளபெடுக்கும் என்று கூறுகிறது. இதன் ஆசிரியர்,

குற்றெழுத்தோடென வரையாது கூறலின் ஓசை நிரம்பா விடிற் சிறுபான்மை ஈரெழுத்தோடு கூடியும் அளபெழுமெனக் கொள்க.

**செய்யுட்க ளோசை சிதையுங்கா லீரளபு**
**மையப்பா டின்றி யணையுமாம்**

என மாபுராணத்துக் கூறலின்.

வரலாறு:-

**"செறாஅஅய் வாரீய நெஞ்சு"**

எனவும்,

**இலாஅஅர்க் கில்லைத் தமர்**

எனவும் வரும். இவை ஈரெழுத்தோடு கூடாக்கால் ஆசிரியத்தளை தட்டுச் செப்பலோசை கெடுமாறு உணர்க (இலக்கண விளக்கம், 19)

இலக்கண விளக்கம் (உரை) உயிரளபெடை மூன்று மாத்திரையும் நான்கு மாத்திரையும் பெறும் எனக் கூறுகிறது. இது தொல்காப்பிய நெறிக்கு முரணானது. அளபெடை வரிவடிவில் வருகிற நெடில், குறில்களைக் கருத்தில் கொண்டு இந்நூல் இவ்வாறு கூறுகிறது.

முத்துவீரியத்தின் அளபெடைக் கருத்து முந்தைய இலக்கணக் கருத்துகளினின்று மாறுபட்டது; புதுமையானது. இந்நூல்

அளபெடையை எட்டாக வகைப்படுத்துகிறது.

*இயற்கை செயற்கை யின்னிசை சொல்லிசை*
*நெடில்குறில் ஒற்றள பெழுத்துப் பேறளபு*
*எண்வ கைப்படும் என்மனார் புலவர்* (முத்துவீரியம், 32)

உயிரளபெடையில் நெடிலும் குறிலும் ஒத்திசைந்து அளபெடுக்கும் என்னும் கருத்து இலக்கண விளக்கத்தைப் பின்பற்றி முத்து வீரியத்தில் (31) காணப்படுகிறது. இக்கருத்து நெடிலளபெடை, குறிலளபெடை என்ற பகுப்புக்கு முரணானது.

நெடில், குறில், ஒற்று என்பன தனித்தனியே அளபெடுத்தலை இந்நூல் குறிக்கிறது. இவ்வாறு அளபெடுத்தலைப் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் காண முடியும். குறிலளபெடையையும் எழுதும்போது நெடிலை அடுத்துக் குறிலை எழுதியே அடையாளம் காட்ட வேண்டியுளது. இசைக்கும் போது (பாடலில்) இம்மூன்றையும் தெளிவாக உணரலாம்.

முத்துவீரியம் செய்யுளில் யாப்புக்காக அளபெடுத்தலைச் செயற்கை அளபெடை எனவும் விளி, இசை, புலம்பல் போன்றவற்றில் வருவனவற்றை இயற்கை அளபெடை எனவும் பிரித்துக் காட்டுகிறது.

### வரிவடிவம்

எழுத்துக்களின் வரிவடிவங்கள் கண்டு உணர்தற்கு உரியன; செவியால் கேட்டு உணர்தற்கு அரியன. எனவே வரிவ்டிவங்களை விவரித்தல் பயனற்றது எனக் கொண்டு, தமிழ் இலக்கண நூல்கள் இவற்றை முழுமையாக விவரிக்கவில்லை. எனினும் ஒன்றற்கு மேற்பட்ட எழுத்துக்களுக்கு உரியனவாகக் குறிப்பிட்ட வடிவம் காணப்படுமாயின், எழுத்துக்களுக்கு இடையே வேறுபாட்டை உணர்த்துகிற குறிப்புக்களை இந்நூல்கள் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

தொல்காப்பியம் சில எழுத்துக்களின் வரிவடிங்களை எடுத்துரைக்கிறது. எகரமும் ஏகாரமும்; ஒகரமும் ஓகாரமும் குறிப்பிட்ட வரிவடிவத்தின் மேல் புள்ளி இடுவதனால் வேறுபடுத்தப்படுகின்றன. புள்ளி யில்லாத வடிவம் நெடிலுக்கும் புள்ளி உடையன குறிலுக்கும் உரியன.

மெய்யெழுத்துக்களின் வரிவடிவம் புள்ளி பெறும் என்ற செய்தியைத் தொடர்ந்து, மாட்டேறாக எகர, ஒகரக் குறில்களின் வரிவடிவச் செய்தி இடம் பெற்றுள்ளது.

மெய்யெழுத்துக்கள் புள்ளியிடப் பெறும் என்பதனை இருநூற்பாக்கள் தெரிவிக்கின்றன.

**மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் (தொல்.எழு. 15)**

**எகர ஒகரத் தியற்கையும் அற்றே (தொல்.எழு. 16)**

**மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல் (தொல்.எழு. 104)**

புள்ளியிடப் பெறாத மெய் வடிவம் அகர உயிர்மெய் எழுத்துக்களுக்கு உரியது; புள்ளி பெற்றது மெய்களுக்கு உரியது. இதனை விவரிக்கும் போது ஏனைய உயிர்மெய் எழுத்துக்களின் வரிவடிவக் குறிப்பையும் தொல்காப்பியம் தருகிறது.

**புள்ளி யில்லா எல்லா மெய்யும்**
**உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்**
**ஏனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்**
**ஆயி ரியல வுயிர்த்த லாறே. (தொல். எழு. 17)**

தொல்காப்பியத்தில் 'உட்பெறு புள்ளி உருவா கும்மே' (தொல். எழு. 14) என்னும் நூற்பா வரிவடிவம் பற்றியது. எனினும் இன்ன எழுத்தின் வரிவடித்தை விவரிக்கிறது என்பது வெளிப்படையாக இதில் இடம் பெற வில்லை. இது குறித்து அறிஞர்களிடையே வெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இந்நூற்பா பகரத்திற்கும் மகரத்திற்கும் இடையே உள்ள வரிவடிவ வேற்றுமையை விவரிக்கிறது என்று உரைக்கின்றனர். வேங்கடராசுலு ரெட்டியார், வெள்ளைவாரணர் போன்றோர் இது மகரத்தையும் மகரக்குறுக்கத்தையும் வேறுபடுத்துகிறது என்று உரைக்கின்றனர். புறத்துப் பெறும் புள்ளியோடு உள்ளாற் பெறும் புள்ளி மகரத்திற்கு வடிவாம். அஃதின்மை பகரத்திற்கு வடிவாம் என்பது முதலிரு உரைகாரர்களின் விளக்கம்.

வேங்கடராசுலு ரெட்டியார் தொல்காப்பியத்தில் வரிவடிவங்களை விவரிக்கையில் காணப்படுகிற ஒரு பொது நெறியைக் கருத்திற் கொண்டு பின்வருமாறு விவரிக்கிறார்:

> மேல் அளபினைக் கூறி வந்தவழி மகர மெய்க்குப் படுவதோர் மாத்திரைச் சுருக்கம் கூற நேர்ந்தது. அதனால், மேற்சூத்திரத்தான் மகரம் ஒலி வடிவிற் குறுகுதலைக் கூறி, இச்சூத்திரத்தான் அதற்கு வரிவடிவு கூறுகின்றார்.

ம் - மகரமெய்

ம்̇ - மகரமெய்க் குறுக்கம்

எழுத்துக்கள் புள்ளியிடப் பெறின், அவை தம் அளபில் செம்பாதி குறைவானவாகும்.

எ - இரண்டு மாத்திரை

எ̇ - ஒரு மாத்திரை

க - ஒரு மாத்திரை

க் - அரை மாத்திரை

(ந)கு - ஒரு மாத்திரை

(நா)கு் - அரை மாத்திரை

இவற்றால், அரைமாத்திரை யொலிக்கும் மகர மெய், குறுகியதனை அறிவிக்க, பின்னும் ஒரு புள்ளி பெறுதல் முறையே யாதல் அறியப்படும் (தொல்.எழு. 14).

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுக்களில் பகரத்தினுள் கிடைக்கோடு இடம்பெற்ற வடிவம் மகரத்திற்கு உரியதாகக் காணப்படுகிறது.

ப - பகரம்

ப - மகரம்

கிடைக்கோட்டினை வீரமாமுனிவர் (தொன்னூல் விளக்கம், 12) நீண்ட புள்ளி என்று குறிப்பிடுகிறார். தொல்காப்பியம் கி.மு. காலத்தைய நூல் என்பது பெரும்பான்மை அறிஞர்களின் துணிபு. எனவே இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறுகிற விளக்கம் ஏற்புடையதாகத் தோன்றுகிறது.

தொல்காப்பியம் வரிவடிவம் கூறுகிற நூற்பாக்களுள் சார்பெழுத்துக்களைச் சுட்டிக் காட்டும் நூற்பாவும் கருத்தாய்வினை ஏற்படுத்தியுள்ளது.

**குற்றிய லிகரம் குற்றிய லுகரம்**
**ஆய்தம் என்ற**
**முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன** (தொல்.எழு. 2)

'ஆய்தம் என்ற முப்பாற் புள்ளி' எனும் தொடர் இந்நூற்பாவில் வெவ்வேறு கருத்துக்களுக்கு இடமளிக்கிறது. இளம்பூரணர், 'குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் என்று

சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளியும்' என விளக்குகிறார். இவர் குற்றியலிகரம் முதலான மூன்றையும் புள்ளி பெறும் எழுத்துக்கள் எனக் கருதுகிறார். நச்சினார்க்கினியரின் விளக்கமோ வேறாக உளது. 'குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தம் என்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளி வடிவுமாம்' என்று ஆய்தத்தை மட்டும் மூன்று புள்ளிகளை உடைய எழுத்து என்கிறார். நச்சினார்க்கினியர் மேலும் ஒரு விளக்கத்தையும் தருகிறார்.

> ஆய்தம் என்ற ஓசைதான் அடுப்புக் கூட்டுப் போல மூன்று புள்ளி வடிவிற்றென்பது உணர்த்தற்கு ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் என்றார். அதனை இக்காலத்தார் நடுவு வாங்கியிட்டெழுதுப. இதற்கு வடிவு கூறினார் (தொல். எழு. 2).

வேங்கடராகலு ரெட்டியார் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்னும் மூன்றும் புள்ளி பெறும் என்பதைப் புணரியல், செய்யுளியலில் வருகிற நூற்பாக்களைச் சான்று காட்டி நிறுவுகிறார்.

> ஆயின் இம்மூன்றெழுத்துக்களும் புள்ளி பெறுதல் யாண்டுப் பெறுதும் எனின், குற்றியலுகரம் புள்ளி பெறுதல் புணரியலுள்ளும், குற்றியலிகரம் புள்ளி பெறுதல் "ஒற்றெழுத் தியற்றே குற்றியலிகரம்" என்னும் செய்யுளியற் சூத்திரத்தும் பெறுதும். 'ஒற்றெழுத்து' என்னும் சூத்திரத்தான் மெய்யெழுத்துப் போலக் குற்றியிலிகரம் புள்ளி பெறும் என்றல் எவ்வாறு போதரும் எனின், 'இவற்றை யெல்லாம் 'ஒற்றெழுத்தியற்றே' என்றதனால் புள்ளியிட்டெழுதுக' என்று பேராசிரியர் எழுதியிருத்தலின் அறியப்படும் என்க (தொல். எழு. 2)

பிற்கால நூல்களுள் வீரசோழியமும் நேமிநாதமும் எகரம், ஒகரக் குறில்களும் மெய்களும் புள்ளி பெறுதலைக் குறிப்பிடுகின்றன. நன்னூலும் இலக்கண விளக்கமும் அவற்றோடு உயிர்மெய் எழுத்துக்கள் பற்றிய தொல்காப்பியக் குறிப்பையும் வழிமொழி கின்றன. தொல்காப்பியத்திற்குப் பிந்தைய நூல்களில் குற்றியலிகரம், குற்றியலுகர வரிவடிவம் பற்றிய குறிப்பு இடம்பெற வில்லை. பிற்காலத்தில் இவை வழக்கிலிருந்து மறைந்து விட்டன எனலாம்.

தமிழ் வரிவடிவ வரலாற்றில் வீரமாமுனிவரின் கொடை குறிப்பிடத்தக்கது. இவர் தொன்னூல் விளக்கத்தில் தமிழ் இலக்கண மரபைப் பின்பற்றி எ,ஒ, மெய் ஆகிய மூன்றும் புள்ளி பெறும் என்கிறார்.

நீட்டல் சுழித்தல்
குறின்மெய்க் கிருபுள்ளி

இந்நூற்பாவிற்கு முனிவரின் உரை வருமாறு:

> எழுத்து வடிவமாமாறுணர்த்துதும். மெய்யின் வடிவும், பலமுறை வேறுபடாமையானும், எகரம் ஏகாரம், ஒகரம் ஓகாரம், எப்போதும் ஒருவடிவாகையானும், மயக்க நீப்பது வேண்டி மேற்புள்ளி கொடுத்தார் புலவர். ஆகையில் குற்றெழுத்தின் மேனீண்ட புள்ளியும், ஒற்றெழுத்தின் மேற் சுழித்த புள்ளியும், வருமென்றுணர்க.

வீரமாமுனிவர் கொடுந்தமிழில் தமிழ் வரிவடிவங்கள் அனைத்தையும் பட்டியலிட்டுள்ளார். அவை தற்காலத்தில் வழக்கிலுள்ளவையாகும். மேலும், அவர் தாம் செய்த சீர்மையினையும் பின்வருமாறு விவரிக்கிறார்.

> எகரக் குறிலையும் நெடிலையும் ஒகரக் குறிலையும் நெடிலையும் வேறுபடுத்த நான் ஒரு எளிய உத்தியை உருவாக்கியுள்ளேன். கொம்பு ெ என்று அழைக்கப்படுகிற எழுத்து குறிலுக்கும் நெடிலுக்கும் பயன்படுத்தப்படுகிறது. இக்கொம்பை எழுதினால் எகரக் குறிலாகவும் ஒகரக் குறிலாகவும் இருக்கும். ஈகாரத்திற்கு நான் கீழே குறிப்பிட்டது போன்று கொம்பின் மேற்பாகத்தை ே என்று சுழித்தால் அது நெடிலாகும். இவ்வாறு 'மெய்' குறிலாகும்; 'மேய்' நெடிலாகும். 'பொய்' குறிலாகும்; 'போய்' நெடிலாகும். இவ்வுத்தியைப் பலர் வெறுத்து ஒதுக்காமல் ஏற்றிருக்கின்றனர் (கொடுந்தமிழ், பக்கம் 8).

வீரமாமுனிவரின் சீர்மை ஏற்கப் பெற்றுப் பெருவழக்கான காலத்துத் தோன்றிய முத்துவீரியம் இச்சீர்மையை ஏற்காது, தொல்காப்பியம் கூறுகிற வழக்கொழிந்த வரிவடிவங்களைக் குறிப்பிடுகிறது.

எகர ஒகரத் தியற்கையு மற்றே (முத்து வீரியம், 41)

குற்றிய லுகரமு மற்றென மொழிப (முத்து வீரியம், 42)

முத்துவீரியம் இங்குத் தொல்காப்பிய நூற்பாக்களை எடுத்து மொழிகிறது.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் அறுவகை இலக்கணம் மட்டுமே தமிழ் வரி வடிவங்கள் அனைத்தையும் எழுதுகிற முறையை விரிவாக விவரிக்கிறது. எனினும் ஏற்கெனவே அறிந்தவர்க்கு மட்டுமன்றி, ஏனையோருக்கு இவ்விளக்கம் பயன்படாது.

## நெடுங்கணக்கு

தொல்காப்பியம் தமிழ் வரிஎழுத்துக்களின் நெடுங்கணக்கு வரிசை குறித்துத் தெளிவாகக் கூறவில்லை. முதலாவது நூற்பா 'அகரமுதல் னகர விறுவாய்' என்றும் எட்டாவது நூற்பா 'ஔகார விறுவாய்ப், பன்னீ ரெழுத்தும் உயிர்' என்றும் ஒன்பதாவது நூற்பா 'னகார விறுவாய்ப், பதினெண் எழுத்தும் மெய்' என்றும் குறிப்பிடுகின்றன. சார்பெழுத்தின் வரிசை 'குற்றியலிகரம் குற்றியலுகரம், ஆய்தம் என்ற முப்பாற் புள்ளி' என்று இந்நூலில் குறிக்கப்பட்டுள்ளது. மேலும், உயிர் மெய் எழுத்துக்களின் வரிவடிவம் பற்றிய குறிப்பு (நூன் மரபு 17) இடம் பெற்றுள்ள போதிலும், அவற்றின் வரிசை குறித்து இந்நூல் யாதும் குறிப்பிட வில்லை.

வீரசோழியம் உயிர், ஆய்தம், மெய் என்று எழுத்துக்களை வரிசைப்படுத்துகிறது.

> அறிந்த வெழுத்தம்முன் பன்னிரண் டாவிகளான கம்முன்
> பிறந்த பதினெட்டு மெய்நடு வாய்தம் (வீரசோழியம், 1)

எனினும் உயிர்மெய் எழுத்துக்களின் வரிசையை இந்நூல் குறிப்பிடவில்லை.

நேமிநாதம் (1),

> ஆவி அகரமுதல் ஆறிரண்டாம் ஆய்தமிடை
> மேவுங் ககரமுதன் மெய்களாம் – மூவாறும்

என்று வீரசோழியத்தைப் பின்பற்றி எழுத்துக்களை வரிசைப்படுத்துகிறது.

நன்னூல் நெடுங்கணக்கு வரிசையை முறை எனச் சுட்டுகிறது.

> சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முதல்
> நடத்த றானே முறையா கும்மே (நன்னூல், 72)

என்னும் நூற்பா தமிழ் நெடுங்கணக்கில் அகரம் முதலில் வருதலைச் சுட்டுகிறது. மேலும், 'அம்முத லீராறாவி கம்முதல், மெய்ம் மூவாறு'

(62) என்னும் நூற்பா அடிகளில் அகரத்தை உயிரும் ககரத்தை மெய்யும் முதலாக உடையன எனும் செய்தி காணக்கிடைக்கின்றது. உயிர் மெய்களின் வரிசை பற்றி யாதும் இந்நூலில் காணப்படவில்லை. நெடுங்கணக்கு வரிசை பற்றிய விவரிப்பில் நன்னூல் தொல்காப்பியத்தை விடவும் தெளிவின்றிக் காணப்படுகிறது.

இலக்கண விளக்கம் தனது உரையில் நெடுங்கணக்கு வரிசை குறித்துப் பின்வருமாறு கூறுகிறது.

> சார்பெழுத்துக்களுள் ஆய்தம் அகர ஆகாரங்கள் போல அங்காந்து கூறும் முயற்சியாற் பிறத்தலானும் உயிரேறாது ஓசை விகாரமாய் நிற்பதொன்றேனும் எழுத்தியல் தழாஓசை போலக் கொள்ளினுங் கொள்ளற்க, எழுத்தேயாமென்று ஒற்றின் பாற்படுத்தற்குப் புள்ளியெனப் பெயர் பெறுதலானும், உயிரும் ஒற்றுமாகிய இரண்டற்கும் இடையே வைக்கப்பட்டது (இலக்கண விளக்கம், 8).

இலக்கண விளக்க உரை தரும் செய்தி உயிர், ஆய்தம், மெய் என்னும் வரிசையில் தமிழ் நெடுங்கணக்கு வழங்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.

வீரமாமுனிவர் காலத்தும் வீரசோழிய நெடுங்கணக்கு வரிசையே இருந்தது. இதனைக் கொடுந்தமிழில் (பக்கம் 10) உள்ள விரிவான பட்டியலில் காணலாம். முதலில் அகர முதல் ஔகாரம் ஈறான உயிர் பன்னிரண்டும் உள்ளன. அடுத்து ஆய்தம் (ஃ) இடம்பெற்றுள்ளது. தொடர்ந்து ககர உயிர்மெய் பன்னிரண்டையும் அடுத்துக் ககர மெய் உள்ளது. அடுத்து ஙகர உயிர் மெய் உள்ளது. இவ்வாறே பதினெட்டு மெய்களும் அவற்றின் உயிர்மெய்களின் இறுதியில் இடம் பெற்றுள்ளன. உயிரெழுத்துக்களின் வரிசை இறுதியில் (பதின்மூன்றாவதாக) வருகிற ஆய்தத்தோடு தொடர்புடையனவாக மெய்யெழுத்துப் பதினெட்டும் இறுதியில் வைக்கப்பட்டுள்ளன. இந்த வரிசை முறையே தற்காலத்திலும் வழக்கில் உள்ளது.

வீரமாமுனிவரின் கொடுந்தமிழ் மட்டுமே தமிழ் நெடுங்கணக்கு வரிசையை முழுமையாகப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. இந்நூல் கிறித்தவ சமயப் பணியாளர்கள் கற்றுப் பயனடையும் நோக்கில் இலத்தீனில் எழுதப்பட்டது. ஏனைய தொல்காப்பியம் முதலான நூல்கள் தமிழை ஓரளவு அறிந்து மொழியமைப்பை விரிவாக அறிய விரும்புவோருக்காக எழுதப்பட்டவை. ஓரளவு அறிந்தவர்களுக்கு நெடுங்கணக்கு வரிசை

ஏற்கெனவே அறிமுகமாயிருக்கலாம் என்பதால், இந்நூல்கள் விவரிக்கவில்லை.

## எழுத்துக்களின் பிறப்பு

எழுத்துக்களின் பிறப்பு எல்லா நூல்களிலும் காணப்படுகிறது. எனினும் இதனை விவரிக்கும் திறன், செய்திகளின் அளவு ஆகியவற்றில் நூல்கள் வேறுபடுகின்றன.

தொல்காப்பியம் மட்டுமே எழுத்துக்களின் பிறப்பினை விவரித்தற்கெனத் தனி ஓர் இயலை உருவாக்கியுள்ளது. இந்நூல் எழுத்துக்களின் பொதுப்பிறப்பினைக் கூறிய பின்னர், உயிர்களும் மெய்களும் பிறக்குமாற்றை விரிவாக எடுத்துரைக்கிறது.

பொதுப் பிறப்பைக் கூறும் நூற்பாவில் பேச்சொலிகள் உருவாவதற்கக் கருவியாகிய ஒலியுறுப்புக்கள் தொகுத்துக் கூறப்படுகின்றன. தொல்காப்பியம்,

> *உந்தி முதலா முந்துவளி தோன்றி*
> *தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ*
> *பல்லும் இதழும் நாவும் மூக்கும்*
> *அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்*
> *உறுப்புற் றமைய . . . .*

என்று ஒலியுறுப்புக்கள் எட்டனைப் பிறப்பியல் முதல் நூற்பாவில் கூறுகிறது. இவ்வெட்டனுள் தலை, மிடறு, நெஞ்சு மூன்றிலும் மூச்சுக் காற்றுத் தங்கிச் செல்லுதலை 'நிலைஇ' என்னும் சொல்லால் குறிப்பிடுகிறது. இதன் வழி, இம்மூன்றையும் காற்றறைகள் எனவும் பல் முதலிய ஐந்தையும் ஒலியெழுப்பிகள் எனவும் இந்நூல் பகுத்துக் கூறுகிறது.

நுரையீரல், குரல்வளை, வாயறை ஆகியவற்றை முறையே நெஞ்சு, மிடறு, தலை என்னும் சொற்களால் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இம்மூன்றிலும் முறையே உயிர்த்தல் (respiratory system), குரலெழுப்புதல் (phonatory system), ஒலித்தல் (articulatory system) ஆகியன நிகழும் என டேவிட் ஆபர்கிராம்பி (Elements of General phonetics, page 21) கூறுகிறார்.

மூக்கு மூச்சுக் காற்றுச் செல்லும் காற்றறையாக இருப்பதோடு, ஒருவகை ஒலிகளை வேறுவகை ஒலிகளாக மாற்றும் ஒலி மாற்றியாகவும் செயல் படுகிறது (P. Lade Foged, Elements of Accoustic Phonetics, page 105). எனவே தொல்காப்பியம் மூக்கை ஒலியெழுப்பி

களுடன் சேர்த்துள்ளது. வல்லெழுத்துக்கள் பிறப்பதற்கான இடமும் முயற்சியுமே அவற்றின் இனமெல்லெழுத்துக்களுக்கும் உரியன. எனினும் மூச்சுக் காற்று மூக்கு வழியாக வெளியேறுவதனால், மெல்லெழுத்துக்கள் உருப்பெறுகின்றன. இதனாலேயே தொல்காப்பியம் வல்லெழுத்துக்களையுட் இன மெல்லெழுத்துக் களையும் ஒருங்கிணைத்துப் பிறக்கும் முறையைக் கூறுகிறது.

வீரசோழியம் தொல்காப்பியம் விவரிப்பது போன்று ஒவ்வோர் எழுத்தின் பிறப்பையும் எடுத்துரைக்க வில்லை. அது பொதுப்பிறப்பினை மட்டும் ஒரு நூற்பாவில் கூறுகிறது.

உந்தி முதலெழுங் காற்றுப் பிறந்துர முஞ்சிரமும்
பந்த மலிகண் டமுமூக்கும் உற்றண்ணம் பல்லுடனே
முந்து மிதழ்நா மொழியுறுப் பாகு முயற்சியினால்
வந்து நிகழு மெழுத்தென்று சொல்லுவர் வாணுதலே

(வீரசோழியம், 6)

வீரசோழியம் மூக்கைக் காற்றறைகளுடன் சேர்த்துக் கூறுகிறது. தொல்காப்பியத்தின் நுட்பத்தினை இந்நூல் உணரவில்லை.

வீரசோழியம் (4) 'எடுத்தல் படுத்தல் நலிதல் ஓயாதுரப்பல் என நால்வகையில் பிறக்கும்' என்ற ஒரு செய்தியையும் தருகிறது. இது வடமொழிகளில் க,ச,ட,த,ப என்னும் ஐந்திலும் ஒலிப்பிலா ஒலி, ஒலிப்பிலா மூச்சொலி, ஒலிப்புடை ஒலி, ஒலிப்புடை மூச்சொலி என்னும் நான்கு வகை ஒலிகள் இருத்தலைக் கருத்திற் கொண்டு கூறுவதாகும்.

பெருந்தேவனார் தமது உரையில்,

> இவற்றுள் உரத்தை வல்லினமும், சிரத்தை ஆய்தமும், கண்டத்தை உயிரும் இடையினமும், மூக்கை மெல்லினமும் பொருந்துமெனக் கொள்க. முயற்சியுள் ஒரெழுத்திற்குப் பல முயற்சியுளவாதலின், எழுத்தெழுத்தால் முயற்சி கூறின் ஈண்டுப் பெருகும் என விடுத்தனம் என்க

என்று குறிப்பிடுகிறார். ஒரு மொழியை அயல் மொழியாளருக்கு அறிமுகப்படுத்துங்கால், எழுத்துக்களை ஒலிக்கு முறை பற்றிய அறிவு இன்றியமையாதது அன்று எனக் கருதி, வீரசோழியம் பிறப்புச் செய்திகளை விவரிக்கவில்லை எனலாம்.

நேமிநாதமும் (8) வீரசோழியத்தைப் போன்று பொதுப்பிறப்பை மட்டுமே ஒரு நூற்பாவில் கூறுகிறது. இந்நூல்

தொல்காப்பியத்தைப் பின்பற்றி மூக்கை ஓர் ஒலியெழுப்பியாகக் குறிப்பிடுகிறது.

நேமிநாத உரையாசிரியர் பேச்சொலி உறுப்புக்களை இருவகைப்படுத்துகிறார். நெஞ்சு, தலை, மிடறு மூன்றும் முதலிட வகை; நா, அண்ணம், இதழ், எயிறு, மூக்கு ஐந்தும் துணை இட வகை.

நன்னூல் (74) தொல்காப்பியத்தைப் போன்று எழுத்துக்களின் பொதுப் பிறப்பை முதலில் கூறி, தொடர்ந்து உயிர், மெய்களின் பிறப்பை விவரிக்கிறது. இந்நூல் ஒலி உறுப்புக்களுள் நெஞ்சு, கழுத்து, உச்சி, மூக்கு நான்கையும் ஓர் வகையாகவும் இதழ், நாக்கு, பல், அண்ணம் நான்கையும் வேறு வகையாகவும் பிரித்தறியும் வண்ணம் நூற்பாவை அமைத்துள்ளது. இவ்வகைப்பாடு வீரசோழிய வகைப்பாட்டை ஒத்துள்ளது.

நன்னூல் எழுத்துக்களின் பிறப்பை இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு என இரண்டாகத் தொகுத்துக் கூறுகிறது. இவ்வாறு கூறுவதில் இந்நூலே முதலிடம் பெறுகிறது.

**ஆவி யிடைமை யிடமிட றாகும்**
**மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை (நன்னூல், 75)**

**ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி**
**சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய (நன்னூல், 87)**

இடப்பிறப்புச் செய்திகளை நன்னூல் பெருந்தேவனார் உரையைத் தழுவிக் கூறுகிறது.

நன்னூல் தொல்காப்பிய நூற்பாக்களில் சிறிய மாற்றம் செய்து, கருத்துக்குத் தெளிவு சேர்த்திருப்பதையும் காண முடிகிறது.

**பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும்**

என்னும் நூற்பாவை நன்னூல்,

**மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே**

என்று மாற்றி அமைத்துள்ளதை இங்குக் குறிப்பிடலாம்.

இலக்கண விளக்கம் நன்னூலைப் பின்பற்றிப் பேச்சொலி களின் பொதுப்பிறப்பையும் எழுத்துக்களின் பிறப்பையும் விவரிக்கிறது. எனினும் இடப்பிறப்புக் கருத்துக்களில் இந்நூல்

வேறுபடுகிறது. வல்லெழுத்து உச்சியிலும் ஆய்தம் நெஞ்சிலும் பிறக்கும் என்பது இதன் கருத்து. இங்கு நச்சினார்க்கினியர் உரையின் செல்வாக்கைக் காண முடிகிறது.

தொன்னூல் விளக்கம் (3) எழுத்துக்களின் பிறப்பை விவரிப்பதை இன்றியமையாததாகக் கருதவில்லை. இந்நூல் ஒரே நூற்பாவில் பொதுப் பிறப்பை மட்டும் கூறி அமைகிறது. பேச்சொலி உறுப்புக்களுள் மிடறு, உரம், உச்சி மூன்றையும் முதலிடம் என்றும் இதழ், மூக்கு, அண்ணம், பல், நாக்கு ஐந்தையும் துணை இடம் என்றும் பகுத்துக் கூறுகிறது. முதலிடம் துணை இடம் என்னும் பகுப்பில் நேமிநாத உரையை இந்நூல் தழுவியுளது எனலாம்.

வீரமாமுனிவர் உரை வாயிலாகப் பிறப்புப் பற்றிய கருத்துக்கள் இன்றியமையாதன அல்ல என்பதைப் பின்வருமாறு உரைக்கிறார்.

> ஆயினும் இவற்றையும் எழுதின் முறையையும் எண்ணையும் உணர்த்துவதுறுபயனின்றிப் பொழுதழிவாகையானும் இனிச் சில வுரைப்பது முறையாமென்றமையானும் இங்ஙனமவற்றை நீக்கி எழுத்தின் வகுப்பும் விகாரமுமென மற்றிரண்டையும் விளக்கிக் கூறுதும். இதன் விரிவை யுணர வேண்டின் தொல்காப்பியத்துட் காண்க. அதினினும் விரிவு பேரகத்தியம், நன்னூல்.

பேரகத்தியம் இந்நாளில் முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. நன்னூல் தொல்காப்பியத்தினும் விரிவான செய்திகளைத் தரவில்லை. எனினும் முனிவர் நன்னூலைத் தொல்காப்பியத்தினும் சிறந்த நூல் என்று கருதுதலால், இவ்வாறு கூறியுள்ளார். மேலும், தொன்னூல் விளக்க எழுத்திலக்கணத்தின் இறுதியில் நன்னூலின் பிறப்பு இலக்கண நூற்பாக்களைத் தம் உரையில் இவர் எடுத்துரைத்துள்ளார்.

தொன்னூல் விளக்கம் உயிரும் இடையினமும் மிடற்றிலும் வல்லினம் மார்பிலும் மெல்லினம் உச்சியிலும் பிறக்கும் என எழுத்துக்களின் இடப்பிறப்பினைக் குறிப்பிடுகிறது.

முத்துவீரியம் எழுத்துக்களின் பிறப்பினைத் தொல்காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம் போன்று விரிவாகக் கூறுகிறது. இந்நூல் (43, 58) எழுத்துக்களின் இடப்பிறப்பைக் கூறுமிடத்து முந்தைய நூல்களிலிருந்து சிறிது வேறுபடுகிறது. உயிர், இடையினம், வல்லினம் ஆகிய மூவகை எழுத்துக்களின் பிறப்பிடத்தை வரையறுப்பதில் இந்நூல் நன்னூலை ஒத்துள்ளது. ஆனால் மெல்லினம் உச்சியிலும்

ஆய்தம் உந்தியிலும் பிறக்கும் என்னும் செய்தியில் வேறுபடுகிறது. இவற்றுள் மெல்லினத்தின் பிறப்பிடச் செய்தி தொன்னூல் விளக்கத்தில் காணப்படுவதே. ஆனால் ஆய்தம் உந்தியில் தோன்றும் என்பது இந்நூலின் புதிய செய்தியாகும்.

## மொழிநிலை

"தொல்காப்பியம் எழுத்துக்கள் சொல்லில் வருகிற இட வரையறை தமிழ்மொழியின் தொன்மை மரபினைப் பேணுகிற ஓர் இயல்பாகும் எனக் கருதுகிறது. எனவே அந்நூல் இச்செய்திகளை மொழிமரபு என்ற ஓர் இயலை அமைத்து விவரிக்கிறது" (பெ. சுயம்பு, தமிழ்மொழி அமைப்பும் வரலாறும், பக்கம் 83).

"தொல்காப்பியக் காலத்தில் வடமொழி எதிர்ப்பு உணர்வு தமிழறிஞர்களிடம் நிலவியது. எதிர்ப்பாளர்கள் தமிழ் மொழியின் தனித்தன்மையைப் பேணும் நோக்கில் மொழிக் கொள்கையில் சில கருத்துக்களை ஏற்றிருந்தனர். பிறமொழிச் சொற்களைத் தமிழ் மரபு பிறழாமல் ஏற்பது, பிறமொழி ஒலிகளை ஏற்றுக் கொள்ளாமை போல்வன அவற்றுள் சில (பெ. சுயம்பு, தமிழ் மொழி அமைப்பும் வரலாறும், பக்கம் 12).

## முதனிலை

தாய்மொழியின் தனித்தன்மையைத் தொல் மரபு பிறழாமல் பேணுதலை முதன்மை நோக்கமாகக் கொண்டதால், தொல்காப்பியம் சொல்லமைப்பில் எழுத்துக்கள் நிற்கும் இடத்தைச் சுட்டிக் காட்டுதலில் மிகுந்த கவனம் செலுத்துகிறது. மெய் எழுத்துக்களுடன் இணைந்து வருதற்குத் தகுதியான உயிர்களைக் கூறுதல், குறிப்பிட்ட எழுத்து வருதற்குரிய சொற்களின் எண்ணிக்கையை அறுதியிட்டுக் கூறுதல், 'உயிர்மெய் அல்லன மொழிமுத லாகா' என மொழி முதலில் மெய்ம்மயக்கம் வரக் கூடாது என எச்சரித்தல் போல்வன இந்த நோக்கத்தின் விளைவாக எழுந்த விதிகளாகும்.

*சகரக் கிளவியு மவற்றோ ரற்றே*
*அஐ ஔஎனும் மூன்றலங் கடையே (மொழி மரபு, 29)*

*உஊ ஒஓ என்னும் நான்குயிர்*
*வஎன் எழுத்தோடு வருதல் இல்லை (மொழி மரபு, 30)*

*ஆஎ*
*ஒ எனும் மூவுயிர் ஞகாரத் துரிய (மொழி மரபு, 31)*

**ஆவொ டல்லது யகரம் முதலாது (மொழி மரபு, 32)**

என்னும் விதிகள் தொல்காப்பியத்தின் மொழியுணர்வு அடிப்படையில் எழுந்தனவாகும்.

பிறமொழிச் சொற்களை (வடசொற்களை) இலக்கிய வழக்கில் தமிழ் ஒலிகளாக மாற்றி வழங்கலாம் என்பது தொல்காப்பியருக்கு உடன்பாடான கொள்கையாகும். இக்கொள்கைக்கு மேற்கூறப்பட்டவை போன்ற விதிகள் முரண்பாடானவை என்று கருதக்கூடாது. பிறமொழிச் சொற்களை ஏற்பதனால், அம்மொழி களின் சொல்லமைப்பினையும் தமிழின் இயல்பாகக் கொண்டு விடக் கூடாது என்னும் நோக்கில் இவ்விதிகளை அவர் கூறுகிறார்.

நச்சினார்க்கினியர் சகரம் அகரத்தோடு மொழி முதலில் வருதலைத் தொல்காப்பியக் காலத்திற்குப் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சி எனக் கருதுகிறார்.

> சட்டி சகடம் சமழ்ப்பு என்றாற் போல்வன 'கடிசொல் இல்லை' என்பனாற் கொள்க (தொல்.எழு. 61).

கமில் சுவலபில் (Comparative Dravidian Phonology, page. 38, 42) சகரம் அகரத்தோடு மொழி முதலில் வருதல் தொல் திராவிட மொழியில் இடம் பெற்றிருந்து, பின்னர்த் தொல்காப்பியக் கால மொழியில் மறைவுற்றதால் தொல்காப்பியம் அதனைக் குறிப்பிடவில்லை எனக் கூறுகிறார். மேலும், அவர் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள சமர் போன்ற சொற்கள் தொல்திராவிட மொழியினவாக இருக்கலாம் எனவும் கருதுகிறார்.

"தொல்காப்பியம் (எழு. 193) குறிப்பிடும் அழன் என்னும் சொல் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டப் பேச்சு வழக்கில் சழன் என வழங்குகின்றது. எனவே சகரம் அகரத்தோடு மொழி முதலில் வருதல் தொல்காப்பியக் கால மொழியில் பெரும்பான்மை வழக்கில் மறைவுற்ற போதிலும் வட்டார வழக்குகளில் இடம் பெற்றிருந்தது" (பெ. சுயம்பு, தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும் ஓர் ஒப்பாய்வு, பக்கம் 42). பெரும்பான்மை வழக்கில் மறைந்ததால், அதனை அறியாத தொல்காப்பியம் சகரம் அகரத்துடன் சேர்ந்து மொழி முதலில் வராது எனக் கூறுகிறது.

வீரசோழியம் (7),

**ஆவி யனைத்துங் கசத நபமவ் வரியும் வவ்வில்**
**ஏவிய எட்டும்யவ் வாறும்ஞந் நான்கும்**

என மொழி முதலில் வருகிற எழுத்துக்களைக் கூறுகிறது. உரையாசிரியர் பெருந்தேவனார்,

> உயிரெழுத்துப் பன்னிரண்டும் ககார சகார தகார நகார பகார மகார வர்க்கங்களும் வகார வர்க்கத்தில் உஊஒஓ அல்லாத எட்டெழுத்தும், யகார வர்க்கத்தில் அஆஉஊஓஔ வாகிய ஆறெழுத்தும் ஞகார வர்க்கத்தில் அஆஎஒ ஆகிய நான்கெழுத்தும் ஆகிய இவை யனைத்தும் . . . . செந்தமிட் சொல்லுக்கு மொழிக்கு முதலாகிய எழுத்துக்களாம்

என்று உரைக்கிறார்.

பிற்கால நூல்களுள் இலக்கண விளக்கம் ஒழிந்த யாவும் வீரசோழியத்தைப் பின்பற்றிச் சகரம் பன்னிரண்டு உயிர்களுடனும் சேர்ந்து மொழி முதலில் வரும் எனக் கூறுகின்றன. ஆனால் இலக்கண விளக்கம் சை, சௌ இரண்டும் மொழி முதலில் வாரா எனக் கூறுகிறது.

ஞகரமும் யகரமும் மொழி முதலில் வருதலை விவரிப்பதிலும் நூல்களுக்கிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. ஞ,ய இரண்டும் மூன்று உயிர்களுடன் (ஞயவின்கண் மும்மூன்று) வருதலை நேமிநாதம் (7) குறிப்பிடுகிறது. நன்னூல் ய, யா, யு, யூ, யோ, யௌ என்பனவும் ஞ, ஞா, ஞெ, ஞொ என்பனவும் (103, 104) மொழி முதலில் வரும் எனச்சுட்டுகிறது. நன்னூலின் கருத்து பெருந்தேவனார் உரையைத் தழுவிக் காணப்படுகிறது. சுவாமிநாதம் (21) ஞகரமும் யகரமும் ஆறு உயிர்களுடன் வரும் எனக் கூறுகிறது. இந்நூல் இன்னின்ன உயிர்களுடன் வரும் எனச் சுட்டிக் காட்டவில்லை. இந்நெறி வீரசோழியத்திலும் நேமிநாதத்திலும் காணப்படுவதாகும். இத்தகைய விவரிப்பு முறை தமிழ் இலக்கண அறிவு நிரம்பப் பெற்றோருக்கும் மயக்கத்தைத் தர வல்லது.

முத்துவீரியம் யகரத்தைப் பொறுத்த வரையில் நன்னூலைத் தழுவுகிறது. ஆனால் ஞகரம் பற்றிய விளக்கம் புதியது. இந்நூல் ஞ, ஞா, ஞெ, ஞொ என்னும் நான்கும் மொழி முதலில் வரும் எனக் கூறுகிறது.

இலக்கண விளக்கம் (27) ச, சா, சி, சீ, சு, சூ, செ, சே, சொ, சோ என்னும் பத்துச் சகர வரிசையும் ஞா, ஞெ, ஞொ என்னும் மூன்று ஞகர வரிசையும் யா என்னும் யகர உயிர்மெய் ஒன்றும் மட்டுமே மொழி முதலில் வருதலைச் சுட்டுகிறது.

பிற்கால இலக்கண நூல்களுள் இலக்கண விளக்கத்தின் கொள்கை தனித்துக் காணப்படுகிறது. வீரசோழியம் முதலிய நூல்கள் யாவும் ஒரு மொழியில் வழங்குகிற பிற மொழிச் சொற்கள், கிளைமொழிச் சொற்கள் எனும் சொற்கள் யாவற்றையும் அம்மொழிக்குரிய இயல்பாகக் கொண்டு, அவற்றுக்கு இலக்கணம் கூறுகின்றன. ஆனால் இலக்கண விளக்கம் கிளைமொழிச் சொற்களை இழி வழக்கு எனக் கூறுகிறது. பிறமொழிச் சொற்களை ஒரு மொழிக்கு உரிய இயல்பாகா என ஒதுக்குகிறது. இவை இரண்டையும் ஒரு மொழியின் தொன்மையான அமைப்புக்கு இணையானவையாகக் கொண்டு இலக்கணம் கூறுதல் தகாது என்பது இந்நூலின் கொள்கையாகும். இக்கொள்கையை இந்நூலாசிரியரின்,

> சையம் சௌரியம் யவனர் யுத்தி யூபம் யோகம்
> யௌவனம் எனவும்,
>
> "ஞமலி தந்த மனவுச்சூ லுடும்பின்"
>
> எனவும், ஞழியிற்று எனவும் விலக்கியனவும் வருமாலோ வெனின், அவை முறையானே ஆரியச் சிதைவெனவுந் திசைச்சொலெனவும் இழிவழக்கெனவும் மறுக்க

என்னும் உரைப்பகுதியில் அறியலாம். இதனை நச்சினாக்கினியர் உரையிலும் காணலாம்.

> சையம் சௌரியம் என்பவற்றை வடசொல் என மறுக்க. *(தொல்.எழு. 61).*
>
> ஞமலி தந்த மனவுச் சூலுடும்பு
>
> என்பது திசைச்சொல், ஞழியிற்று என்றாற் போல்வன இழி வழக்கு *(தொல்.எழு. 63).*
>
> யவனர், யுத்தி, யூபம், யோகம், யௌவனம் என்பன வடசொல் என மறுக்க *(தொல்.எழு. 64).*

நன்னூல் *(105)* அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம் என்பன போன்ற சுட்டு, வினாச் சொற்களைப் பகுத்து, இவற்றில் ஙகரம் அகரத்துடன் மொழி முதலில் வருகிறது எனக் கூறுகிறது. இக்கருத்தினை நன்னூலைப் பின்பற்றுகிற நூல்கள் கூட ஏற்கவில்லை. இதனை ஏற்காத இலக்கண விளக்க ஆசிரியர்,

**சுட்டியா வெகர வினாவழி யவ்வை**
**யொட்டி ஙவ்வு முதலா கும்மே**

> என்றாரும் உளராலோவெனின் முதலாவன இவை ஈறாவன இவையென ஈண்டுக் கருவி செய்தது மேல் நிலைமொழி யீறு வருமொழி முதலோடு இயையப் புணர்க்கும் பொருட்டன்றே? அவ்வாறு புணர்த்தற்கு இயைபில்லாத ஙகரமும் அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் யாங்ஙனம் எங்ஙனம் என் இவ்வாறு மொழிக்கு முதலாமென்றல் பயனில் கூற்றாமென மறுக்க. அன்றியும், அங்கு ஆங்கு யாண்டு யாண்டையது அன்ன என்ன என்றாற் போலும் இவ்வொற்றுக்களும் மொழிக்கு முதலாமென்றல் வேண்டுதலான் அவர்க்கும் அது கருத்தன்றென்க (இலக்கண விளக்கம், 27)

என்று மறுத்துரைக்கிறார்.

நன்னூலாசிரியர் அங்ஙனம் முதலிய சொற்களில் ஙனம் என்பது இடம், தன்மை போன்ற பொருளை உணர்த்துவதைக் கருத்திற் கொண்டு, அதனை ஒரு முழுச் சொல்லாகக் கருதுகிறார். இச்சொல் சுட்டு, வினா அடிச் சொற்களைச் சார்ந்தன்றி, தனித்து வழங்காது. எனவே இத்தகைய சார்புச் சொற்களுக்கு மொழி முதல் நிலை, இறுதி நிலை ஆகியன கூறுதல் தமிழ் இலக்கண மரபாகாது.

### மெய்ம்மயக்கம்

மெய்ம்மயக்கத்தை மெய்ம்மயக்கு, உடனிலை எனும் வகைகளில் தொல்காப்பியம் விவரிக்கிறது. எனினும் இது தனிமொழியில் அமையும் என்றோ புணர்மொழியில் அமையும் என்றோ இந்நூல் குறிப்பிடவில்லை.

இளம்பூரணர் (தொல்.எழு. 23) 'மெய்ம்மயக்கம் ஒரு மொழிக்கும் புணர்மொழிக்கும் பொது' எனக் கூறுகிறார். ஆனால் நச்சினார்க்கினியரோ (தொல்.எழு. 22, 23, 27-30) மெய்ம்மயக்கம் ஒரு மொழிக்கே உரியது எனக் கூறுகிறார். எனினும் அவர் இதற்குத் தனிமொழிகளை மட்டுமன்றி வினைத்தொகை, பண்புத்தொகை அமைப்பில் உள்ள புணர்மொழிகளையும் சான்று காட்டுகிறார். மேலும், பெரும்பான்மையான மெய்ம்மயக்கங்களுக்குத் தனிமொழிச் சான்று இலக்கியங்களிலோ ஏனைய இலக்கண உரைகளிலோ காணப்படவில்லை. எனவே தனிமொழியிலும் புணர்மொழியிலும் அடுத்தடுத்து அமையத் தகுதியான எழுத்துக்களைச் சுட்டிக் காட்டுவதற்காகவே தொல்காப்பியம் மெய்ம்மயக்கங்களைப் பட்டியலிட்டுக் கூறுகிறது எனலாம். வேங்கடராசுலு ரெட்டியாரும் பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியும் இவ்வாறே கருதுகின்றனர்.

வீரசோழியம் (4) தம்முன்னர்த் தாமும் பிறவுமாக வந்து ஈரொற்றுடனிலையாகவும் மூவொற்றுடனிலையாகவும் மெய்கள் மயங்கும் என்று கூறுவதுடன், மெய்ம்மயக்க இலக்கணத்தை முடித்துக் கொள்கிறது. நேமிநாதமும் தொன்னூல் விளக்கமும் இது பற்றி யாதும் கூறவில்லை. ஆனால் நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் போல்வன தொல்காப்பியச் செய்திகளை விரிவாக வழிமொழிகின்றன. மேலும், இலக்கண விளக்க ஆசிரியர் இளம்பூரணரைப் பின்பற்றி மெய்ம்மயக்கம் தனிமொழிக்கும் புணர்மொழிக்கும் பொதுவானது என உரைக்கிறார். ஆனால் முத்துவீரியம் தனிமொழிக்கே உரியது எனக்கொண்டு, முதல் நிலைக்கும் இறுதி நிலைக்கும் நடுவில் மெய்ம்மயக்கத்தை விவரிக்கிறது.

தொல்காப்பிய மெய்ம்மயக்கச் செய்தியில் ய்ங, ர்ங, ழ்ங என்பன இடம் பெற்றுள்ளன. இதற்கு வேய்ஙனம், வேர்ஙனம், வேழ்ஙனம் என்னும் சான்றுகளை உரையாசிரியர்கள் தருகின்றனர். இவற்றை மட்டும் நன்னூல் முதலிய பிற்கால நூல்கள் நீக்கியுள்ளன.

உரையாசிரியர்கள் தருகிற வேய்ஙனம் முதலிய மூன்றும் புணர்மொழிகளாக உள்ளன. ஙகரம் மொழிமுதலில் வரும் எனத் தொல்காப்பியம் கூறாததால் ய்ங, ர்ங, ழ்ங என்பன புணர்மொழியில் வரும் எனக் கொள்ளுதல் இயலாது. மேலும், இவை போன்ற வடிவங்களை இலக்கியங்களிலும் காணமுடியவில்லை. எனவே இவை பிற்கால இலக்கண அறிஞர்களுக்குப் புதிராகத் தோன்றியதால் அவர்கள் இவற்றை நீக்கியுள்ளனர்.

வீரசோழியம், நேமிநாதம், தொன்னூல் விளக்கம் ஆகியன புணர்ச்சி இலக்கணத்தை விரிவாகக் கூறுகின்றன. மெய்ம்மயக்கத்தைப் புணர்ச்சி விதிகளின் சுருக்கமாகக் கருதுவதனால், இந்நூல்கள் மெய்ம்மயக்கச் செய்திகளை விவரிப்பது தேவையற்றது எனக் கருதுகின்றன.

## இறுதி நிலை

தொல்காப்பியம் மொழி இறுதியில் வரத் தகுந்த எழுத்துக்களை விவரிக்குமிடத்தும் துல்லியமாகக் கூறுகிற முறையையே மேற்கொள்கிறது. இம்முறை மொழி முதல் எழுத்துக்களை விவரிப்பதில் விடவும் இங்குச் சொற்களை எண்ணிக்கையுடன் அறுதியிட்டுரைப்பதாகக் காணப்படுகிறது. ஔகாரம் க, வ எனும் இரு மெய்களுடன் மட்டுமே இறுதியில் வரும்; நகரத்துடன் மட்டுமே ஒகரம் இறுதியாகும்; சகர உகரம், நகரம் ஆகியன இரு சொற்களிலும் பகர உகரம், ஞகரம் ஆகியன ஒரு

சொல்லிலும் மட்டுமே இறுதியில் வரும்; வகரம் நான்கு சொற்களில் ஈறாகும் என்னும் விதிகள் தொல்காப்பியம் தமிழ்ச் சொற்பரப்பினை முற்றிலுமாக அறிந்து இலக்கணம் கூறுகிறது என்பதற்குச் சான்றுகள் ஆகும்.

தொல்காப்பியம் சொற்களின் இறுதியில் வராத எழுத்துக்களையும் இனம் காட்டுகிறது.

**எஎன வருமுயிர் மெய்யீ றாகாது (தொல்.எழு. 60)**

**ஏஓ எனுமுயிர் ஞகாரத் தில்லை (தொல்.எழு. 62)**

**உஊகாரம் நவவொடு நவிலா (தொல்.எழு. 63)**

வீரசோழியம் (8) பத்து உயிர்களும் ன், ம், ண், ய், ர், ல், ழ், ள் ஆகிய மெய்களும் சொல் இறுதியில் வரும் எனக் கூறுகிறது. பெருந்தேவனார் 'உயிரெழுத்துக்களுள் எகர ஒகர மொழிந்த மற்றப் பத்தெழுத்தும்' என்று விளக்கம் தருகிறார்.

சில எழுத்துக்களை இறுதியாகக் கொண்ட சொற்களை எண்ணிக்கையிட்டுத் தொல்காப்பியம் கூறுதலிலிருந்து, இவை வழக்கில் படிப்படியாக மறைந்து வருதலை உணரலாம். இவற்றின் மறைவு சங்க இலக்கியங்களை விடவும் பிற்கால இலக்கியங்களில் மிகுதியாகவுளது. ஞகர ஈற்றுச் சொல் இலக்கியங்களில் காணப்படவில்லை. நகர ஈற்றுச் சொல் சங்க இலக்கியங்களில் ஒன்று (வெரிந்) மட்டுமே இடம் பெற்றுள்ளது (T. Natarajan, Language of Sangam Literature and Tolkappiyam, page 11-19). பிற்கால இலக்கியங்களில் அதுவும் மறைந்து விட்டது. வகர ஈற்றுச் சொற்கள் சங்க இலக்கியங்களில் காணப்பட்ட போதிலும், பிற்காலத்தில் அவற்றைக் காண முடிய வில்லை. எனவே வீரசோழியம் தன் கால மொழியில் வழங்கிய சொற்களுக்கு மட்டுமே இலக்கணம் கூறுகிறது. மேலும், தமிழ் மொழி அமைப்பினைப் பொதுநிலையில் விவரிக்கும் நோக்குடையதால், இந்நூல் சொற்களை எண்ணிக்கையிட்டுத் துல்லியமாகச் சுட்டிக்காட்ட வில்லை.

நேமிநாதம் (10) ஒன்பது உயிர்கள், மூன்று மெல்லினம், இடையினங்கள் ஆறு ஆகியன சொல் இறுதியில் வரும் எனக் கூறுகிறது. ஔகாரம் நீக்கப்பட்டிருப்பதை உரையாசிரியர் விளக்கம் தெரிவிக்கிறது. சொல்லிறுதியில் ஔகாரத்தின் மறைவினை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் போன்றவற்றால் அறிய முடிகிறது. எனவே நேமிநாதத்தின் கூற்றுச் சிறப்பாக அமைகிறது. எனினும் வகர மெய்யை மீண்டும் சேர்த்துக் கூறுவது ஏற்புடையதாகத்

தோன்றவில்லை. இங்கு இந்நூல் பழைய இலக்கிய, இலக்கண வழக்கிற்கு முன்னுரிமை தருகிறது.

நன்னூல் இருநூற்பாக்களில் சொல் இறுதி எழுத்துக்களை விவரிக்கிறது. அவற்றுள் ஒன்று பொதுநிலையிலும் அதனைத் தொடர்ந்து வருவது குறிப்பிட்டுச் சொல்வதாகச் சிறப்பு நிலையிலும் காணப்படுகின்றன.

*ஆவி ஞணநம னயரல வழளமெய்*
*சாயு முகர நாலாறு மீறே (நன்னூல், 106)*

*குற்றுயி ரளபி னீறா மெகரம்*
*மெய்யோ டேலா தொந்நவ் வொடாமௌக்*
*ககர வகரமொ டாகு மென்ப (நன்னூல், 107)*

'குற்றுயிர் அளபின் ஈறாம்' என்பது உயிரளபெடையின் அடையாளமாக இடப்படுகிற இனக்குறில் வரிவடிவத்தைக் கருத்தில் கொண்டு கூறப்படுகிறது. நன்னூல் இளம்பூரணர் உரையிலிருந்து இதனைப் பெற்றுளது. நொ, கௌ, வௌ என்பன முந்தைய இலக்கண மரபை ஏற்றுக் கூறப்படுகின்றன.

இலக்கண விளக்கம் நன்னூலின் இரு நூற்பாக்களையும் எடுத்து மொழிகிறது. ஆனால் இதன் ஆசிரியர் உரையில் தொல்காப்பியத்தைப் போன்று சொல் வரையறைகளைச் சுட்டிக் காட்டுகிறார். இவ்வுரைச் செய்தி பெரும்பான்மையும் நச்சினார்க்கினியர் கருத்தை அடியொற்றியதாகும்.

> உரையிற் கோடலான் ஔகாரந் தானே நின்று ஈறாகா தெனவும் ஙகரத்தோடு பன்னிரண்டு உயிரும் ஞகரத்தோடு ஏகாரமும் நகரத்தோடு உகரஊகாரமும் வகரத்தோடு ஊகாரமுங்கூடி ஈறாகாவெனவும் கொள்க.
>
> (இலக்கணவிளக்கம், 29)

தொல்காப்பியம் ஏ,ஓ இரண்டும் ஞகரத்துடன் சேர்ந்து சொல் இறுதியில் வாரா எனக் கூறுகிறது. ஆனால் இலக்கண விளக்கம் ஏகாரம் மட்டுமே வராது எனக் கூறுகிறது. இக்கருத்து வளர்ச்சிக்குத் தொல்காப்பிய உரை காரணமாகிறது.

தொன்னூல் விளக்கம் (10),

**எஓ ஔவு மெல்லின ஙவ்வு**
**நீத்துயிர் ணமன விடையின மீறே**

எனக் கூறிச் சொல் இறுதி எழுத்துக்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கிறது.

முத்துவீரியம் நன்னூல் குறிப்பிடுகிற செய்திகளைத் தருவதோடு, சில புதிய செய்திகளையும் கூறுகிறது. அவை தொல்காப்பியத்தைப் போன்று சொற்களை அறுதி இட்டுரைப்பதாக அமைகின்றன. ஞகரமும் நகரமும் ஒவ்வொரு சொல்லில் இறுதியாகும்; உ, ஊ இரண்டும் நகரமோடு சேர்ந்து இறுதி ஆகா என்பன முத்துவீரியத்தில் புதிய செய்திகளாகும். இச்செய்திகளுள்,

உஊ நகரமோ டுறாவென மொழிப (முத்துவீரியம், 87)

என்பது தொல்காப்பியத்தின்,

உஊ காரம் நவவொடு நவிலா (மொழிமரபு, 41)

என்னும் நூற்பாவிற்குச் சிறந்த விளக்கமாகும். தொல்காப்பிய நூற்பாவின் தொல் வடிவம் 'உ ஊ காரம் நவ்வொடு நவிலா' என்பதாகும். இது ஏடு பெயர்த்து எழுதியோரால் புள்ளி நீக்கப்பட்டு, 'நவவொடு' என்றாகியுள்ளது. சி.சுப்பிரமணியனும் (Phonology, part I, page 101) தே. ஆண்டியப்பனும் (காப்பியர்நெறி எழுத்தியல், பக்கம் 3) இவ்வாறே விளக்குகின்றனர்.

## புணர்ச்சி

"புணரியல்களை விவரிக்கும் முறையில், தமிழ் இலக்கண நூல்களில் நான்கு விதம் காணப்படுகிறது. (1) தொல்காப்பியம் ஆறு இயல்களில் விரிவாகவும் விளக்கமாகவும் வருணிக்கிறது. (2) வீரசோழியமும் நேமிநாதமும் புணர்ச்சியை எழுத்தியலின் ஒரு உட்பகுதியாக்கித் தனி இயல் அமைக்காமல் பேசுகின்றன. (3) நன்னூல், இலக்கண விளக்கம் ஆகிய இரண்டும் மூன்று இயல்களில் புணர்ச்சியை விவரிக்கின்றன. (4) தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம் ஆகிய மூன்றும் ஒரே ஒரு இயலில் புணர்ச்சியை வருணிக்கின்றன. இப்படித் தமிழ் இலக்கண நூல்கள் புணர்ச்சியை விவரிக்கும் இயல்களின் எண்ணிக்கையில் மட்டும் அல்லாமல் வருணனை முறையிலும் வேறுபடுகின்றன (செ.வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, பக்கம் 230).

புணர்ச்சிக் கருத்துக்களை விவரிக்கும் அளவிலும் முறையிலும் இலக்கண நூல்கள் வேறுபடினும், அவை யாவற்றுக்கும்

புணர்ச்சி இலக்கணம் பற்றிய நோக்கம் ஒன்றாகவே காணப்படுகிறது. தமிழ்மொழியின் தொன்மை ஒலியியல்பைப் பேணுதல், பழைய வழக்குகளைப் புரிய வைத்தல் என்னும் நோக்கங்கள் புணர்ச்சி விதிகளை விவரிப்பதற்கு அடிப்படைக் காரணங்களாக உள்ளன.

ஒலியியல்பைப் பேணுதல் என்னும் நோக்கம் காரணமாக ஒலிமிகுதல், ஒலி மாற்றம் என்னும் இருவகை விதிகள் மிகுதியாக நூல்களில் பேசப்படுகின்றன.

## ஒலிமிகுதல்

ஒலிமிகுதல் என்னும் விதி பெரும்பான்மையும் உயிரீற்றுச் சொற்களுடன் பிற சொற்கள் புணருமிடத்து இடம் பெறுகிறது. குறிப்பாக, வருமொழி முதலில் வல்லெழுத்து அமையுமாயின் அவ்வல்லெழுத்து மிகும் என்னும் விதியே புணர்ச்சி இலக்கணத்தில் பெரிதும் ஆதிக்கம் செலுத்துகிறது. பேச்சுமொழியில் வல்லெழுத்து ஒலிப்புடையதாகவும் உரசொலியாகவும் மாற்றி ஒலிக்கப்பட்ட நிலையில், தொன்மையான ஒலிப்பில்லா ஒலியைப் பேணிக்காக்கும் நோக்கில் இவ்விதியை முந்தை இலக்கண அறிஞர்கள் உருவாக்கி இருக்க வேண்டும். தொல்காப்பியமும் பின்னாளைய இலக்கண நூல்களும் இவ்விதியை முந்தை மரபை ஏற்றுப் பின்மொழிகின்றன. தவிர, கல்வெட்டுக்களில் ஒரு குறிப்பிட்ட சொல்லை வல்லெழுத்தை மிகுத்தும் மிகாமலும் எழுதுகிற இருவகை வழக்குகளைக் காண முடிகிறது. எனவே ஒரு சீர்மையாக, எழுதுதலாகிய பிழையற்ற தன்மையை வலியுறுத்தும் நோக்கிலும் இவை போன்ற புணர்ச்சி விதிகளுக்கு இலக்கண நூல்கள் முதன்மை தந்து விவரிக்கின்றன எனவும் கொள்ளலாம்.

ஒலிமிகுதலில் இடம் பெற்றுள்ள மற்றொரு விதி உடம்படுமெய் ஆகும். இதனை விவரிப்பதில் தொல்காப்பியத்திற்கும் பிற்கால நூல்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது.

தொல்காப்பியம் (எழு. 141) உடம்படுமெய் வருதலை,

**எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே**
**உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்**

என்று கூறுகிறது.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் உடம்படுமெய் வருதல் கட்டாய விதி அன்று; விருப்ப விதியே என்று கூறுகின்றனர்.

நச்சினார்க்கினியர் மெய்யீற்றுச் சொற்களுடன் உயிர் முதற் சொற்கள் புணருமிடத்தும் உடம்படுமெய் வரும் என்பதை,

> ஒன்றென முடித்தல் என்பதனால் விண்வத்துக் கொட்கும் எனச் சிறுபான்மை புள்ளியீற்றானும் வரும். செல்வுழி உண்புழி என்பன வினைத்தொகை என மறுக்க

என்று கூறுகிறார். இக்கருத்து இளம்பூரணருக்கும் உடன்பாடானது என்பதை அடிகளாசிரியரின் செய்தி வெளிப்படுத்துகிறது. அச்செய்தி வருமாறு:

> உயிரீறும் புள்ளியீறும் நிலைமொழியாய் நிற்க உயிர்வரின் அவ்வுயிர் உடம்படுமெய் பெறும் என்றும், உயிர் ஈறு நிலை மொழியாய் நிற்க உயிர்வரின் அவ்வுயிர் உடம்படுமெய் பெறும் என்றும் இரண்டு கொள்கைகள் உள்ளன.
>
> தொல்காப்பியர் உடம்படுமெய்யினைக் கூறும் இந்நூற்பாவில் நிலைமொழியினை 'உயிர் வருவழியே' என்றும் கூறியுள்ளதால், முதற்கொள்கையினைக் கொண்டவராவர். எனக்குக் கிடைத்த இளம்பூரணர் உரைச்சுவடி இரண்டில் ஒரு சுவடியில் ''உயிரீறும் புள்ளியீறும் உயிர் முதன் மொழியோடு புணரும் வழி நிகழ்வதோர் கருவி கூறுதல் நுதலிற்று" என்ற பாடமே உள்ளது. நச்சினார்க்கினியர். . . . "செல்வுழி உண்புழி என்பன வினைத்தொகை என மறுக்க" என்பர். ஆனால், மாறனலங்கார வுரையாசிரியர் சார்வுழி என்பது கொள்வுழி, செல்வுழி என்பன போல ஒற்றீற்று வகர வுடம்படுமெய் வந்தது என்பர் (மாற. 471.உரை).

இளம்பூரணர் இ,ஈ,ஐகார ஈற்றுச் சொற்களை அடுத்து யகரமும் பிற உயிரீற்றுச் சொற்களை அடுத்து வகரமும் உடம்படு மெய்யாக வருதலைக் குறிப்பிடுகிறார். நச்சினார்க்கினியர் இக்கருத்துடன் ஏகார இறுதிச் சொற்களை அடுத்து யகரம் அல்லது வகரம் வரும் எனக் கூறுகிறார்.

தொல்காப்பிய நூற்பா நிலை மொழி ஈறு பற்றிக் குறிப்பிட வில்லை; வருமொழி முதலில் உயிர் வருதலையே சுட்டுகிறது. எனினும் நச்சினார்க்கினியரும் பிற்கால உரையாசிரியர் சிலரும் (கமில்சுவலபில், சுப்பிரமணிய சாஸ்திரி போன்றோர்) நிலைமொழியீறும் வருமொழி முதலும் உயிராக உள்ள சொற்களில் உடம்படுமெய் வருதலையே

கூறுகின்றனர். இக்கூற்று பிற்காலத்தில் உயிர் மயக்கம் குறைந்து, உயிர் முன் உயிர் வருமிடத்து உடம்படுமெய் வருதல் என்னும் வழக்கு மிகுதியானதைக் கருத்தில் கொண்டு கூறியதாகும். தெ.பொ.மீனாட்சி சுந்தரன் (தமிழ்மொழி வரலாறு, பக்கம் 90) உயிர் மயக்கமே முந்தைய தமிழ் இயல்பு என்றும் உடம்படுமெய் வருதல் பிந்தைய மொழி வளர்ச்சி என்றும் கூறுகிறார்.

வீரசோழியக் காலத்தில் உடம்படுமெய்கள் வருதல் பரந்த வழக்காகியதோடு, அவற்றின் வருகை முறையில் தெளிவான வரையறையும் காணப்படுகிறது. உயிரீற்றுச் சொற்களை அடுத்து உயிர் புணருமிடத்து யகரம் அல்லது வகரம் உடம்படு மெய்யாக வருதலை இந்நூல் குறிப்பிடுகிறது.

**மூன்றொடு நான்கொன்ப தாமுயிர்ப் பின்னுயிர் முந்தினடு**
**ஆன்ற யகாரம்வந் தாகம மாகும்அல் லாவுயிருக்**
**கேன்ற வகாரம் எட்டேற்கும் இரண்டும்**

**(வீரசோழியம், 13)**

என்னும் விதி இ, ஈ, ஐகார ஈற்றுச் சொற்களை அடுத்து யகரமும் ஏகாரத்தை அடுத்து யகரம் அல்லது வகரம் பிறவுயிர்களை அடுத்து வகரமும் உடம்படு மெய்யாக வருதலைக் கூறுகிறது.

நன்னூல் இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் உள்ளிட்ட பிற்கால நூல்கள் யாவும் வீரசோழியக் கருத்தையே பின்மொழிகின்றன.

## ஒலிமாற்றம்

ஒலிமாற்றங்களுள் ல்,ள்,ன்,ண் ஈற்றுச் சொற்களுடன் வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் புணரும் விதிகள் இன்றியமையாதனவாக எல்லா நூல்களிலும் கருதப்படுகின்றன. இவற்றைத் தொல்காப்பியம் முதலான எல்லா நூல்களும் விவரிக்கின்றன. ல்,ன் இரண்டும் வல்லெழுத்துக்கள் புணரும் போது, றகரமாகின்றன. மெல்லெழுத்துக்கள் புணரும் போது லகரம் னகரமாகிறது. ள்,ண் இரண்டும் வல்லெழுத்துக்கள் புணரும் போது டகரமாகின்றன. மெல்லெழுத்துக்கள் புணரும் போது ளகரம் ணகரமாக மாறுகிறது. இவ்வொலி மாற்றம் ஓரினமாதலின் விளைவாக நிகழ்கிறது.

வீரசோழியத்தில் புதிய செய்திகள் சிலவும் காணப்படு கின்றன. இவை ஏனைய நூல்களில் இடம் பெறவில்லை. ளகர ஈற்றுச்

சொற்கள் ஏற்கிற விதிகளை ழகர ஈற்றுச் சொற்களும் ஏற்பதாக இந்நூல் (18) கூறுகிறது. ழகரம் வல்லெழுத்துக்களுடன் புணரும் போது டகரமாகவும் மெல்லெழுத்துக்களுடன் புணரும்போது ணகரமாகவும் மாறுகிறது.

வீரசோழியத்தில் (15, 17) இடம் பெற்றுள்ள புதிய செய்திகளுள் அண்ணவொலியாதலும் குறிப்பிடத்தக்கது. இ,ஈ,ஐ ஆகிய முன்னுயிர்களுடனும் யகரத்துடனும் புணரும் போது நகரம் ஞகரமாக மாறுகிறது.

வீரசோழியம் (82) ளகரமும் ழகரமும்; றகரமும் சகரமும் தம்முள் உறழ்ந்து வழங்குதலையும் குறிப்பிடுகிறது. உரையாசிரியர் பெருந்தேவனார்,

> நாளி, கோளி, மூளை, உளக்கு, வாளை, வளி எனவும்; விழக்கு, பழிங்கு, தழிகை, இழமை எனவும்; வெச்சிலை, முச்சம், கச்சை எனவும்; உற்றியம் போது எனவும்; மற்றியம் பிற்றை வாங்கி விற்றான் எனவும். . .

என்று சான்று தந்து விளக்குகிறார். மேலும் அவர்,

> மற்றும் இவனைப் பாக்க, இங்காக்க, அங்காக்க எனவும்; இப்படிக் கொற்ற, அப்படிக் கொற்ற எனவும்; சேத்து நிலம், ஆத்துக்கால் எனவும்; வாயைப் பயம், கோயிமுட்டை எனவும்; உசிர், மசிர் எனவும்; பிறவாற்றானும் அறிவில்லாதார் தமிழைப் பிழைக்க வழங்குவர்.

என்றும் தம் காலத்து வழங்கிய ஒலிமாற்றம் பற்றிக் குறிப்பிடுகிறார்.

வீரசோழியம் எண்பத்திரண்டவாது விதியில் கூறப்பட்ட கருத்தும் உரையாசிரியர் கருத்தும் வட்டார, சமூகக் கிளைமொழிகளின் வழக்குகளாக உள்ளன. இவ்வழக்குகளை எழுத்து மொழியில் ஏற்கக் கூடாது என்பது வீரசோழிய, உரையாசிரியர்களின் கொள்கையாகும். பேச்சு மொழி வழக்குகளைத் தரவுகளாகக் கொண்டு இலக்கணம் எழுதுதல் கூடாது என்றும் அவற்றை எழுத்து மொழியில் பயன்படுத்துதல் தகாது என்றும் வீரசோழியம் கருதுகிறது. எனவே வீரசோழியம் முந்தைய எழுத்து வழக்கோடு, தன்கால எழுத்து வழக்கினையும் தரவுகளாகக் கொண்டு இலக்கணம் கூறுகிறது எனலாம்.

## சில சிறப்பு விதிகள்

தொல்காப்பியம் தன்கால மொழியிலும் இலக்கியங்களிலும் பயின்று வந்த நாடுரி, வேணவா, தொண்ணூறு, தொள்ளாயிரம், முன்றில், பொலம் (படை) போன்ற தொடர்களுக்குப் புணர்ச்சி விதி கூறுகிறது. இத்தொடர்களைத் தன் கால மொழியில் வழங்கிய சொற்களின் அடிப்படையில் நிலைமொழி, வருமொழியாகப் பகுத்து, வழக்கிலுள்ள அமைப்பைத் தருவிக்கும் வண்ணம் புணர்ச்சி விதிகளை உருவாக்குகிறது. இங்கு இத்தொடர்களுக்கு உரிய உண்மையான வடிவத்தைத் தேடுவதில் தொல்காப்பியம் முனையவில்லை; இம்முயற்சியில் ஒலிமாற்ற இயல்பு குறித்தும் கவலைப்படவில்லை. இதனால் சில பிழைகள் நேர்ந்துள்ளன.

"நாடுரி என்பதனை நாழி + உரி எனப் பகுத்து, ழகரம் டகரமாக மாறுவதாகத் தொல்காப்பியம் (எழு. 240) கூறுகிறது. இத்தொடரின் நிறுத்த சொல் நாழி என்னும் தமிழ்ச்சொல் அன்று; அதன் திரிந்த வடமொழிச் சொல்லாகிய நாடி என்பதே. இச்சொல் வடமொழியைப் போற்றிய புலவர்களின் வழியே தமிழகத்திலும் வழங்கியதன் விளைவாக, நாடுரி எனும் தொடர் அமைந்தது. இத்தொடரையும் மக்களிடம் பயின்று வழங்கிய நாழி எனும் சொல்லையும் பொருள் ஒற்றுமை காரணமாகத் தொடர்பு படுத்திய தொல்காப்பியம், நாடுரி என்பதற்கு அடிப்படைச் சொல் நாழி என்று கொண்டு புணர்ச்சி விதியைக் கூறியிருக்க வேண்டும்.

வேணவா என்பதனை வேட்கை + அவா எனப் பகுத்து, டகரம் ணகரமாக மாறுவதாகத் தொல்காப்பியம் (எழு. 288) கூறுகிறது. இத்தொடரில் வேள், நவா என்னும் சொற்கள் இணைந்துள்ளன.

வேள், நவா எனும் இரு சொற்களும் மிகுந்த விருப்பத்தை உணர்த்துவனவாகும் (DED 2947, 4548). நவா (நவை) என்பது நவ்வுதல் (மிகுந்த விருப்பம்) என்ற சொல்லோடு தொடர்புடையது. இது நாளடைவில் அவா என்றானது. தொல்காப்பியத்திற்கு முந்தைய காலத்திலேயே நகர இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். எனினும் வேணவா எனும் தொடர் செய்யுட்களில் அருகிய வழக்காக இடம் பெற்றதால், தொல்காப்பியம் அதற்கு விதி கூறுகின்றது எனலாம்" (பெ. சுயம்பு, செந்தமிழ், உலகத் தமிழ் மாநாட்டு மலர், பக்கம் 6).

"தொண்ணூறு, தொள்ளாயிரம் என்ற தொடர்கள் ஒலி. பொருள் எனும் இரு வகையிலும் மாறானவை. பத்து நூறு ஆகிறது;

நூறு ஆயிரம் என்று மாற்றப்படுகிறது. ஒன்பது தொண் அல்லது தொள் ஆகிறது. இங்குத் தொல்காப்பியர் வழக்கில் பயின்ற ஒன்பது என்ற எண்ணையும் தொண்ணூறு, தொள்ளாயிரம் ஆகிய தொடர்களையும் மட்டுமே கருத்தில் கொண்டுள்ளார். அருகிய வழக்காகிய ஒதுக்கப்பெற்ற தொண்டு என்ற எண்ணுப் பெயரை அவர் அடிநிலைக் கிளவியாக ஏற்கவில்லை. இச்சொல் தொல்காப்பியச் செய்யுளியலில் ஓரிடத்தில் வருகிறது என்பது குறிக்கத்தக்கது" (பெ. சுயம்பு, தொல்காப்பியரின் புணர்ச்சி வருணனைக் கோட்பாடு, தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள், பக்கம் 85).

முன்றில் என்னும் தொடரைத் தொல்காப்பியம் (எழு. 355) முன் + இல் எனப் பகுக்கிறது. இங்கு றகரம் இடையில் வருவதாகக் கூறுகிற இந்நூல், இதனை மரூஉ வழக்கு எனக் குறிப்பிடுகிறது.

மெய்யெழுத்தோடு உயிர் சேரும் போது மெய் தோன்றும் என்பது ஒலிமாற்ற இயல்புக்கு ஒவ்வாதது. எனவே முன்றில் என்னும் தொடரிலுள்ள நிலைமொழி 'முன்' இல்லை. முன்று என்பதே அச்சொல் ஆகும். இல்லுக்கு முன்னருள்ளது முன்று (பலர் கூடி உரையாடி மகிழும் இடம்) என்னும் பகுதியாகும். இச்சொல்லை மன்று என்பதன் திரிபாகக் கொள்ள வியலும். முன்று என்பதற்கும் முற்றம் என்பதற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

தொல்காப்பியம் (எழு. 356) பொன் என்னும் சொல் செய்யுளில் ஈறு கெட்டு, லகரமும் மகரமும் தோன்றும் என்று கூறுகிறது. உரையாசிரியர்கள் பொலம்படை என்ற தொடரைச் சான்று காட்டுகின்றனர். இங்குப் பொலன் என்பதே தொல்வடிவமாகும். இச்சொல் பெருவழக்கில் பொன் என்று மருவி வழங்கியதால், தொல்காப்பியம் இதனை நிலைமொழியாகக் கொள்கிறது.

தொல்காப்பியம் விவரிக்கிற இச்சிறப்பு விதிகளை வீரசோழியம் கூறவில்லை. நாடுரி, தொண்ணூறு, தொள்ளாயிரம் போல்வன நன்னூல் போன்ற பிற்கால நூல்களில் தொல்காப்பியத்தைத் தழுவி விவரிக்கப்படுகின்றன.

இலக்கண விளக்கம் (147) உரையில் முன்றில் என்பதை இல்+முன் என நிலைமொழி வருமொழிகளாக்கி, இவை முன்றில் என்று போலியாக வழங்குகின்றன எனக் குறிப்பிடுகிறது.

புணர்ச்சி விதிகளைக் கூறுவதில் தொல்காப்பியம் சொற்களை எடுத்துக் கூறிச் சிறப்பு விதிகளைப் பேரளவில்

விவரிக்கிறது. ஆனால் பிற்கால இலக்கண நூல்கள் சிறப்பு விதிகளுக்கு முன்னுரிமை தரவில்லை. அவை பொதுவிதிகளைக் கூறுவதிலேயே பெரிதும் நாட்டம் கொண்டுள்ளன.

## சொல்

சொல் ஓர் எழுத்தாலும் ஈரெழுத்தாலும் இரண்டற்கு மேற்பட்ட எழுத்துக்களாலும் அமையும். இச்சொல் பொருளை உணர்த்தும்.

எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே (தொல்.சொல். 152)

இப்பொருள் மனத்தளவில் உணரப்படுகிற அகராதிப் பொருள் (பொருண்மை), மொழி அமைப்பளவில் உணரப்படுகிற இலக்கணப் பொருள் (சொன்மை தெரிதல்) என இருவகைப்படும். இப்பொருள் வெளிப்படையாகவும் (தெரிபு வேறு நிலையல்) குறிப்பாகவும் (குறிப்பின் தோன்றலும்) வெளிப்படும். இவ்வாறு தொல்காப்பியம் சொல்லின் வரைவிலக்கணத்தை விவரிக்கிறது.

சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் (தொல்.சொல். 1) சொல் தனிமொழி, தொடர் மொழி என்று இருவகைப்படும்; அவற்றுள் தனிமொழி சமய ஆற்றலால் பொருளை விளக்கும்; தொடர் மொழி அவாய் நிலையாலும் தகுதியாலும் அண்மை நிலையாலும் இயைந்து பொருள் விளக்கும் தனிமொழிகளின் ஈட்டம் என்று உரைக்கிறார்கள்.

தொல்காப்பியம் சொற்களைப் பகுதி, இடைநிலை, விகுதி என நுட்பமாகப் பகுத்துக் காட்ட வில்லை. எனினும் பன்மை உரைக்கும் தன்மைச்சொல், தன்வினை உரைக்கும் தன்மைச் சொல், ஒருவர் மருங்கின் படர்க்கைச் சொல், பல்லோர் மருங்கின் படர்க்கைச் சொல், பலவற்றுப் படர்க்கை என வினையியலிலும், ஆடூஉ அறிசொல், மகடூஉ அறிசொல், பலர் அறிசொல், ஒன்றறி சொல், பலவறி சொல் எனக் கிளவியாக்கத்திலும் பகுத்து முற்றுக்களைப் பால்-எண்-இட அடிப்படையில் இனம் காட்டுகிறது.

தொல்காப்பியம் பெயர்ச் சொற்களிலும் பகுதி, விகுதி எனப் பிரித்துக் காட்டும் சொற் பகுப்பு முறையைக் கையாளவில்லை. அவன், இவன், உவன், அவள், இவள், உவள், அவர், இவர், உவர் என்பன போன்று சொற்களை எடுத்துக் காட்டியே இலக்கணம் கூறுகிறது.

தொல்காப்பியம் தொடர்களில் எழுவாய் - பயனிலை இயைபினைக் கட்டாய விதியாகக் கூறுகிறது.

**வினையின் தோன்றும் பாலறி கிளவியும்**
**பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்**
**மயங்கல் கூடா தம்மர பினவே** *(தொல்.சொல். 11)*

தொடர் இயைபினைப் பேணும் நோக்கிலேயே தொல்காப்பியம் பால் எண் விகுதிகளைத் தனித்தும் மூவிடக் குறியீடுகளுடன் சேர்த்தும் கூறுவதோடு, இவ்விதிகளைக் கொண்ட சுட்டு, வினாப் பெயர்கள் போன்றவற்றையும் எடுத்துரைக்கிறது. இச்சொற்பகுப்பில் பகுதி, இடைநிலை, விகுதி என்னும் சொல்லமைப்பு உறுப்புக்களை (பகுபத உறுப்புக்களை) எடுத்துரைக்கும் நோக்கம் காணப்படவில்லை.

வீரசோழியம் தத்திதப் படலத்தில் அன், ஆன், இயன், ஈனன், இகன், ஆளன், மான், அகன் போன்ற ஆண்பால் விகுதிகளையும் அச்சி, ஆட்டி, அனி, ஆத்தி, அத்தி, தி, ஆள், அள், இ, இச்சி, சி என்னும் பெண்பால் விகுதிகளையும் கூறுகிறது; இவை குறிப்பு வினையாலணையும் பெயர் விகுதிகள் (தத்திதப் பிரத்தியம்) எனப்படுகின்றன. தாதுப்படலத்தில் நட, அடு, செய், பண்ணு போன்ற வினைப் பகுதிகளையும் (தாதுக்களையும்) வான், உ, மை, அம், பு, கை போன்ற விகுதிகளையும் (பிரத்தியங்களையும்) ஆட்டு, ஆற்று, தீற்று முதலிய பிறவினைப் பகுதிகள் (காரிதத் தாதுக்கள்), வி,பி என்னும் இயக்குவினை (காரிதக் காரிதம்) விகுதிகள் ஆகியவற்றையும் கூறுகிறது. மேலும், இந்நூல் கிரியாபதப் படலத்தில் தான், ஆன், தாள், ஆன், கிறான், கிறாள் போன்ற கால இடைநிலைகளுடன் இணைந்தனவும் தனித்து நிற்பனவுமாகிய மூவிட வினைமுற்றுக்களின் ஈற்றுப் பாகத்தைப் பிரித்துக் காட்டி விவரிக்கிறது.

வீரசோழியத்திலும் பகுதி, இடைநிலை, விகுதி என்ற நுண்ணிய சொற்பகுப்பு முறை காணப்படவில்லை. இந்நூல் பகுதியை ஒரு பாகமாகவும் பகுதி அல்லாத பிறவற்றை மற்றொரு பாகமாகவும் என்று இரண்டாகச் சொற்களைப் பகுத்துக் காட்டுகிறது. இப்பகுப்பு முறை இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டுதல் என்னும் நோக்கத்தில் அல்லாமல், ஒரு மொழியை எளிதில் கற்பித்தல் என்னும் நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகும். இதனாலேயே இந்நூல் சொல் என்றால் என்ன என்பதன் விளக்கமான வரைவிலக்கணத்தையும் கூறவில்லை.

நேமிநாதமும் தொல்காப்பியத்தைப் போன்ற சொற் பகுப்பினையே பெயரிலும் வினையிலும் மேற்கொள்கிறது. எனினும்

இந்நூல் (57) 'சுட்டே வினாவொப்பே பண்பே தொகுனளர ஒட்டுப் பேர்' என்று குறிப்பிடுமிடத்துத் தொல்காப்பியத்தினின்றும் வேறுபட்ட பகுப்பு முறையை மேற்கொள்கிறது; சுட்டு, வினா, ஒப்பு, பண்புப் பகுதிகளுடன் பால்-எண் விகுதிகள் சேர்ந்து சொற்கள் அமைதலை இது உணர்த்துகிறது.

நன்னூல் உருபன் நிலையில் சொற்பகுப்பினைத் தெளிவாகச் செய்கிறது. இம்முயற்சியில் நன்னூலே தமிழ் இலக்கண நூல்களுள் முதலிடம் பெறுகிறது. இந்நூல் இதற்கெனப் பதவியல் என்றொரு தனி இயலையே உருவாக்கியுள்ளது. இவ்வியல் மொழியியலாரின் உருபனியலுக்கு இணையானதாகக் கருதப்படுகிறது.

நன்னூல் சொல்லின் வரைவிலக்கணத்தை,

**எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்**
**பதமாம் அதுபகாப் பதம்பகு பதமென**
**இருபா லாகி யியலு மென்ப (நன்னூல், 127)**

என்று கூறுகிறது. மேலும், பெயரியலில் சொல்லின் விரிவான விளக்கமும் காணப்படுகிறது.

**ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா**
**இருதிணை ஐம்பாற் பொருளையும் தன்னையும்**
**மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்**
**வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே** (நன்னூல், 258)

பதவியலில் கூறிய பொருளை இங்கு 'இருதிணை ஐம்பால் பொருள்' என்று நன்னூல் கூறுகிறது; இலக்கணப் பொருள் 'தன்னையும்' என்று கூறப்படுகிறது.

நன்னூல் சொற்களைப் பகாப்பதம், பகுபதம் என்று இருவகைப்படுத்துகிறது. பகுபதம் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறு உறுப்புக்களையோ அவற்றுள் சிலவற்றையோ பெற்று அமையும். இவ்வுறுப்புக்களுள் பகுதி அகராதிப் பொருளைக் கொண்ட அடிச்சொல் ஆகும். விகுதி, இடைநிலை என்பன இலக்கணப் பொருளை உணர்த்தும் கட்டு உருபன்கள் (பின்னொட்டுக்கள்) ஆகும். சாரியை, சந்தி, விகாரம் மூன்றும் சொல் அமைப்பில் இடம் பெறுகிற ஒலி இணைப்பு வடிவங்கள்.

இலக்கண விளக்கம் நன்னூலைத் தழுவிப் பதவியலை அமைத்து, இவ்வியலிலும் பெயரியலிலும் சொல்லின் இலக்கணத்தை விவரிக்கிறது. எனினும் சிறிது மாற்றத்தைச் செய்துள்ளது.

எழுத்தே தனித்து மிணைந்துந் தொடர்ந்தும்
பதமாம் பொருடரின். . . . (இலக்கண விளக்கம், 38)

தனிமொழி தொடர்மொழி யெனவிரு வகைத்தாய்
(இலக்கண விளக்கம், 160)

இலக்கண விளக்கம் தொல்காப்பியக் கொள்கையைத் தழுவித் தனித்தும் இணைந்தும் தொடர்ந்தும் (ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொரு, தொடர்மொழி) என்று கூறுகிறது.

இலக்கண விளக்கம் தனிமொழியும் தொடர்மொழியும் பொருள் உணர்த்தும் முறையை,

தனிமொழி சமய வாற்றலாற் றனித்துந்
தொடர்மொழி யவாய்நிலை தகுதி யண்மையிற்
றொகைநிலை தொகாநிலை யாயிரு வகையாற்
றொடர்ந்தும் பொருளைத் தோற்றுவ தியல்பே
(இலக்கண விளக்கம், 161)

என்று விளக்குகிறது. இவ்விளக்கம் தொல்காப்பிய உரைகளைத் தழுவியதாகும்.

தொன்னூல் விளக்கம் நன்னூலைப் பின்பற்றிச் சொல்லுக்கு வரைவிலக்கணம் கூறுகிறது.

முத்துவீரியம் பதவியலுக்கு இணையாக மொழியியல் என்னும் இயலை அமைத்துள்ளது. இதில் இந்நூலாசிரியரின் தனித்தமிழ் உணர்வு வெளிப்படுகிறது.

முத்துவீரிய மொழியியற் கருத்துக்கள் நன்னூலின் பதவியற் கருத்துகளிலிருந்து வேறுபட்டவை. இவ்வியலில் உள்ள நாற்பத்தைந்து நூற்பாக்களுள் முப்பத்தைந்து வடமொழியாக்கம் குறித்தவை. எஞ்சிய பத்தே தமிழ்ச் சொல் குறித்தவை.

முத்துவீரியம் (115),

சொன்ன வெழுத்தினாற் சொல்வதே சொல்லாம்

என்று சொல்லை இவ்வியலில் விளக்குகிறது. மேலும் பெயரியலில்,

*எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே*

*(முத்துவீரியம், 459)*

என்றும்,

*ஒருரை தொடர்பொது வுரைபடு மிருதிணை*
*ஐம்பான் மூவிட மறுவகை வழக்கு*
*வெளிப்படை குறிப்பின் விளக்குவ துரையே*

என்றும் விளக்கம் தருகிறது. பெயரியல் விளக்கங்கள் தொல்காப்பியம், நன்னூல் இரண்டின் இணைப்பாகக் காணப்படுகின்றன.

முத்துவீரியம் ஏனைய நூல்களில் காணப்படாத புதிய செய்தி ஒன்றையும் தருகிறது. சொற்களைத் தனிமொழி, இணைமொழி, துணைமொழி, பொதுமொழி, தணமொழி, கணமொழி, கலப்புறுமொழி என்று ஏழாக இந்நூல் (123) வகைப்படுத்துகிறது. இவற்றுக்கு உரையாசிரியர் பின்வருமாறு சான்று காட்டுகிறார்.

*நிலம்நீர் இவை பிரிக்கப்படாத தனிமொழி*
*தேரன், ஊரன் இவை பிரிக்கப்படும் இணை மொழி*
*மூவர் வந்தார், அரசர் கூடினார் இவை தொடர்ந்து வந்த துணைமொழி*
*நங்கை, வேங்கை இவை இருபொருள் கொண்ட பொதுமொழி*
*முனிவர்கள், தேவர்கள் இவை பன்மையைக் காட்டும் கணமொழி*
*இந்திரன், சந்திரன் இவை ஒருமையைக் காட்டும் தணமொழி*
*ஆண், பெண் இவை இருதிணையிலும் கலந்து பொதுவாக வந்த கலப்புறு மொழி*

பகாப்தம் தனிமொழி எனவும் பகுபதம் இணைமொழி எனவும் கூறப்படுகின்றன. இருசொல் அமைந்த தொடர் துணை மொழி எனப்படுகிறது. இவை மூன்றும் சொல்லமைப்பு அடிப்படையிலானவை. எஞ்சிய நான்கும் பொருள் அடிப்படை யிலான பகுப்பைச் சார்ந்தவை.

## சொல்வகை

இலக்கண நூல்கள் பெயர், வினை, இடை, உரி நான்கையும் செந்தமிழ்ச் சொற்களாக (இயற்சொற்களாக) ஏற்றுள்ளன. எனினும், இச்சொற்களுக்குத் தருகிற தகுதி அடிப்படையிலான இடத்தில் வேறுபடுகின்றன.

தொல்காப்பியம் சொற்களின் வகைகளைச் சுட்டுங்கால்,

சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே (தொல்.சொல். 155)

என்றும்,

இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப (தொல்.சொல். 156)

என்றும் குறிப்பிடுகிறது. இந்நூற்பாக்கள் பெயரும் வினையுமே சொல் என்று கொள்ளத் தக்கன; இடை, உரி இரண்டும் அவற்றை அடுத்த நிலையில் சொற்களாகக் கொள்ளத் தக்கன என்னும் கருத்தினைத் தருகின்றன.

தொல்காப்பியம் இடைச்சொற்களையும் உரிச்சொற்களையும் பெயர், வினை இரண்டுக்கும் இணையானவையாகக் கருதவில்லை. ஏனெனில் இவை இரண்டும் பெயர், வினைகளைப் போன்று பால்-எண் விகுதிகளை ஏற்றலோ மொழியில் தனித்து வருதலோ இல்லை. இவை பெயர், வினைச் சொற்களைச் சார்ந்தோ அவற்றுக்கு உறுப்பாகவோ வரத் தக்கவை. அதாவது, பெயர், வினைகளைச் சார்ந்த அளவிலேயே சொற்களாகக் கருதத்தக்கவை. எனவே தொல்காப்பியம் பெயர், வினைகளுக்கு முதலெழுத்துக்களுக்கு அளித்த முதன்மை இடத்தையும் சார்பு சொற்களான இடை, உரிகளுக்குச் சார்பெழுத்துக்களுக்கு அளித்த துணை இடத்தையும் வழங்குகிறது எனலாம். மேலும், இடை, உரிச்சொற்கள் தனித்து வழங்குதற்கு உரியன அல்ல; குறைச்சொற்கள் என்று கருதியதாலேயே தொல்காப்பியம் இவை புணர்ச்சியில் வந்த போதிலும், இவற்றைப் புணர்மொழிகளாகக் கொள்ளவில்லை.

வீரசோழியம் தமிழ்ச் சொல்வகைகள் 'இன்ன' என்று சுட்டிக் காட்டுவதில் கருத்தைச் செலுத்தவில்லை.

நேமிநாதம் பெயர் மரபின் தொடக்க வெண்பாவில்,

பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல்
இயல்சொல் முதனான்கும் எய்தும்

என்று கூறுகிறது. பெயர் முதலிய நால்வகைச் சொற்களுக்கும் இடையே தகுதி இட வேறுபாடு அறிவிக்கும் வண்ணம் இந்நூற்பா அமையவில்லை.

நன்னூல் சொல்வகைகளைக் கூறுமிடத்து,

**இயற்சொல் திரிசொல் இயல்பில் பெயர்வினை**
**எனவிரண் டாகும் இடையுரி அடுத்து**
**நான்குமாம் திசைவட சொல்லணு காவழி (நன்னூல் 269)**

என்று குறிப்பிடுகிறது. இந்நூற்பா அமைப்பு இந்நூலும் தொல்காப்பியத்தைப் போன்று பெயர், வினைகளுக்கு இணையான தகுதியை இடை, உரிச்சொற்களுக்குத் தரவில்லை என்பதையே வெளிப்படுத்துகிறது.

பெயர் முதலிய நால்வகைச் சொற்களின் தகுதி குறித்து மயிலைநாதர்,

> அஃதேல், பெயர்வினையிடையுரி நான்காகு மென்று ஒன்றாக வோதலமையும் பிறவெனின், அவைபெயர் வினை போல இலக்கண முற்றும் ஒரு தலையாக வேற்றுத் திணை பாலிடங்களை விளக்கித் தனித்து நடவாவாகலின் வேறோதல் வேண்டுமென்க

என்று விளக்குகிறார்.

மயிலைநாதரின் விளக்கம் இடை, உரி இரண்டும் சொல்லின் இலக்கணம் முழுவதையும் பெறாத குறைச்சொற்கள் எனக் காட்டுகிறது.

இலக்கண விளக்கம் (171) சொல்வகைகளுக்கு நன்னூல் நூற்பாவை எடுத்து மொழிகிறது. இதன் ஆசிரியர் இடை, உரிச்சொற்களின் தகுதியை விளக்குதற்கு மயிலைநாதரின் உரைக்கருத்தை உரையில் வழிமொழிகிறார்.

தொன்னூல் விளக்கம் (42) '**எச்சொல்லும் பெயர் வினை யிடையுரியென நான்கு**' என்று கூறுகிறது. இதன் ஆசிரியர்,

> பெயரே வினையே இடையே உரியே என நாற்கூறுபாடாகச் சொல்லெலாம் வகுக்கப்படும். அவற்றுட் பொருளை விளக்குவது பெயரே. பொருளது தொழிலை விளக்குவது வினையே. இவையிரண்டையுஞ் சார்ந்தொன்றுவது இடையே. அவ்விரண்டையும் தழுவிப் பற்பல குணங்களை விளக்குவது உரியே

என்று உரைக்கிறார். இவர் நான்கு சொற்களையும் சமமாகக் கருதுகிறார்.

சுவாமிநாதமும் முத்துவீரியமும் இடைச்சொற்களையும் உரிச்சொற்களையும் 'சொல்' என்று கருதுகின்றனவே ஒழிய, இவற்றைச் சொல்வகைப் பட்டியலில் அடக்க வில்லை. இந்நூல்கள் இரண்டும் இச்சொற்களுக்கெனத் தனி இயல்கள் அமைக்கவுமில்லை. இவற்றைச் சுவாமிநாதம் எச்ச மரபிலும் முத்துவீரியம் ஒழிபியலிலும் அடக்கி விவரிக்கின்றன. மேலும், முத்துவீரியம் மொழியியலில்,

**மொழிபெயர் வினையென மொழியப் படுமே**

என்று சொல் பெயர், வினை என இருவகைகளே என்பதைத் திடமாகக் கூறுகிறது.

## பெயர்ச்சொல்

தொல்காப்பியம் பெயர்ச்சொல்லின் வரைவிலக்கணத்தை,

**பெயர்நிலைக் கிளவி காலம் தோன்றா**
**தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே** *(தொல்.சொல். 71)*

என்று கூறுகிறது. வினையாலணையும் பெயர் காலம் காட்டுதலால் அதனையே 'தொழில் நிலை ஒட்டும் ஒன்று' எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

தொல்காப்பியம் பெயர்ச் சொற்களை உயர்திணைக்கு உரியன அஃறிணைக்கு உரியன, ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரியன எனத் திணை அடிப்படையில் மூவகைப்படுத்தி விவரிக்கிறது. மேலும், பெயர்ச்சொற்களுள் சில பால் உணர்த்துதலையும் உண்டு என்பதையும்,

**உயர்திணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்**
**உரியவை உரிய பெயர்வயி னான** *(தொல்.சொல். 69)*

என்று இந்நூல் குறிப்பிடுகிறது.

நேமிநாதமும் (56) தொல்காப்பியத்தைப் பின்பற்றி உயர்திணைப் பேர், அஃறிணைப் பேர், விரவுத்திணைப்பேர் என மூன்றாகப் பகுத்துக் கூறுகிறது. இந்நூலில் பெயர்ச்சொல்லுக்கான வரைவிலக்கணம் இடம் பெறவில்லை.

நன்னூல் பெயர்ச்சொல்லின் வரைவிலக்கணத்தை விரிவான இயல்புகளுடன் விவரிக்கிறது.

*இடுகுறி காரண மரபொ டாக்கம்*
*தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா*
*வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்*
*றேற்பவும் பொதுவு மாவன பெயரே (நன்னூல், 274)*

நன்னூல் பெயர்ச்சொற்களைப் பால் அடிப்படையில் ஆண்பெயர், பெண்பாற் பெயர், பல்லோர் பெயர், ஒன்றன் பெயர், பலவின் பெயர் என ஐவகைப்படுத்துகிறது. மேலும், ஒன்றற்கு மேற்பட்ட பால்களுக்குப் பொதுவாக உரிமை கொண்ட பெயர்களைப் பொதுப்பெயர் என்றும் சுட்டுகிறது.

இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் போன்ற பிற்கால நூல்கள் பெயர்ச்சொல்லின் வரைவிலக்கணம், வகைகள் ஆகியவற்றை விவரிப்பதில் நன்னூலைப் பின்பற்றுகின்றன. எனினும் இலக்கண விளக்கத்தில் (176) 'பொருள் புலப்படுப்பன' என்னும் புதிய விளக்கம் ஒன்றும் காணப்படுகிறது. இவ்விளக்கம் சேனாவரையர் உரையிலிருந்து ஏற்கப் பெற்றதாகும்.

முத்து வீரியம் (462) பெயர்ச்சொற்களை வகைப்படுத்துவதில் தொல்காப்பியத்தைப் பின்பற்றுகிறது.

### மூவிடப்பெயர்கள்

தொல்காப்பியம் தன்மைப் பெயர்களை உயர்திணையாகவும் முன்னிலை, படர்க்கைப் பெயர்களை விரவுத்திணையாகவும் கருதுகிறது. இம்மூவிடப்பெயர்கள் வேற்றுமை உருபேற்குங்கால் நெடில் குறுகி அமையும்.

யான், யாம், நாம் மூன்றும் தன்மைப் பெயர்கள். இவை வேற்றுமையில் என், எம், நம் எனத் திரியும். நீ, நீயிர் என்பன முன்னிலைப் பெயர்கள். இவை வேற்றுமையில் நின், நும் எனத் திரியும். ஆனால் தொல்காப்பியம் (எழு. 326). நும் என்பதே நீயிர் எனத் திரிந்துள்ளது (நும்மின் திரிபெயர்) எனப் பிறழக் கூறுகிறது. தான், தாம் என்னும் படக்கைப் பெயர்கள் தன், தம் எனத் திரியும்.

வீரசோழியம் (37) நான், நாம், நாங்கள் என்னும் தன்மைப் பெயர்களையும் நீ, நீர், நீர்கள், நீவிர்கள், நீயிர்கள் என்னும் முன்னிலைப் பெயர்களையும் தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர்களையும் கூறுகிறது. இவற்றுள் நான், நீ, தான் மூன்றும் ஒருமைப் பெயர்கள். நாங்கள், நீர்கள், நீயிர்கள் நீவிர்கள், தாங்கள் என்பன பன்மைப் பெயர்கள். நாம், நீர், தாம் மூன்றும்

சிறப்புப் (மரியாதை ஒருமைப்) பெயர்களாகும். மேலும், இந்நூல் உன், என், தன், உங்கள், நுங்கள் என்னும் வேற்றுமை உருபேற்கும் சொற்களையும் கூறுகிறது.

வீரசோழியம் குறிப்பிடும் பெயர்களுள் நாம் புதிய மொழி வழக்கிலும் வருகிறது. இச்சொல் முன்னிலைச் சிறப்புப் பெயராகவும் வருதலைக் கிரியாபதப் படலத்தில் (79) காணலாம். இதற்கு உரையாசிரியர் நாம் நில்லும், நாம் போமின் என்னும் சான்றுகளைத் தருகிறார். இத்தகைய வழக்கினைத் தற்காலப் பேச்சு மொழியிலும் காணலாம்.

தொல்காப்பியத்தில் உள்ளதைப் போன்ற பிறழ் விவரிப்பு இந்நூலிலும் காணப்படுகிறது. உன், என், தன் என்பன எழுவாய் வேற்றுமையாகும் போது உருபு 'சு' உடன் சேர்ந்து நீ, நான், தான் எனத் திரியும் என்று கூறுவது நேர்மாறான விளக்கமாகும்.

நான் என்னும் பெயர் சங்க இலக்கியங்களுள் பரிபாடலில் (6, 20) இரு இடங்களில் காணப்படுகிறது. வேறு சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. ஆனால் பிற்கால இலக்கியங்களிலும் பேச்சு வழக்கிலும் நான் என்பதே பெரு வழக்கில் இடம் பெற்றுள்ளது. தற்காலத்தில் யான் என்பது பேச்சு வழக்கில் முற்றிலும் மறைந்து விட்டது. இச்சொல் வீரசோழியக் காலத்திலேயே வழக்கிறந்து, நான் என்பது ஆட்சி செலுத்தி இருக்க வேண்டும் என்பது இந்நூலின் விவரிப்பிலிருந்து அறிய வருகிறது.

நாம், நீர், தாம் என்னும் பன்மைப் பெயர்கள் மரியாதை ஒருமையில் வழங்கிய நிலையில், கள் விகுதி பெற்ற இரட்டைப் பன்மைச் சொற்கள் பன்மையைக் குறிக்க வழங்கலாயின.

பல்லவர் காலத்தும் அதற்குப் பின்னரும் இரட்டைப் பன்மைச் சொற்கள் தாராளமாக வழங்கின. இவற்றைப் பக்தி இலக்கியங்களில் பரவலாகக் காண முடிகிறது.

எங்கள் நாயகனே (திருவாசகம், அருட்பத்து 3)

நங்கள் வரிவளை (திவ்வியப் பிரபந்தம், 2865)

நுங்கட்கே (திவ்வியப் பிரபந்தம், 2819)

எங்கள் பெண்மை (சீவக சிந்தாமணி, 763)

நீர்கள் (அப்பர் தேவாரம், 419)

*நீங்கள் (அப்பர் தேவாரம், 405)*

*உங்கள் (திவ்வியப் பிரபந்தம், 487)*

முன்னிலைப் பெயர்களின் வேற்றுமை வடிவங்களில் மொழி முதல் நகர இழப்பைக் காண முடிகிறது. இதனைச் சங்க இலக்கியங்களிலும் காணலாம்.

*அஃது உம்மனை (அகநானூறு, 56)*

*உமக்கு நச்சினார் ஈபவை (பரிபாடல், 20)*

முன்னிலைப் பெயர்களில் நகர இழப்பு தொல்காப்பியக் கால மொழியிலேயே இடம் பெற்றிருந்தது என்பதற்கான சுவட்டினைத் தொல்காப்பியத்தின் மொழி முதற் குற்றியலுகர விவரிப்பில் அறிய முடிகிறது. நுந்தை என்னும் சொல்லில் குற்றியலுகரமே மொழி முதலில் வருகிறது என இந்நூல் குறிப்பிடுகிறது. அவ்வாறாயின் அச்சொல் நுந்தை அல்ல; உந்தையே என்பது வெளிப்படையான உண்மை. இச்சொல் பேச்சு வழக்கிலும் நுந்தை என்பது இலக்கிய வழக்கிலும் பயின்றிருக்க வேண்டும். இலக்கிய மொழிக்கு இலக்கணம் எழுதுகிற தொல்காப்பியம் உந்தை என்ற சொல்லை குறிப்பிடத் தயங்கி நுந்தை என்று கூறுகிறது.

நேமிநாதம் (58, 61, 62) தொல்காப்பியத்தைப் பின்பற்றி மூவிடப் பெயர்களை விவரிக்கிறது. இந்நூல் தன்மைப் பெயர்களை உயர்திணைப் பெயர்கள் எனக் கூறுகிறது. நீ, நீயிர், நீர் என்னும் முன்னிலைப் பெயர்களும் படர்க்கைப் பெயர்கள் தான் தாம் இரண்டும் விரவுத் திணைப் பெயர்களாகும். மேலும், இந்நூல் நீயிர் என்பது நீர் என்று திரியும் எனவும் கூறுகிறது. முன்னிலையில் இந்நூல் நகர இழப்புச் சொற்களைக் குறிப்பிட வில்லை. பேச்சு வழக்கு இலக்கணத்திற்குத் தரவுகளாக ஏற்கத் தகுந்தவை அல்ல என இது கருதுகிறது எனலாம். இந்தப் போக்கினைப் பெரும்பான்மைத் தமிழ் இலக்கண நூல்களில் காணலாம்.

நன்னூல் (281, 284) நான், யான், நாம், யாம்; நீ, நீயிர், நீவிர், நீர்; தான், தாம் ஆகிய மூவிடப் பெயர்களைக் கூறுகிறது. வேற்றுமை ஏற்கும் சொற்களில் நகரத்துடன் அமைந்த முன்னிலைச் சொற்களையே இந்நூல் குறிப்பிடுகிறது.

தமிழ் இலக்கண நூல்களுள் நன்னூலே முதன் முதலில் தன்மைப் பெயர்களை விரவுப் பெயர்ப்பட்டியலில் சேர்த்துக் கூறுகிறது. பிற்காலத்தில் தோன்றிய இலக்கண விளக்கம், தொன்னூல்

விளக்கம், முத்துவீரியம் போல்வனவும் இந்நூலையே பின்பற்றுகின்றன.

தொல்காப்பியம் தன்மைப் பெயர்களை உயர்திணை எனக் கருதுகிறது. மனிதர்கள் மட்டுமே பேசுதற்கும் மொழிகளை உருவாக்குதற்கும் உரியோர். ஆகையால் அந்நூல் இவ்வாறு கருதுகிறது. ஆனால் பிற்காலத்தில் தோன்றிய நன்னூல், இலக்கண விளக்கம் போல்வன தன்மைப் பெயர்களை உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவானவை எனக் கூறுகின்றன. கற்பனைக் கதைகளிலும் பாடல்களிலும் அஃறிணைப் பொருட்களும் பேசுவனவாகப் புனைந்துரைக்கப்படுதலால், தன்மை பொதுப் பெயராகக் கூறப்படுகிறது என உரையாசிரியர்கள் விளக்குகின்றனர்.

> "தன்மை உயர்திணைக்கேயன்றி அஃறிணைக்கும் உரித்தாமோ வெனின்,
>
> 'பேய்பூத மந்திகிளி பூவை பேசுதலா, லாகுமே
> தன்மை பொது' என்பதனால் ஆமென்க"

என்பது மயிலைநாதர் (நன்னூல், 284) கூற்று.

"தன்மைப் பெயர் குறித்த தொல்காப்பியக் கருத்தே அறிவார்ந்தது; மனிதநேய சமுதாயம் சார்ந்த கொள்கையாகும். ஏனையோரின் கருத்து இலக்கிய விவரிப்பு முறையைச் சார்ந்ததாகும்" (பெ. சுயம்பு, தமிழ்மொழி அமைப்பும் வரலாறும், பக்கம் 104).

இலக்கண விளக்கம் நன்னூல் செய்திகளுடன் உன், உம் என்னும் முன்னிலைச் சொற்களையும் குறிப்பிடுகிறது. தன்மைப் பெயர்களை விரவுத்திணையுள் சேர்த்தற்கு இந்நூல் மயிலைநாதரின் கருத்தை வழிமொழிகிறது.

தொன்னூல் விளக்கம் நன்னூலைப் பின்மொழிகிறது. ஆனால் இதன் ஆசிரியர் வீரமாமுனிவர் தமது கொடுந்தமிழ் (பக்கம் 53-60) என்னும் பேச்சு மொழி இலக்கண நூலில் நாங்கள், எங்கள், நீய், நீர், நீங்கள், உன், உம், உங்கள், தாங்கள், தங்கள் என்னும் சொற்களைக் குறிப்பிடுகிறது. இவற்றுள் நாம், நீர், தாம் மூன்றும் மரியாதை ஒருமையில் வரும் என்று கூறுகிறது.

வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கத்திற்கு இலக்கிய வழக்கையும் கொடுந்தமிழுக்குப் பேச்சு வழக்கையும் தரவாகக் கொண்டுள்ளார்.

## வேற்றுமைகள்

தொல்காப்பியம்,

*வேற்றுமை தாமே ஏழென மொழிப (தொல். சொல். 63)*
*விளிகொள் வதன்கண் விளியொ டெட்டே (தொல்.சொல். 64)*

என வேற்றுமைகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது. இந்நூற்பாக்களுள் முதலாவது பிற அறிஞர்களின் கொள்கை யினையும் இரண்டாவது தொல்காப்பியரின் கொள்கையினையும் தெரிவிக்கின்றன. இலக்கண நூலார்களிடையே கொள்கை வேறுபாடு இருந்ததையும் தம் கொள்கையை நிலைநாட்டிடத் தொல்காப்பியர் தொல்காப்பியம் எழுதினார் என்பதையும் இவை போன்ற நூற்பாக்கள் தெரிவிக்கின்றன.

பல்வேறு இலக்கண அறிஞர்களின் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுகிற இலக்கணக் கொத்து வடமொழியினர் எட்டு வேற்றுமைகளைக் கொள்வர் என்றும் தமிழறிஞர்களுள் சிலர் ஏழு என்றும் வேறுசிலர் ஆறு என்றும் கூறுவர் என்றும் குறிப்பிடுகிறது.

*வினைமுதல் வினையே செயப்படு பொருளே*
*கருவி கொள்வோன் நீக்கம் குறையே*
*இடமென எட்டும் வடமொழி கூறும்*
*ஏழாறு என்றி யம்பும் தமிழ்நூல் (இலக்கணக்கொத்து, 13)*

பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடையே உள்ள தொடர் உறவுகளை வெளிப்படுத்துதல் புறஅமைப்பில் காணப்படவில்லை. மேலும், இது பெயர்ச் சொல்லின் திரிபு என்ற அளவில் காணப்படுகிறது. எனவே இதனை ஒரு சாரார் வேற்றுமைப் பட்டியலில் இணைக்கவில்லை போலும். ஆனால் இவ்வேற்றுமை அக அமைப்பில் தம்பீ வா, தம்பீ கேள் என்பன போன்று வினைச்சொற்களுடன் தொடர்பு கொண்டிருப்பதனால், தொல்காப்பியம் இதனையும் ஒரு வேற்றுமையாகக் கொள்கிறது.

"தொல்காப்பியனார் ஒவ்வொரு வேற்றுமையின் பெயர், வேற்றுமையின் வடிவம் (உருபு), அவ்வேற்றுமை தோன்றும் அடிப்படை (அதாவது வேற்றுமையின் பொதுப் பொருள்) ஆகியவற்றைத் தனி நூற்பாக்களில் கூறி (தொ.சொ. 65, 71, 73, 75, 77இ 79, 81), பின் அடுத்த நூற்பாக்களில் வேற்றுமை உருபுகள் வழங்கும் தொடர் அமைப்பு வாய்பாடுகளைத் (அதாவது வேற்றுமை உருபுகளின் வெவ்வேறுபட்ட பொருட் குறிப்புக்களைத்) தொகுத்துத்

தந்துள்ளார் (தொ.சொ. 66, 72, 74,, 76, 78, 80, 82). வேற்றுமை உருபுகள் வெவ்வேறு பொருள்களில் வழங்கும் இடங்களைக் குறிக்க அவை அமையும் தொடர் அமைப்புக்களே வாய்பாடுகளாகத் தரப்பட்டுள்ளன" (மோ. இரசயேல், இலக்கண ஆய்வு பெயர்ச்சொல், பக்கம் 106).

எழுவாய் வேற்றுமையின் வடிவமாகப் பெயர்ச்சொல் அமையும் எனக் கூறுகிற தொல்காப்பியம் இவ்வேற்றுமை அறுவகைப் பயனிலைகளை ஏற்கும் என்று குறிப்பிடுகிறது.

**பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்**
**வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்**
**பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்**
**றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே (தொல்.சொல். 67)**

தொல்காப்பியம் கூறுகிற,

**அவைதாம்**
**பெயர் ஐ ஒடு கு**
**இன் அது கண் விளி யென்னும் ஈற்ற**

என்னும் நூற்பாவுக்கு (சொல். 65) இளம்பூரணர், 'வேற்றுமைகளின் பெயரும் முறையும் உணர்த்துல் நுதலிற்று' என்றும் தெய்வச்சிலையார், 'வேற்றுமைச் சொற்கு ஈற்றெழுத்து வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று' என்றும் விளக்கம் தருகின்றனர். மேலும், தெய்வச்சிலையார்,

> விளி யீறாவது விளிக்கண் வரும் எழுத்துக்கள். பிறவும் வேற்றுமை ஈறு உளவாயினும் சிறப்புடைய பொருளைத் தானினிது கிளத்தல் என்பதனால் இவை எடுத்து ஓதப்பட்டன. எடுத்தோதாதன மூன்றாவதன்கண் ஆன் ஆல் ஒடு; ஆறாவதன்கண் அ; ஏழாவதன் கண் இடப்பொருண்மை உணர்த்துஞ் சொற்கள்

என்ற விளக்கத்தையும் தருகிறார். இவ்விளக்கம் எழுவாய் வேற்றுமைக்கும் உருபு உண்டு; பெயர்ச்சொல்லே அவ்வுருபாகும் என்று கொள்ளுதற்கு இடமளிக்கிறது. பிற்கால இலக்கண நூல்கள் சிலவற்றில் இதுபோன்ற கருத்தைக் காண முடிகிறது. எழுவாய் வேற்றுமைக்கு உருபு தமிழில் இல்லை என்பது பெரும்பான்மை அறிஞர்களின் துணிபாகும்.

இரண்டாம் வேற்றுமை வினை, வினைக்குறிப்பு என்னும் இருவகையிலும் தோன்றும் என்பது தொல்காப்பியக் கூற்று. இதற்கு உரையாசிரியர்கள் சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் போன்றோர் இவ்வேற்றுமை செயப்படுபொருளில் வரும் எனக் கூறுகின்றனர்.

தொல்காப்பியம் மூன்றாம் வேற்றுமைக்கு ஒடு என்னும் உருபையும் வினை முதல் (கருத்தா), கருவி எனும் இரு பொருள்களையும் மட்டும் கூறுகிறது.

தொல்காப்பியம் மூன்றாம் வேற்றுமைத் தொடர்களை விவரிக்குமிடத்து அதனொடு மயங்கல், அதனொடியைந்த ஒரு வினைக்கிளவி, அதனொடியைந்த வேறுவினைக்கிளவி, அதனொடியைந்த ஒப்பல் ஒப்புரை என்பவற்றையும் குறிப்பிடுகிறது. இவை உடனிகழ்ச்சிப் பொருளுடன் தொடர்புடையனவாகும். ஆனால் தொல்காப்பியம் இப்பொருளை வினைமுதல், கருவியுடன் அடங்கியதாகக் கருதுகிறது.

தொல்காப்பியம் (சொல். 97, 108) வேற்றுமை மயங்கியலில் ஆன் உருபினைக் கூறியபோதிலும் அவ்வுருபு இன்ன வேற்றுமைக்கு உரியது எனக் குறிப்பிடவில்லை. எனினும் தொல்காப்பிய மொழியில் ஆன் என்பது மூன்றாம் வேற்றுமைக் காரணப் பொருளிலும் ஏழாம் வேற்றுமை இடப் பொருளிலும் இடம்பெற்றுள்ளது. ஆன் உருபு தன் கால மொழியில் வெவ்வேறு வேற்றுமைப் பொருட்களில் வழங்கியதால் தொல்காப்பியம் அதனை இன்ன வேற்றுமைக்கு உரியது எனக் கூறவில்லையோ என்று கருத இடமுள்ளது.

**நிலையலு முரித்தே செய்யு ளான (தொல். எழு. 316)**

**புள்ளியற் கலிமா உடைமை யான (தொல்.பொருள். 192)**

உரையாசிரியர்கள் ஒடு, ஆன், ஆல் என்பவற்றையும் மூன்றாம் வேற்றுமைக்கு உருபுகளாக எடுத்துக்காட்டுகின்றனர். சேனாவரையர் (வேற்றுமையியல், 12) ஒடு உருபு வினைமுதல், கருவிப் பொருள்களில் வருதல் அருகிய வழக்கானதை, 'வினை முதல் கருவிக்கண் ஒடுவெனுருபு இக்காலத் தருகியல்லது வாராது' என்று கூறுகிறார். நச்சினார்க்கினியர் 'ஆனாலாய்த் திரிந்தும் நிற்கும்' என்கிறார்.

சங்க இலக்கியத்தில் ஒடு, ஆன் இரண்டும் உடனிகழ்வு, கருவி ஆகிய பொருட்களிலும் ஒடு உடனிகழ்வுப் பொருளிலும் ஆல் கருவிப்

பொருளிலும் இடம் பெற்றுள்ளன. ஆனால் பிற்கால இலக்கியங்களில் ஒடு, ஓடு என்பன உடனிகழ்வுப் பொருளிலும் ஆல், ஆன் என்பன கருவி, கருத்தா ஆகிய பொருட்களிலும் இடம் பெற்றுள்ளன (பெ. சுயம்பு, தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும் - ஓர் ஒப்பாய்வு, பக்கம் 150).

தொல்காப்பியம் நான்காம் வேற்றுமை உருபு கு என்றும் அது கோடற் பொருளில் வரும் என்றும் கூறுகிறது. மோ, இசரயேல் (இலக்கண ஆய்வு - பெயர்ச்சொல், பக்கம் 110) தொல்காப்பியம் கூறுகிற நான்காம் வேற்றுமைப் பொருட்கள் யாவற்றையும் நோக்கு, கொடை, எல்லை, முறை ஆகிய நான்கு வகையுள் அடக்கி விளக்குகிறார்.

ஐந்தாம் வேற்றுமை உருபு இன் என்றும் அது 'இதனின் இற்று இது' என்னும் அமைப்பில் வரும் என்றும் தொல்காப்பியம் கூறுகிறது.

தெய்வச்சிலையார் ஐந்தாம் வேற்றுமை நீங்கல், பொரு, ஏது என்னும் மூன்ற பொருள்களில் வரும் எனக் கூறுகிறார். ஆனால் ஏனைய உரையாசிரியர்கள் இவற்றுடன் எல்லையையும் சேர்த்து நான்கு பொருள்களில் இவ்வேற்றமை வரும் எனக் கூறுகின்றனர்.

ஆறாம் வேற்றுமையின் உருபு அது; அது 'தன்னினும் பிறிதினும் இதனது இது' என்னும் கிழமையில் வரும் என்பது தொல்காப்பியக் கருத்து.

உரையாசிரியர்களுள் நச்சினார்க்கினியர் மட்டும் அது, ஆது இரண்டும் ஒருமையிலும் 'அ' பன்மையிலும் ஆறன் உருபுகளாக வரும் என்கிறார். ஏனையோர் ஆது நீக்கிய இரண்டையும் குறிப்பிடுகின்றனர். இவ்வேற்றுமைப் பொருளைத் தற்கிழமை, பிறிதின் கிழமை என்று சுட்டுகிற இளம்பூரணர் தற்கிழமை ஒன்று பலகுழீஇயது, ஒன்றியற் கிழமை, உறுப்பின் கிழமை, மெய்திரிந்தாகிய கிழமை என்னும் ஐந்து வகைப்படும் என்றும் 'பிறிதின் கிழமை இது போலப் பகுதிப்படாது' என்றும் விளக்குகிறார். ஆனால் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் பிறிதின் கிழமை பொருள், நிலம், காலம் என்னும் மூவகைப்படும் என்று உரைக்கின்றனர்.

அது, அ என்பன தொல்காப்பிய மொழியிலும் அது, ஆது, அ மூன்றும் சங்க இலக்கியங்களிலும் ஆறன் உருபுகளாக வருகின்றன.

**தோலது பெருக்கமும் (தொல்.பொருள். 68)**

*அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும் (தொல்.பொருள். 194)*

*பாரியது பறம்பே (புறநானூறு, 109)*

*தனாது செங்கதிர்ச் செல்வன் (நற்றிணை, 164)*

*நின்ன கண்ணியும் (புறநானூறு, 45)*

ஆது உருபு அது என்பதன் ஒலி நீட்சியாக வருகிறது. அகர உருபு ஒருமை, பன்மை என்னும் வேறுபாடின்றி வருகிறது. தொல்காப்பியம் தன் கால மொழி வழக்கை விடவும் முந்தைய இலக்கண மரபைப் போற்றி இலக்கணம் கூறுதலை அணுகுமுறையாகக் கொண்டது. எனவே அகர உருபை அது குறிப்பிடவில்லை.

தொல்காப்பியம் ஏழாம் வேற்றுமை உருபு கண் என்றும் அது வினைசெய்இடம், நிலம், காலம் ஆகிய பொருள்களில் வரும் என்றும் கூறுகிறது. இதனைத் தொடர்ந்து வரும் நூற்பாவில் கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், பின், சார், அயல், புடை, தேவகை (திசை), முன், இடை, கடை, தலை, வலம், இடம் என்னும் பத்தொன்பது சொற்களை இவ்வேற்றுமைக்கு உரியவை எனக் குறிப்பிடுகிறது. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இவை யாவற்றையும் ஏழன் உருபுகள் எனக் கூறுகின்றனர். சேனாவரையரோ இவற்றை வெவ்வேறு பொருள் ('கண் முதலாக இடமீறாகச் சொல்லப்பட்ட பத்தொன்பது பொருளும்') உணர்த்தும் சொற்கள் எனக் கூறுகிறார். தெய்வச் சிலையாரும் கல்லாடனாரும் இவை பெயராகவும் உருபாகவும் வருவன எனக் குறிப்பிடுகின்றனர்.

தெ.பொ. மீனாட்சி சுந்தரன் (தமிழ் மொழி வரலாறு, பக்கம் 143), ஆண்டீரீ எஃப். ஜோபர்கு (Evidence for a Locative Case in Telugu, page 59) ஆகியோர் கண், கால் போன்றவற்றைப் பெயர்கள் எனக் கருதுகின்றனர்.

தொல்காப்பியம் ஒவ்வொரு வேற்றுமையினையும் விளக்குமிடத்து முதல் நூற்பாவில் வேற்றுமையின் உருபு, அதன் பொருள் ஆகியவற்றையும் இரண்டாவது நூற்பாவில் அவ்வேற்றுமை அமைதற்கு உரிய பல்வேறு தொடரமைப்புக்களின் பொருட்களையும் கூறுதலை விவரிப்பு நெறியாகக் கொண்டுள்ளது. எனவே ஏழாம் வேற்றுமையை விளக்கும் இரண்டாவது நூற்பாவில் கூறியுள்ள கண், கால் முதலியவற்றை அவ்வேற்றுமை அமைதற்கு உரிய பல்வேறு பொருட்களை உணர்த்தும் பெயர்ச்சொற்கள் எனக் கொள்ளலாம்.

இவற்றுள் பெரும்பாலானவை ஏழாம் வேற்றமை உருபுகளாகவும் செயலாற்றுகின்றன.

தொல்காப்பியம் எட்டாம் வேற்றுமையாகிய விளிக்கு இன்றியமையாமை தந்து விரிவாக விவரிக்கிறது. பெயர்ச்சொற்கள் விளி ஏற்கும் போது இயல்பாக இருத்தல், ஈற்றயல் நீளுதல், ஈறு கெடுதல், ஈறு திரிதல், ஏகாரம் பெறுதல் போன்ற ஒலிமாற்றங்களை அடைகின்றன. இவற்றையே பெயர்ச்சொற்களின் வகை, அவற்றின் விகுதி ஆகியவற்றை எடுத்துரைத்துத் தொல்காப்பியம் முப்பத்தேழு நூற்பாக்களில் விவரிக்கிறது.

சேனாவரையர் (விளிமரபு, 1) விளி வேற்றுமையைப் பின்வருமாறு விவரிக்கிறார்:

> விளிவேற்றுமை எதிர்முகமாக்குதற் பொருட்டாதல் பெயரானே விளங்குதலிற் கூறாராயினார். ஈறு திரிதலும் ஈற்றயனீடலும் பிறிது வந்தடைதலும் இயல்பாதலும் என்னும் வேறு பாடுடைமையான் 'விளியெனப்படுப' என்றார்.

படர்க்கைப் பெயர்களை முன்னிலைப் பெயர்களாக வேறுபடுத்துதலையே சேனாவரையர் 'எதிர்முகமாக்குதல் பொருட்டாதல்' என்று கூறுகிறார்.

வீரசோழியம் வடமொழி மரபைத் தழுவி வேற்றுமைகளை விவரிக்கிறது. எழுவாய் முதல் விளி ஈறாக வேற்றுமை எட்டு எனவும் அவற்றுள் வினைச்சொற்களை முடிப்புச் சொற்களாக ஏற்பவை ஆறு எனவும் கூறுகிறது. இவை காரகம் எனப்படும். கருத்தா, கருமம், கரணம், கோளி, அவதி, ஆதாரம் என்பனவே அக்காரகங்கள். இவை முறையே வினைமுதல் (முதல் வேற்றுமை), வினை (இரண்டாம் வேற்றுமை), கருவி (மூன்றாம் வேற்றுமை), கோடல் (நான்காம் வேற்றுமை), நீங்கல் (ஐந்தாம் வேற்றுமை), இடம் (ஏழாம் வேற்றுமை) என்னும் தமிழ் வேற்றுமைகளின் வடசொற்களாகும்.

வீரசோழியம் வேற்றுமை உருபுகள் சேர்தற்கான பெயர்களைப் பகுதியாகக் கொண்டு, அவை எட்டு வகைப்படும் என்று கூறுகிறது. ஆண் ஒருமை, பெண் ஒருமை, அஃறிணை ஒருமை, ஆண் ஒருமைச் சிறப்பு, பெண் ஒருமைச் சிறப்பு, அஃறிணை ஒருமைச் சிறப்பு, பலர், பல என்பன அவ்வெட்டு வகைகளாகும். இவற்றுக்குப் பின்னால் வேற்றுமை உருபுகள் இணையும். மரியாதை ஒருமையை இந்நூல் சிறப்பு எனக் குறிப்பிடுகிறது.

சு, அர், ஆர், அர்கள், ஆர்கள், கள் மார் என்னும் ஏழும் முதல் வேற்றுமையின் உருபுகளாகும். விளி வேற்றுமை ஒழிந்த பிற வேற்றுமை உருபுகள் முதல் வேற்றுமை உருபுகளின் பின்னர் இணையும்.

முதல் வேற்றுமை உருபுகளுள் 'சு' எல்லாப் பெயர்களிடத்தும் மறைந்தே காணப்படும். எனவே இதனை ஓர் உருவிலி உருபாக (zero morph) இந்நூல் கருதுகிறது.

வீரசோழியம் குறிப்பிடுகிற உருபுகளுள் 'சு' தவிர்ந்தவை பெயர்ச்சொற்களின் விகுதிகளாகும்.

பெயர்ச்சொற்களோடு உருபுகளை உறழ்ந்து எண்ணிக்கை கூறுகிற நெறி இந்நூலில் *(31)* காணப்படுகிறது. எண்வகைப் பெயர்களோடு எட்டு வேற்றுமைகளையும் உறழ்ந்து வேற்றுமை உருபுகள் அறுபத்து நான்கு *(8 x 8 = 64)* என்பது கூறப்படுகிறது.

வீரசோழியம் *(34)* மூன்றாம் வேற்றுமை உருபுகளாக ஆல், ஒடு, ஓடு மூன்றையும் குறிப்பிட்டு, அவை வினைமுதல், கருவிப் பொருள்களில் வரும் எனக் கூறுகிறது. உரையாசிரியர் பெருந்தேவனார் ஆன் உருபையும் சேர்த்துக் கூறுகிறார். இதற்கு அவர்,

> தொல்காப்பியனார் ஒடு என்னும் பிரத்தியமொன்றே
> மூன்றாம் வேற்றுமைக்கு உருபாகச் சொன்னார்.
> 'ஆலும் ஆனும் மூன்ற னுருபே' என்றார் அவிநயனார்

என அமைதி கூறுகிறார்.

நான்காம் வேற்றுமை கு, பொருட்டு என்னும் உருபுகளையும் 'கோளி'ப் (கோடல்) பொருளையும் உடையது.

பொருட்டு என்பது நோக்கப் பொருளில் வருகிறது. இது பிற்கால இலக்கண அறிஞர்களால் சொல்லுருபு என்று சொல்லப்படுகிறது. வீரசோழியமே முதன் முதலில் சொல்லுருபை வேற்றுமை உருபாகக் கூறுகிறது. சொல்லுருபு பண்டு தொட்டுத் தமிழில் வழங்கி வருகிறது.

வேளாண்மை செய்தற் பொருட்டு (திருக்குறள், 81)

பொருட்டு என்பது பேச்சு வழக்கிலிருந்து பின்னர் இலக்கிய மொழியில் நுழைந்திருக்கலாம்.

வீரசோழியம் (35) உரையான், உடையாள், உடையார், உடையார்கள், உடையது, உடையின, உடைய என்பவற்றை ஆறாம் வேற்றுமை உருபுகள் என்கிறது. இவை உடை என்னும் அடிச்சொல்லில் இருந்து உருவானவை. ஆறாம் வேற்றுமைப் பொருளில் வழங்குகின்றன. பேச்சு மொழியில் பெருவழக்கில் இருந்தமையால், இச்சொல்லுருபை இந்நூல் கூறுகிறது. வடமொழியாளருக்குத் தமிழைப் பயிற்றும் நோக்கில் பேச்சு மொழி வழக்குகள் இந்நூலில் பெருவாரியாக இலக்கணத் தரவுகளாக ஏற்கப் பெற்றுள்ளன.

வீரசோழியம் 'உடை' என்பதனடியாகப் பிறந்த ஏழனையும் பெற்று வரும் போது ஆறாம் வேற்றுமை வினைச் சொல்லை முடிப்பாகக் கொள்ளாது என்று கூறுகிறது. ஆனால் 'கு' உருபை ஏற்கும் போது வினைச் சொல்லைக் கொண்டு முடியும் என்கிறது. உரையாசிரியர் 'சாத்தனுக்கு மகனானான்' என்ற தொடரை இதற்குச் சான்று காட்டுகிறார். 'உடை' என்பதனடியாகப் பிறந்தவை தாமே குறிப்பு வினையாகச் செயலாற்றுகின்றன.

வீரசோழியம் நான்காம் வேற்றுமை உருபான குகரத்தை ஆறன் உருபு எனப் பிறழக் கூறுகிறது. ஆறன் உருபு அதுவுக்குப் பதிலாகக் குகரம் வருதலைத் தொல்காப்பியமும் நன்னூல், இலக்கண விளக்கம் போன்ற பிற்கால நூல்களும் வேற்றுமை மயக்கம் எனக் கூறுகின்றன.

வீரசோழியம் (35) கே, உழை, வயின், பக்கல், உழி, இல், கண் என்பவற்றை ஏழாம் வேற்றுமைக்கு உருபுகளாகக் கூறுகிறது. பெருந்தேவனார் இடம், இடை, முன், பின், கீழ், மேல், உள், புறம், வாய் முதலியவும் இதற்கு உருபுகளாக வருதலைச் சுட்டுகிறார்.

ஏழாம் வேற்றுமை உருபுகளுள் கே என்பது நான்கன் உருபு குகரமும் 'ஏ' என்னும் அசைநிலையும் சேர்ந்த வடிவமாகும். நான்கன் உருபு மதுரைக்குப் போனான், நாளைக்குப் போவேன் என்பன போன்று ஏழாம் வேற்றுமைப் பொருளில் வருதல் தமிழில் பெருவழக்காகும்.

ஐந்தாம் வேற்றுமை உருபு நின்று என்பதாகும்; இது ஏழாம் வேற்றுமை உருபுகளுடன் இணைந்து வரும் என்றும் வீரசோழியம் கூறுகிறது. உரையாசிரியர் இன் என்னும் உருபையும் ஐந்தாம் வேற்றுமைக்குக் கூறுகிறார்.

**சாத்தனுழை நின்றுந் தீமை அகன்றது பெரியோரிடை நின்றுஞ் சின நீங்கிற்று மலையினின்றும் அருவி வீழ்ந்தது ஊரின் நீங்கினான்**

உரையாசிரியர் காட்டும் இச்சான்றுகளில் சொல்லுருபு 'நின்று' உழை, இடை, இல் என்னும் ஏழாம் வேற்றுமை உருபுகளுடன் இணைந்து வருகிறது. ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபு இவ்வாறு இணைந்து வருதலைத் தற்காலத்திலும் காணலாம்.

**மரத்திலிருந்து விழுந்தது அவனிடமிருந்து பெற்றான் இருந்து என்பது தற்கால மொழியில் நீங்கல் பொருளில் வழங்கும் சொல்லுருபு.**

வீரசோழியம் (36) விளி வேற்றுமை முன்னிலையில் வரும் என்றும் ஆய், ஆள், ஈ, ஏ, அ, ஆ, ஆன், ஓல், ஓய், ஈர் என்பன இவ்வேற்றுமையின் உருபுகள் என்றும் கூறுகிறது.

ஆய் முதலியன பெயர்ச்சொல் விகுதிகளின் ஒலித்திரிபு வடிவங்களாகும்.

நேமிநாதம் தொல்காப்பியம் முதல் நூற்பாவில் கூறிய உருபு, பொருள் இரண்டையும் மட்டும் கூறுகிறது. ஆனால் இது தொல்காப்பியத்தின் தொடரமைப்புக்களை விவரிக்கவில்லை. மேலும், மூன்றாம் வேற்றுமைக்கு ஆன் உருபையும் இந்நூல் சேர்த்துக் கூறுகிறது.

பிற்கால இலக்கண நூல்களுள் நன்னூல் வேற்றுமைகளைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறுகிறது. இது வேற்றுமையின் வரைவிலக்கணத்தை,

ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை (நன்னூல், 290)

என்று கூறுகிறது.

நன்னூல் முதலாம் வேற்றுமைக்கும் உருபு உண்டு என்னும் கொள்கை உடையது. இதனைப் பின்வரும் நூற்பாக்களில் உணரலாம்.

ஒருவ னொருத்திபல ரொன்று பலவென
வருபெய ரைந்தொடு பெயர்முத லிருநான்
குருபு முறழ்தர நாற்பதா முருபே (நன்னூல், 239)

**எழுவா யுருபு திரிபில் பெயரே**
**வினைபெயர் வினாக்கொள லதன்பய னிலையோ**

*(நன்னூல், 294)*

'எழுவாய் உருபு திரிபில் பெயர்' என்பதனால் இந்நூல் வடமொழியாளர் கருதுதல் போன்று 'சு' உருபு புணர்ந்து கெட்டது எனக் கொள்கிறது எனலாம். முதல் வேற்றுமைக்கு உருபு உண்டு என்பதும் உருபுகளை ஐம்பாற் பெயர்ச் சொற்களோடு உறழ்ந்து கூறுதலும் வீரசோழிய நெறியாகும். எனினும் வீரசோழியத்தின் சிறப்புப் பெயரை (மரியாதை ஒருமையை) நன்னூல் ஏற்கவில்லை.

தொல்காப்பியம் கூறும் ஆறு பயனிலைகளையும் நன்னூல் வினை, பெயர், வினா என்னும் முன்றனுள் அடக்கியுள்ளது. இப்பகுப்பு முறை அகத்தியத்திலிருந்து தழுவப்பட்டிருக்கலாம் என்பது மயிலைநாதர் கருத்து. இதனை அவரது,

> பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல், வினை நிலையுரைத்தல் வினாவிற்கேற்றல், பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென், றன்றி யனைத்தும் பெயர்ப்பயனிலையே என்னுமிவ்வாறும் இம்மூன்ற னுளடங்கமெனக் கொள்க.
>
> **"வினைநிலை யுரைத்தலும் வினாவிற் கேற்றலும்**
> **பெயர்கொள வருதலும் பெயர்ப்பய னிலையே"**
>
> என்றார் அகத்தியனாருமென்க

என்னும் உரைப்பகுதியில் உணரலாம். நன்னூலின் இலக்கணக் கருத்துக்கு அந்நூல் தோன்றிய காலத்தில் கிடைக்கப் பெற்ற முந்தை இலக்கண நூல்களும் தரவுகளாக அமைந்துள்ளன.

நன்னூல் *(296)* மூன்றாம் வேற்றுமையினை,

**மூன்றா வதனுரு பாலா னோடொடு**
**கருவி கருத்தா வுடனிகழ் வதன்பொருள்**

என்று கூறுகிறது. இக்கருத்து தொல்காப்பிய உரைகளில் காணப்படுகிறது.

மூன்றாம் வேற்றுமை உருபுகளுள் ஆல், ஆன் இரண்டும் கருவி, கருத்தாப் பொருள்களிலும் ஒடு, ஓடு இரண்டும் உடனிகழ்ச்சிப் பொருளிலும் வருதலை இடைக்கால இலக்கியங்களிலும்

அவற்றுக்குப் பிந்தைய காலத்து வழக்கிலும் காணலாம். சங்க இலக்கியங்களில் ஆன், ஆல் இரண்டும் கருவிப் பொருளில் மட்டுமே இடம் பெற்றுள்ளன (T. Natarajan, The Language of Sangam Literature and Tolkappiyam). எனினும் நன்னூல் இவ்வுருபுகளின் வருகையை வரையறுத்துக் கூறவில்லை. மொழி வழக்கை விடவும் முந்தைய இலக்கண அறிஞர்களின் கருத்துக்கு முன்னுரிமை தந்து இலக்கணம் கூறும் நெறியே இதற்குக் காரணமாகும்.

ஐந்தாம் வேற்றுமைச் செய்திகள் நன்னூலில் இளம்பூரணர், சேனாவரையர் உரைகளைத் தழுவிக் காணப்படுகின்றன. எனினும் இந்நூல் கூறும் உருபுகளுள் (இன், இல்) இல் என்பது புதியதாகும். இன் உருபே இல் என ஒலிமாற்றம் பெற்றிருப்பதாகத் தெ.பொ. மீனாட்சிசுந்தரன் (தமிழ்மொழி வரலாறு, பக்கம் 153) கூறுகிறார்.

ஆறாம் வேற்றுமை அது, ஆது, அ என்னும் மூன்று உருபுகளையும் தற்கிழமை, பிறிதின் கிழமை என்னும் இரு பொருள்களையும் உடையது.

**ஆற னொருமைக் கதுவு மாதுவும்**
**பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப்**
**பொன்றன் கூட்டம் பலவி னீட்டம்**
**திரிபி னாக்க மாந்தற் கிழமையும்**
**பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே (நன்னூல், 299)**

பொருள் குறித்த செய்தி இளம்பூரணர் உரையைத் தழுவியுள்ளது.

நன்னூல் (301) கண், கால், கடை, இடை போன்றவற்றை ஏழாம் வேற்றுமை 'இடப்பொருள் உருபு' எனக் கூறுகிறது. இதுவும் இளம்பூரணர் உரையைத் தழுவியதே.

விளி ஏற்கும் போது பெயர்ச்சொற்களின் அமைப்பான இயல்பு, திரிபு போன்றவற்றை நன்னூல் விளிவேற்றுமையின் உருபுகள் எனக் கூறுகிறது.

**எட்ட னுருபே யெய்துபெய ரீற்றின்**
**றிரிபு குன்றன் மிகுத லியல்பயற்**
**றிரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்**
**தன்முக மாகத் தானழைப் பதுவே (நன்னூல், 302)**

படர்க்கையோரைத் தன்முகமாகத் (முன்னிலையாகத்) தான் அழைப்பதனை நன்னூல் எட்டாம் வேற்றுமையின் பொருளாகக் கொள்கிறது.

நன்னூலின் வேற்றுமைக் கருத்துக்கள் தொல்காப்பிய உரைகளைப் பெரிதும் சார்ந்துள்ளன.

இலக்கண விளக்கம் வேற்றுமைச் செய்திகளுள் பெரும்பாலானவற்றை நன்னூலைத் தழுவி விவரிக்கிறது. முதல் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை ஆகியவற்றை நன்னூல் நூற்பாக்களையே எடுத்து மொழிந்து இந்நூல் விளக்குகிறது. ஐந்தாவது நன்னூல் கருத்தை வழி மொழிவதாகக் காணப்படுகிறது.

இரண்டாம் வேற்றுமையின் பொருளான செயப்படு பொருளை இந்நூல் மூன்றாகப் பகுத்துக் கூறுகிறது.

**இரண்டா வதனுரு பையே யதன்பொரு**
**ளியற்றவுந் திரிக்கவு மெய்தவும் படூஉந்**
**திறத்தவும் பிறவுமாஞ் செயப்படு பொருளே**

**(இலக்கண விளக்கம், 199)**

செயப்படுபொருளின் பகுப்பு

**'இயற்றப்படுவதும் வேறுபடுக்கப்படுவதும் எய்**
**தப்படுவதுமெனச் செயப்படுபொருள் மூன்றாம்**

என்னும் சேனாவரையர் (தொல்.சொல். 71) உரையை ஒட்டியதாகும்.

இலக்கண விளக்கம் ஆறாம் வேற்றுமையையும் ஏழாம் வேற்றுமையையும் விவரிப்பதில் சேனாவரையர் உரையையே தழுவியுள்ளது. குறிப்பாக, 'பொருளிடங்காலமாம் பிறிதின் கிழமை' எனப் பிறிதின் கிழமையை மூன்றாகப் பகுப்பதிலும் கண், கால் போன்வனவற்றை வேற்றுமை உருபுகளல்ல; அவை இடப் பொருள் உணர்த்தும் பெயர்களே என்று கூறுவதிலும் இத்தழுவல் வெளிப்படுகிறது.

ஏழாம் வேற்றுமையை இலக்கண விளக்கம் சேனாவரையரைத் தழுவி விவரிக்கிறது என்பதற்கு இந்நூலாசிரியரின் உரைப்பகுதி வெளிப்படையாகவே சான்று கூறுகிறது.

இனிக் கண்கால் முதலியவற்றை உருபென்பாரும் உளராலோ வெனின், உருபாயின் ஊர்ப்புறத்திருந்தான் ஊரகத்திருந்தான் கைவலத்துள்ளது கொடுக்கும் எனப் புறம் அகம் வலம் என்பனவற்றுவழி அத்துச் சாரியை கொடுத்து வரலாறு காட்டல் பொருந்தாமையானும் அவை வேறுபட்ட இடப்பொருளவாகிய பெயராய் நிற்றலல்லது பெயர்ப் பொருளை ஐ, ஒடு, கு, இன், அது போல வேறுபடுத்துந் தன்மையவாய உருபுகளாய் நிற்றலின்மையானும் உருபாகா வென்க. இவற்றைப் பொருளென்றலே ஆசிரியர் தொல்காப்பியனார்க்குங் கருத்து என்பது சேனாவரை யருரையான் உணர்க (இலக்கண விளக்கம், 204).

பிரயோக விவேகம் (8) எழுவாய் வேற்றுமைக்கு உருபு உண்டு என்பதை,

**தேற்றும் தமிழுக்கு எழுவாய்**
**விபத்தி திரிபில் பெயர்**

என்று குறிப்பிடுகிறது. இந்நூல் வடமொழிக்கும் தமிழுக்கும் ஒத்த இலக்கணமே உண்டு என்னும் கொள்கை உடையது.

இலக்கணக் கொத்து (16) வேற்றுமை உருபுகளை உருபு, வேறுருபு, சொல்லுருபு என மூன்றாக வகைப்படுத்துகிறது.

**வாளால் வெட்டினான் – உருபு**
**வாளின் வெட்டினான் – வேறுருபு**
**வாள்கொண்டு வெட்டினான் – சொல்லுருபு.**

ஒரு வேற்றுமைக்குரிய உருபு வேறு வேற்றுமைப் பொருளில் வருதலை இந்நூல் வேறுருபு என்று சுட்டுகிறது.

இலக்கணக் கொத்து எழுவாய் வேற்றுமை உருபு குறித்த பல்வேறு கொள்கைகளைத் தொகுத்துத் தருகிறது.

**எழுவாய் வேற்றுமைக் குருபே இன்று**
**பெயரே பயனிலை கொள்ளும் தன்மையே**
**பயனிலை தன்னைக் கொண்ட தன்மையே**
**வினைமுதல் ஆதலே விகாரப் பெயரே**
**பெயர்ப்பின் விகுதி பெறுதலே ஆயவன்**

**அனவன் ஆவான் ஆகின்றவன் முதல**
**ஐம்பால் சொல்லும் பெயர்ப்பின் அடைதலே**
**உருபென வெவ்வேறு உரைத்தார் பலரே.**

**(இலக்கணக்கொத்து, 25)**

எழுவாய் உருபு பற்றிய எட்டுக் கொள்கைகளை இந்நூற்பா தொகுத்துக் கூறுகிறது.

தொன்னூல் விளக்கம் நன்னூலைப் பின்பற்றி வேற்றுமைகளை விவரிக்கிறது. இந்நூல் முதல் வேற்றுமைக்கு ஆனவன் முதலிய சொல்லுருபுகள் உண்டு எனக் குறிப்பிடுகிறது. இது நன்னூலில் கூறப்படாத கருத்தாகும்.

> இம்முதல் வேற்றுமைக்கு ஐம் முதலிய உருபுகளின் றாயினுஞ் சிறுபான்மை ஆனவன், ஆகின்றவன், ஆவான் முதலாக ஐம்பாலிலும் வருகிற சொல்லுருபுகளுண்டு. உ-ம். கொற்றனானவன், கொற்றியானவள், கொற்றரானவர், கோவானது, கோக்களானவை எனச் சிலவிடங்களில் வரும். அன்றியுஞ் சாத்தனென்பவன் என வருதலுமறிக.

இவ்வாறு வீரமாமுனிவர் விளக்குகிறார்.

தொன்னூல் விளக்கம் பயனிலையை எழுவாயின் பொருள் எனக் கூறுகிறது.

**எழுவா யுருபா மியல்பிற் பெயரே**
**மீண்டதன் பொருளாம் வினைபெயர் வினாவே.**

தொன்னூல் விளக்கம் நின்று, இருந்து என்பன ஐந்தாம் வேற்றுமையின் சொல்லுருபுகள் என்றும் இவை நீக்கப் பொருளில் இல், இன் உருபுகளுடன் இணைந்து வரும் என்றும் கூறுகிறது.

**ஊரினின்று நீங்கினான், ஊரிலிருந்து போனான்**

ஆறாம் வேற்றுமையில் அது, ஆது, அ என்னும் உருபுகள் தவிர, உடைய என்னும் சொல்லுருபும் குகர உருபும் வருதலைத் தொன்னூல் விளக்கம் கூறுகிறது.

**சாத்தனுடைய மகன்**
**சாத்தனுக்கு மகன்**

சாத்தனுக்கு மகன் என்பது நான்கன் உருபு குகரம் ஆறாம் வேற்றுமைப் பொருளில் மயங்குகிறது.

முத்துவீரியம் தொல்காப்பியம், நன்னூல் இரண்டின் விவரிப்பு நெறிகளின் கலப்பு நெறியை ஏற்று வேற்றுமைகளை விவரிக்கிறது. ஒவ்வொரு வேற்றுமையும் தொல்காப்பியத்தைப் போன்று இரு நூற்பாக்களில் விவரிக்கப்படுகிறது. முதல் நூற்பா உருபுகளைக் கூறுகிறது. இரண்டாவது பொருள்களைக் கூறுகிறது.

முத்துவீரியம் குறிப்பிடும் உருபுகள் நன்னூலில் காணப்படுவனவாகும்; பொருள் தொல்காப்பியத்தின் சுருக்கமாக உளது.

முத்துவீரியம் (512) பயனிலைகளை முதல் வேற்றுமைக்குரிய பொருள் எனக் கூறுகிறது. இப்பயனிலை விளங்கோள், வினைநிலை, வினா, பெயர், பண்பு என ஐந்து வகைப்படும். எழுவாய்க்குரிய பயனிலைகளை ஐந்து எனக் கூறுவது புதிய செய்தியாகும்.

**சாரியைகள்**

இலக்கண நூல்கள் எழுத்துக்களை ஒலிப்பதற்குத் துணையாக வருவன, நிலைமொழியும் வருமொழியும் புணருமிடத்து இடையில் வருவன என்ற இரு நிலைகளில் சாரியைகளை விவரிக்கின்றன.

தொல்காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் ஆகியன அ, கரம், காரம், கான் என்னும் எழுத்துச்சாரியைகளையும் அவை சார்ந்து வருதற்கான எழுத்துக்களையும் கூறுகின்றன. எழுத்துச் சாரியையைப் பொறுத்த வரையில் இலக்கண நூல்களுக்கு இடையில் கருத்து வேறுபடவில்லை. ஆனால் புணர்மொழியில் வருகிற சாரியைகளின் வடிவத்தையும் எண்ணிக்கையினையும் கூறுவதில் நூல்கள் வேறுபடுகின்றன.

தொல்காப்பியம் இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன் (தொல்.எழு. 120) ஏ (தொல். எழு. 165) ஆகிய சாரியைகளைக் கூறுகிறது. மேலும், நம், நும், தம், உம் என்பன புணர்ச்சியில் வருதலையும் குறிப்பிடுகின்றது. உரையாசிரியர்கள் நம் முதலியவற்றையும் கெழு, ஐ, ஞான்று என்பவற்றையும் சாரியைகள் எனக் கூறுகின்றனர்.

தொல்காப்பியம் சில சாரியைகள் புணர்ச்சியில் வருங்கால் வடிவ மாற்றம் பெறுதலைக் கூறுகிறது. வற்று என்பது அற்று ஆகும். ஒன் என்பது ன் என்றாகும். அக்குச் சாரியை 'அ' என்றும் இக்குச் சாரியை 'கு' என்றும் மாறும். மேலும், உயிரை முதலாகக் கொண்ட அளவுப் பெயர்களின் முன் வரும் இன் சாரியை 'இற்' எனத் திரியும்

என்று தொல்காப்பியம் (எழு. 122) கூறுகிறது. இதற்கு உரையாசிரியர்கள் பதிற்றகல், பதிற்றுழக்கு என்பவற்றைச் சான்று காட்டுகின்றனர். உயிருக்கு முன் வரும் னகரம் றகரமாகத் திரிதல் மொழியியல்பு அன்று. எனவே இங்கு வருவதனை இற்றுச் சாரியை எனக் கொள்ளுதலே ஏற்புடையது.

தொல்காப்பியம் அற்று, அ, கு என்பவற்றைப் பிறழப் பிரித்து முறையே வற்று, அக்கு, இக்கு எனக் கூறுகிறது. (M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, page 121-122, 127-128).

உரையாசிரியர்கள் சாரியை எனக் கூறுவனவற்றுள் நம், நும், தம் என்பன மூவிடப் பெயர்களின் வேற்றுமை உருபேற்கும் வடிவங்களாகும். இவை தம் இயல்புப் பொருளை இழந்து சாரியைகளாக வருகின்றன; உம், ஞான்று என்பன முறையே இடைச்சொல்லாகவும் காலப் பொருள் உணர்த்தும் தனிச்சொல்லாகவும் கொள்ளத்தக்கன; கெழு என்பது வினையடியாகும்.

நன்னூல் (243) அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், நம், நும், தம், ஏ, அ, உ, ஐ, கு, ன் ஆகிய பதினேழு சாரியைகளைக் குறிப்பிடுகிறது. இலக்கண விளக்கம் (59) இவற்றுடன் உம், ஞான்று, கெழுவையும் சேர்த்து இருபது சொற்களைச் சாரியை எனக் கூறுகிறது.

அல் என்பதற்கு மயிலை நாதரும் இலக்கண விளக்க ஆசிரியரும் தொடையல் என்ற சொல்லைச் சான்று காட்டுகின்றனர். இச்சொல்லில் அல் சொல்லாக்க விகுதியாக வருகிறது. தொடை என்பதன் பொருளையே தொடையல் என்ற சொல்லும் உணர்த்துதலால் இவர்கள் பிறழ உணர வேண்டியதாயிற்று. குன்று, குன்றம்; மற்று, மன்றம் என்பவற்றைப் போன்றது இச்சொல்லாக்கம்.

தொன்னூல் விளக்கம் (52) நன்னூலை வழிமொழிகிறது.

முத்துவீரியம் (174) அத்து, அம், ஆன், அக்கு, இன், அன், ஒன், இக்கு, அற்று, நம், நும், தம், உம் என்னும் பதின்மூன்றையும் சாரியை என்று கூறுகிறது.

நன்னூல் சாரியைகளை இனம் காண்பதில் தொல்காப்பியத்தை விடவும் சிறந்து காணப்படுகிறது. இந்நூலிடமும் இலக்கண விளக்கத்திடமும் உரையாசிரியர்களின் செல்வாக்கு

வெளிப்படுகிறது. முத்துவீரியம் தொல்காப்பியத்தையும் நன்னூலையும் தழுவிச் சாரியைகளைக் கூறுகிறது.

**வினைச்சொல்**

தொல்காப்பியம் வினைச்சொற்களின் வரைவிலக்கணத்தை,

**வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது**
**நினையுங் காலை காலமொடு தோன்றும்**

*(தொல்.சொல். 195)*

என்று கூறுகிறது. வினைச்சொல்லில் காலம் சொல்லமைப்பில் வெளிப்படையாகவும் கருத்தமைப்பில் குறிப்பாகவும் வெளிப்படுதலை 'அம்முக்காலமும் குறிப்பொடும் கொள்ளும்' என்று இந்நூல் குறிப்பிடுகிறது.

தொல்காப்பியத்தில் வினைச்சொற்கள் காலத்தை வெளிப்படுத்துதலை ஒட்டி வினை என்றும் குறிப்பு என்றும் இருவகைப்படுத்தப்படுகின்றன. மேலும், சொற்களின் வழக்கு அடிப்படையில் உயர்திணை வினை, அஃறிணை வினை, இரு திணைக்கும் ஓரன்ன உரிமைய என்றும் செயலின் நிலையை ஒட்டி முற்று, எச்சம் என்றும் வகைப்படுத்தலையும் காணமுடிகிறது.

நேமிநாதம் மூவிடங்களின் அடிப்படையில் வினைச்சொற்களை வகைப்படுத்துகிறது. மேலும், இந்நூலில் தொல்காப்பிய வகைப்பாடும் இடம் பெற்றுள்ளது.

நன்னூல் வினை, வினைக்குறிப்பு என்னும் வகைகளைக் கூறி, இரண்டின் வரைவிலக்கணத்தையும் தனித்தனியே கூறுகிறது.

**செய்பவன் கருவி நிலம் செயல் காலம்**
**செயப்படுபொருள் ஆறும் தருவது வினையே** *(நன்னூல், 319)*

**பொருண்முத லாறினும் தோற்றிமுன் னாறனுள்**
**வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே**

*(நன்னூல், 320)*

வினைக்குறிப்பு என்னும் சொல்லாட்சியை நன்னூல் தொல்காப்பிய உரைகளிலிருந்து பெற்றுளது. இந்நூல் வினைமுற்றைச் சிறப்பானதாகக் கொண்டு, அதன் இலக்கணத்தை வினைச்சொற்கள் யாவற்றுக்கும் பொது இலக்கணமாகக் கூறுகிறது. இவ்விலக்கணத்தி லிருந்து வேறான இயல்புகளைச் சுட்டிக் காட்டி எச்ச வினைகள் பின்னர் விளக்கப்படுகின்றன.

நன்னூல் வினைச்சொற்களைச் செயலின் நிலையை ஒட்டி இரண்டாகவும் பால் - எண்ணை ஒட்டி ஐந்தாகவும் வகைப் படுத்துகிறது.

இலக்கண விளக்கம் நன்னூலின் வரைவிலக்கணத்துடன் 'பொருட் புடை பெயர்ச்சி புலப்படுப் பதுவே' என்பதையும் சேர்த்துக் கூறுகிறது. இப்புதுச் செய்தி சேனாவரையர் (தொல்.சொல். 200) உரையிலிருந்து பெறப்பட்டுள்ளது. இந்நூல் நன்னூலைத் தழுவி வினைச் சொற்களை வகைப்படுத்துகிறது.

தொன்னூல் விளக்கம் (103) முக்கால முற்று வினை, ஏவல், வியங்கோள், ஈரெச்சம், வினைக்குறிப்பு என வினைச்சொற்களை வகைப்படுத்துகிறது. இந்நூல் வினைச்சொல்லின் வரைவிலக்கணமாக நன்னூல் நூற்பாக்களை உரையில் எடுத்து மொழிகிறது.

முத்துவீரியம் தொல்காப்பியத்தைப் பின்பற்றி வினைச் சொல்லின் வரைவிலக்கணத்தையும் வகைகளையும் விவரிக்கிறது.

## மூவிட வினைகள்

தொல்காப்பியம் தன்மைப் பெயர்களைப் போன்று தன்மை வினைகளையும் உயர்திணையாகக் கருதுகிறது. இந்நூல் (சொல். 199, 200) குற்றியலுகரக் கு, டு, து, று; என், ஏன், அல் என்னும் விகுதிகள் தன்மை ஒருமை வினைகளையும் அம், ஆம், எம், ஏம், கும், டும், தும், றும் விகுதிகள் தன்மைப் பன்மை வினைகளையும் அமைத்தலைக் குறிப்பிடுகிறது. மேலும், செய்கு வாய்பாட்டு வினைமுற்றுக்கள் பிறிதொரு வினைமுற்றைக் கொண்டு முடியினும் முற்று என்னும் இயல்பிலிருந்து திரியா எனவும் கூறுகிறது.

இளம்பூரணர் அன் என்னும் விகுதியை எடுத்துரைத்து, அது 'அல் உண்பல் தின்பல் என எதிர்காலம் பற்றி வரும். இப்பொழுது அதனை உண்பன், தின்பன் என அன்னீறாக வழங்குப என்ப' என்று கூறுகிறார். சேனாவரையர், 'செய்கென்பது போலச் செய்கு மென்பதூஉங் காண்கும் வந்தேம் என வினை கொண்டு முடியும்' என்கிறார்.

இலக்கியங்களில் அன் என்னும் தன்மை ஒருமை விகுதியும் ஓம் என்னும் தன்மைப் பன்மை விகுதியும் பெற்ற சொற்கள் காணப்படுகின்றன.

**இழந்தனன் (குறுந்தொகை, 43)**

**காணோமோ (ஐந்திணை ஐம்பது 43).**

"தன்மை விகுதிகளுள் கு,டு,து,று; கும், டும், தும், றும் என்பன க், ட், த், ற் என்னும் இறவாக் காலக் குறியீடுகளுடன் முறையே தன்மை ஒருமை விகுதி உகரமும் தன்மைப் பன்மை விகுதி உம்மும் இணைந்த கூட்டு வடிவங்களாகும்" (Yuri, Y. Glasov, 'Non-Past Tense Morpheme in Ancient Tamil, page 107).

முன்னிலை வினைகளைத் தொல்காப்பியம் விரவுத்திணை வினைகளுடன் சேர்த்துள்ளது. இந்நூல் (சொல். 218, 219) இ, ஐ, ஆய் விகுதிகள் முன்னிலை ஒருமை வினைகளையும் இர், ஈர், மின் விகுதிகள் முன்னிலைப் பன்மை வினைகளையும் அமைத்தலைக் கூறுகிறது. மேலும், ஆய் விகுதி செய்யுளில் ஓய் என்று திரிந்து வழங்குதலையும் இந்நூல் கூறுகிறது.

"மின் விகுதி மொழியில் ஏவலை அன்புடன் உணர்த்த வருவதால் இதனை ம் (உம்) என்னும் ஏவல் பன்மை விகுதியும் இன் என்னும் அன்பு உணர்த்தும் வடிவமும் சேர்ந்த கூட்டு வடிவமாகக் கொள்ளலாம்" (மோ. இசரயேல், இலக்கண ஆய்வு, வினைச்சொல், பக்கம் 41).

தொல்காப்பியம் ஏவலை முன்னிலைவினையுள் அடக்கிக் கூறுகிறது.

தொல்காப்பியம் படர்க்கை வினைகளைத் திணை அடிப்படையில் உயர்திணை வினைகள், அஃறிணை வினைகள் எனப் பகுத்து, அவற்றை எண் அடிப்படையில் 'ஒருவர்மருங்கிற் படர்க்கை', 'பல்லோர் மருங்கிற் படர்க்கை' எனவும் வகைப்படுத்துகிறது. இந்நூல் இருதிணை வினைகளையும் பால்-எண் அடிப்படையில் வெளிப்படையாகப் பகுத்துக் கூறவில்லை. எனினும், 'ஊஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்' 'ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்' என்பன போன்று பால், எண் உணர்த்தும் விகுதிகளைக் கிளவியாக்கத்தில் குறிப்பிடுகிறது.

தொல்காப்பியம் (சொல். 202-204) அன், ஆன்; அள், ஆள் விகுதிகள் முறையே ஆண்பால், பெண்பால் வினைகளையும் அர், ஆர், ப, மார் நான்கும் பலர்பால் வினைகளையும் அமைத்தலைக் குறிப்பிடுகிறது.

"மார் விகுதி 'செய்யும்' வாய்பாட்டு வினைமுற்றுக்களின் மகரத்தையும் ஆர் என்னும் பலர்பால் விகுதியையும் சேர்த்துப் பிறழப் பிரித்தமையால் ஆனது" (M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, page 152-156).

'செய்யும்' வாய்பாட்டு வினைமுற்றுக்கள் தன்மை, முன்னிலை, பல்லோர் படர்க்கை ஆகியவற்றில் வாரா என்பது தொல்காப்பிய விதி (வினையியல், 30). இதற்கு மாறாக இச்சொற்கள் மொழி வழக்கில் வழங்கின. மார் விகுதி செய்யும் வாய்பாட்டிலுள்ள மகரத்தைப் பலர் பால் விகுதி ஆருடன் சேர்த்துப் பிறழப் பிரித்தமையால் உருவானதே. செய்யும் சொற்கள் பலர்பாலில் வாரா என்னும் விதியைப் பேணும் நோக்கில் இது நிகழ்ந்துள்ளது. இதனை உறுதிப்படுத்துகிற சான்றாகக் கொய்யுமோன் (புறநானூறு 262), அறியுமோன் (புறநானூறு 137) என்னும் ஆண்பால் வினைமுற்றுக்களும் காணப்படுகின்றன. மேலும், செய்யும் வாய்பாட்டுச் சொற்களோடு வேறு விகுதிகள் (மியா, மோ, மதி) சேர்ந்து வருதலையும் காண முடிகிறது. இவற்றை எல்லாம் இடைச்சொற்கள் எனத் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன.

**நாரரி நறவின் நாள்மகிழ் தூங்குந்து** (புறநானூறு, 400)

**கருங்கோட்டு இருப்பைப்பூ உறைக்குந்து**
**இருங்கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து** (புறநானூறு 384)

'செய்யும் வாய்பாட்டுச் சொற்கள் பற்றிய இலக்கண நூல்களின் விதி தொல்காப்பியத்திற்கு முந்தைய தமிழின் இயல்பாகும். ஆனால் இவ்வியல்பு பின்னாளில், குறிப்பாகப் பேச்சுத் தமிழில் மாற்றம் பெற்றிருக்க வேண்டும். வட்டாரக் கிளை மொழிகளிலிருந்து இவை எழுத்துத் தமிழில் நுழைந்துள்ளன' (பெ. சுயம்பு, தமிழ்மொழி அமைப்பும் வரலாறும், பக்கம் 166-167).

ஆன், ஆள், ஆர் விகுதிகள் செய்யுளில் ஓன், ஓள், ஓர் என்று திரிந்தும் வழங்குதலைத் தொல்காப்பியம் கூறுகிறது.

ஆம் விகுதி மகரத்தின் செல்வாக்கினால் ஓம் எனத் திரிந்துள்ளது. இதன் ஒப்புமையாக்கத்தினால் ஓன், ஓள், ஓர் விகுதிகள் தோன்றியுள்ளன. எனினும் தொல்காப்பியம் ஓம் விகுதியைக் குறிப்பிடவில்லை. இவ்விகுதி பேச்சு மொழியில் வழங்கியதாலும் முந்தை இலக்கண நூல்களில் கூறப்படாததாலும் இதனைத் தொல்காப்பியம் விலக்கியுள்ளது எனலாம்.

தொல்காப்பியம் (சொல். 2212, 213) து, று, டு விகுதிகள் ஒன்றன்பால் வினைகளிலும் அ, ஆ, வ மூன்றும் பலவின்பால் வினைகளிலும் வருதலைக் கூறுகிறது.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் ஆகார விகுதி எதிர்மறையிலும் டுகர விகுதி குறிப்பு வினையிலும் மட்டுமே வரும் எனக் கூறுகின்றனர்.

"வ என்பது வ் என்னும் எதிர்கால இடைநிலையும் அ என்னும் பலவின்பால் விகுதியும் சேர்ந்த கூட்டு வடிவம் ஆகும்" (M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, page 156).

வீரசோழியம் (71-78) ஒருமை வினைமுற்றுக்களில் சிறப்பு (மரியாதை ஒருமை) என்னும் வகையையும் குறிப்பிடுகிறது. படர்க்கை வினைகள் ஒருவன், ஒருத்தி, சிறப்பு, பலர், ஒன்று, பல என்று ஆறு வகைப்படும். முன்னிலையும் தன்மையும் ஒருமை, சிறப்பு, பன்மை என மூன்று வகைப்படும். மேலும், இந்நூல் காலஇடைநிலைகளுடன் வினைமுற்று விகுதிகளையும் ஒருங்கிணைத்துச் சொற்களைப் பிரித்துக் கூறுகிறது.

ஏன், ஏம், ஓம் மூன்றும் தன்மை விகுதிகள். ஆய், ஈர், ஈர்கள் என்பன முன்னிலை விகுதிகள். ஆன், ஆள், ஆர், ஆர்கள், அது, அன ஆகியன படர்க்கை விகுதிகளாகும். இவ்விகுதிகளுள் ஏம், ஈர், ஆர் மூன்றும் சிறப்பு வினைக்கு உரியன. ஓம், ஈர்கள், ஆர்கள் மூன்றும் பன்மை வினைக்கு உரியன. அது என்பதில் அகரம் எழுத்துப் பேறு; துகரம் ஒன்றன்பால் விகுதி. அன என்பதில் அன் சாரியை; அகரம் பலவின்பால் விகுதி.

வீரசோழியம் (80) மூவிட வினைகளில் துணிவுப் பொருள் உணர்த்தும் வகை ஒன்றனையும் விவரிக்கிறது. உரையாசிரியர் பெருந்தேவனார் இவ்வகை வினைகளுக்குரிய சான்றுகளைத் தருகிறார்.

அன் - தன்மை ஒருமைத் துணிவு வினை
அறிவன், உண்பன்.

அம், ஓம் - தன்மைப் பன்மைத் துணிவு வினை
நாம் கண்டம், நாங்கள் கண்டம்; நாமறிசம், நாங்கள் அறிசம்; நாம் நிற்போம், நாங்கள் நிற்போம்;
நாம் அறிவோம்; நாங்கள் அறிவோம்

- படர்க்கை ஒருமைத் துணிவு வினை
அவன் அறியும், அவள் அறியும்

அர், அர்கள் - படர்க்கைப் பன்மைத் துணிவுவினை.
அவர் அறிவர், அவர் நிற்பர், அவர்கள் அறிவர்கள், அவர்கள் நிற்பர்கள்

இ, ஐ - முன்னிலைப் ஒருமைத் துணிவு வினை
நீ அறிசி, நீ அறிவை, நீ அறிதி

இர், ஈர் - முன்னிலைப் பன்மைத் துணிவு வினை.

தன்மைப் பன்மையில் அம் விகுதியைச் சம் என்றும் முன்னிலை ஒருமையில் இகர விகுதியை சி, தி என்றும் முன்னிலைப் பன்மையில் இர், ஈர் விகுதியை கிர், விர், சிர், திர், பிர், கீர், வீர், சீர், தீர், பீர் என்றும் வீரசோழியம் கூறுகிறது. இவற்றில் முதல் எழுத்து காலஇடைநிலை எனலாம். சம், சி, சிர், சீர் என்பவை பேச்சு மொழியில் வழங்கியிருக்க வேண்டும். முன்னிலைப் பன்மைத் துணிவு வினைக்கு உரையாசிரியர் சான்று தரவில்லை.

வீரசோழியம் (79) ஏவல் வினையில் ஒருமை, சிறப்பு, பன்மை எனும் மூவகைகளைக் கூறுகிறது. ஒருமை வினை சு விகுதியைப் பெற்று வரும். சிறப்பு வினை ஆமே, உம், மின், க விகுதிகளைப் பெற்று வரும். பன்மை வினையில் மின்கள், உம், கள் மூன்றும் வரும்.

வினைப்பகுதிகள் ஏவல் ஒருமையாக வருதலையே வீரசோழியம் சு விகுதி பெற்று வரும் எனக் கூறுகிறது.

சிறப்பு ஒருமை ஏவல் வினைக்கு நாம் போகாமே, நாம் நில்லும், நாம் போமின், நாம் நிற்க என்னும் சான்றுகளையும் பன்மை வினைக்கு நீங்கள் போமின்கள், நீங்கள் நில்லும், நீங்கள் போங்கள் என்னும் சான்றுகளையும் பெருந்தேவனார் தருகிறார். போகாமே என்பது போகலாமே என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம். போங்கள் என்பதில் (உ)ம்கள் என்பதே ஏவற்பன்மை விகுதியாகுமே அன்றி; கள் என்பதன்று. மின்கள், உங்கள் என்பன இரட்டைப் பன்மை விகுதிகள் ஆகும். மின், உம் என்பன மரியாதை ஒருமையில் (சிறப்பில்) வழங்கிய நிலையில் பன்மையை உணர்த்தக் கள் விகுதி இணைக்கப் பெற்றுள்ளது.

நேமிநாதம் (66-69) தொல்காப்பியத்தைப் பின்பற்றி மூவிட வினைகளை விளக்குகிறது. எனினும் இந்நூலில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. தொல்காப்பியம் கூறும் மார் விகுதியை இது நீக்கியுள்ளது. உண், சேர், பொரு போன்ற வினைப்பகுதிகளை முன்னிலை ஒருமை வினை எனக் கூறுகிறது.

மார் விகுதியை ஆர் விகுதியின் பிறழ்பிரிப்பு வடிவமாக இந்நூல் கருதி, நீக்கியுள்ளது எனலாம். வினைப்பகுதிகள் ஏவல் ஒருமை வினையாக் வருவன. ஏவல் வினை முன்னிலை இடத்தில் வருதலால், அதனை இந்நூல் முன்னிலை என்றே கூறுகிறது. இவ்வாறு கூறுதல் தொல்காப்பிய நெறியே.

நன்னூல் வினை முற்றுக்களைப் பால் - எண் அடிப்படையில் வகைப்படுத்துகிறது. தன்மை வினை இந்நூலில் விரவுத் திணை வினையுள் அடக்கப் பெற்றுள்ளது.

நன்னூல் தொல்காப்பியம் கூறும் செய்திகளில் சிறிது மாற்றம் செய்துள்ளது. தன்மை ஒருமையில் அன் விகுதி, தன்மைப் பன்மையில் ஓம் விகுதி, டுகர விகுதி குறிப்பு வினையிலும் ஆகார விகுதி எதிர்மறையிலும் மட்டுமே வரும் என்னும் செய்திகள் புதியனவாகும். மேலும், செய்கும் வாய்பாட்டுத் தன்மைப் பன்மை முற்றுக்கள் வேறொரு முற்றைக் கொண்டு முடியினும் அவை முற்றுக்கள் என்னும் இயல்பிலிருந்து பிறழா என்பதும் நன்னூலின் புதிய செய்தியே. இச்செய்திகள் தொல்காப்பிய உரைகளையும் பிற்கால மொழி வழக்கையும் தரவாகக் கொண்டவை.

நன்னூல் ஏவலை முன்னிலையுள் அடக்கிக் கூறினும், அதன் அமைப்பினை எடுத்துத் தனியாக இனம் காட்டுகிறது. ஐ, ஆய், இ, ஏவலில் வருகிற வினைப்பகுதிகள் ஆகியன முன்னிலை வினைகளில் வரும். இவை தவிர, ஈ, ஏ இரண்டும் மெய்களுடன் இணைந்து முன்னிலை ஒருமையாக வருதலையும் இந்நூல் கூறுகிறது. இதற்கு உரையாசிரியர்கள் சென்றீ பெரும, அட்டிலோலை தொட்டனை நின்மே என்று சான்று காட்டுகின்றனர். இச்செய்தியைத் தொல்காப்பியம் எச்சவியலில் கூறுகிறது.

சென்றீ என்பது சென்று என்னும் செய்து வாய்பாட்டு வினையெச்சமும் ஈ எனும் வினைச்சொல்லும் இணைந்த வடிவமாகும். இவ்வினை இங்குத் தனது இயல்பான பொருளை இழந்து துணை வினையாக வந்து, ஏவற் பொருளை உணர்த்துகிறது. செய்து வாய்பாட்டுச் சொற்களுடன் துணை வினைகள் இணைந்து ஏவலை உணர்த்துதல் தமிழில் இயல்பானதே. நின்மே என்பதில் நின்ம் என்னும் செய்யும் வாய்பாட்டு முற்றும் ஏகார அசையும் இடம் பெற்றுளது. இதில் செய்யும் என்பது ஏவலையும் ஏகாரம் அன்புணர்ச்சியையும் உணர்த்துகின்றன.

நன்னூல் (336) இர், ஈர் இரண்டையும் முன்னிலைப் பன்மை விகுதிகள் என்றும் மின் என்பதை ஏவற் பன்மை விகுதி என்றும் பிரித்துக் காட்டுகிறது.

இலக்கண விளக்கம் நன்னூல் கருத்துக்களை வழிமொழிகிறது. மேலும், இந்நூல் உம் என்னும் ஏவற் பன்மை விகுதியையும் கூறுகிறது. ஏவல் வினை இந்நூலில் முன்னிலையுள் அடக்கிக் கூறப்படுகிறது.

இலக்கண விளக்கமும் (241) தொல்காப்பியம், நன்னூலைப் போன்று செய்யும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள் பலர்பால், முன்னிலை, தன்மை ஆகியவற்றில் வாரா எனக் கூறுகிறது. இக்கூற்றுக்கு முரணாக உம் விகுதி ஏவலில் வரும் என்று கூறுவது உளது. முந்தைய நூல்களை வழிமொழிதலுக்கும் தன்கால மொழி வழக்கிற்கும் இடையே ஊசலாட்டமாக இம்முரண் காணப்படுகிறது. இது நூலாசிரியரின் மறதியால் ஏற்பட்ட ஒன்றாகும். இத்தகைய மறதியைச் சிவஞான முனிவர் இலக்கண விளக்கச் சூறாவளியில் சுட்டிச் செல்வதைக் காணலாம்.

தொன்னூல் விளக்கம் (105) நன்னூல் கூறும் மூவிட வினை விகுதிகளைக் கூறி, அவற்றில் சில மாற்றங்களை மொழிகிறது. தொல்காப்பியம், நன்னூல் போன்ற நூல்கள் கூறுகிற ஒன்றன்பால் விகுதி துகரத்தை இந்நூல் உகரம் எனக் கூறுகிறது. மேலும் தன்மைப் பன்மை, முன்னிலைப் பன்மை, பலர்பால் வினை விகுதிகளுடன் கள் விகுதி சேர்ந்த இரட்டைப் பன்மை விகுதிகளையும் இந்நூல் கூறுகிறது. இவ்விரட்டைப் பன்மை விகுதிகள் பெற்ற வினைச் சொற்களை வீரமாமுனிவர் தமது பிறிதொரு நூலான கிலாவிஸில் குறிப்பிடுகிறார். வந்தனங்கள், வந்தாங்கள், வந்தனெங்கள், வந்தோங்கள் (யாம்) - வந்தனீர்கள், வந்தீர்கள் (நீர்) - வந்தனர்கள், வந்தார்கள் (அவர்கள்). இச்சான்றுகளுள் வந்தீர்கள், வந்தார்கள் இரண்டும் ஒழிந்தவை மொழி வழக்கில் பயின்றதற்குச் சான்று காண்பது அரிது. பொதுமைப்படுத்தி விதி கூறுதல் என்னும் நெறி காரணமாக முனிவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தொன்னூல் விளக்கம் (113) ஏவல் வினைச் சொற்களைத் தனியாக விவரிக்கிறது. ஆல், தி, மோ என்னும் விகுதிகள் ஏவல் ஒருமைக்கு உரியன. ஈர், தீர், மின், மினீர் என்பன ஏவற் பன்மைக்கு உரியன. கு விகுதி ஒருமைக்கும் பன்மைக்கு உரியது.

முனிவர் கூறும் விகுதிகளுள் தி (போதி, அருள்தி) என்பதில் தகரம் கால இடைநிலை; இகரம் ஏவலொருமை விகுதி. மோ (சென்மோ) என்பதில் மகரம் (உம்) ஏவற்பன்மை; ஓகாரம் அசைநிலை.

இது செய்யும் வாய்பாட்டுச் சொல்லிலிருந்து பிறழப் பிரித்த வடிவம். மரியாதை ஒருமையில் இப்பன்மை விகுதி வருதலால் முனிவர் இதனை ஒருமை எனக் கூறுகிறார். தீர் என்பதில் தகரம் கால இடைநிலை; ஈர் ஏவற் பன்மை விகுதி. மினீர் என்பது இரட்டை விகுதி.

குகர விகுதிக்குப் பின்வரும் சான்றுகளை ஆசிரியர் தருகிறார்.

(உ-ம்) கம்பன் - "அன்னையே யனையார்க்கிவ் வாறடுத்த
வாறருளு கென்றான்"

சிலப்பதிகாரம் - 'நீயிங்கிருக்கென்றேகி'

சிந்தாமணி - 'எற்றியல் காணநா மிவட்டருகென்னவே'

இச்சான்றுகளில் அருளுகு, இருக்கு, தருகு என்று சொற்களை முனிவர் பிரித்துக் காட்டுகிறார். இவை அருளுக, இருக்க, தருக என்பனவாகும். அகரம் நீங்கி உயிர் மெய்யுடன் இச்சொற்களில் புணர்ந்துளது. இவ்வாறு அசை கெட்டு வருதல் அரிய வழக்கு. எனவே குற்றியலுகரச் சொற்களுடன் உயிர் புணர்ந்திருப்பதாக இவர் கருதியுள்ளார்.

முத்துவீரியம் வினைமுற்றுக்களை விவரிப்பதில் தொல்காப்பியத்தைப் பின்பற்றுகிறது. எனினும் ஓரிடத்தில் மட்டும் வேறுபடுகிறது. தன்மை வினைகளை இந்நூல் விரவுத்திணை வினை எனக் கூறுகிறது.

தன்மைப் பெயர்களை உயர்திணைப் பெயராகக் கூறிய முத்துவீரியம் வினைகளை விரவுவினைகள் என்று கூறுவது மொழிமரபுக்கு ஒவ்வாதது; வழக்கிற்கு முரணானது.

### வியங்கோள் வினைகள்

தொல்காப்பியம் வியங்கோள் வினைகள் முன்னிலையிலும் தன்மையிலும் வாரா என்பதனை,

**முன்னிலை தன்மை ஆயி ரிடத்தொடு**
**மன்னா தாகும் வியங்கோட் கிளவி (சொல். 221)**

என்று கூறுகிறது.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் இவ்வினை சிறுபான்மை முன்னிலையிலும் தன்மையிலும் வருதலை எடுத்துக் காட்டுகின்றனர். நச்சினார்க்கினியர் அ, அல், ஆல், அர், மார், உம், ஐ என்பவற்றை

வியங்கோள் விகுதிகள் எனவும் இவ்வினை விதித்தல், வேண்டிக்கோடல் பொருள்களில் வரும் எனவும் கூறுகிறார். சேனாவரையர் வாழ்த்தல் பொருளில் வருதலையும் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பிய மொழியிலும் இலக்கியங்களிலும் வியங்கோள் வினை மூவிடத்தும் வருகிறது.

*இன்னது பிழைப்பின் இதுவாகியர் (புறத்திணையியல், 19)*
*மடவமாக மந்தை நாமே (குறுந்தொகை, 20)*
*- தன்மை*

*செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும் (கற்பியல், 6)*
*மன்னிய பெரும நீ (புறநானூறு, 8)*
*- முன்னிலை*

*வாழிய (உயிர் மயங்கியல், 9)*
*இவள்தந்தை வாழியர் (நற்றிணை, 8)*
*- படர்க்கை*

தன் கால மொழியில் வழங்கிய போதிலும், தொல்காப்பியர் வியங்கோள் வினை மூவிடத்தும் வருதலைக் கூறவில்லை. மொழி வழக்கை விடவும் முந்தைய இலக்கண மரபினைப் பின்பற்றும் நோக்கமே இதற்குக் காரணமாகும்.

வீரசோழியம் (79) ஏவல் வினை இசைவுப் பொருளில் 'க' விகுதியுடன் வரும் எனக் கூறுகிறது. இது வியங்கோள் வினையைக் குறிப்பதாகும். வியங்கோளும் ஒருவகை ஏவலாக இருப்பதனால் இந்நூல் இவ்வினையை ஏவல் என்றே கூறுகிறது.

நேமிநாதம் வியங்கோளை விரவுவினைப் பட்டியலில் அடக்கிக் கூறுகிறது. எனினும் அவ்வினையை விவரிக்கவில்லை.

நன்னூல் (337) க, ய, ர் மூன்றும் வியங்கோள் விகுதிகள் என்றும் இவ்வினை மூவிடத்தும் ஐம்பாலிலும் வரும் என்றும் கூறுகிறது.

இலக்கண விளக்கம் (239) வியங்கோள் வினை மூவிடத்தும் ஐம்பாலிலும் வரும் எனவும் விதித்தல், வேண்டிக்கோடல், வாழ்த்தற் பொருள்களில் க, ய, ர், அல், ஆல், உம், மார், ஐ விகுதிகளைப் பெற்று வரும் எனவும் கூறுகிறது.

" 'க' விகுதி 'க்' என்னும் எதிர்கால இடைநிலையும் 'அ' என்னும் வியங்கோள் வினை விகுதியும் சேர்ந்த கூட்டு வடிவமாகும்"

(ச. அகத்தியலிங்கம், சொல்லியல் வினையியல், பக்கம் 357). இய, இயர் என்னும் விகுதிகள் ய, ர் எனவும் வேண்டும் என்னும் சொல் (வாழ்தல் வேண்டும்) உம் எனவும் பிறழப் பிரிக்கப்பட்டுள்ளன.

தொன்னூல் விளக்கம் (116) நன்னூலைப் பின்பற்றி வியங்கோள் வினையைக் கூறுகிறது.

முத்துவீரியம் (621),

**தன்மைமுன் னிலையொடு சாரா வியங்கோள்** என இவ்வினையை விளக்குகிறது. இது தொல்காப்பியச் சார்பினால் அமைந்த விளக்கமாகும்.

**வினையெச்சங்கள்**

தமிழ்த் தொடரமைப்பில் வினையெச்சங்கள் பெரும் பங்கு பெற்றுள்ளன. இலக்கண நூல்கள் வினையெச்சச் சொற்களைப் பல வாய்பாடுகளில் ஒழுங்குபடுத்தி விவரிக்கின்றன.

தொல்காப்பியம் வினையியலில் (31) செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு என்னும் வாய்பாடுகளிலும் உயிர் மயங்கியலில் (20) செய்யா என்னும் வாய்பாட்டிலும் வினையெச்சங்கள் அமைதலைக் கூறுகிறது. இவை தவிர, பின், முன், கால், கடை, வழி, இடத்து என்னும் சொற்களும் வினையெச்சமாக வருதலை இந்நூல் (32) கூறுகிறது. மேலும், செய்து வாய்பாட்டுச் சொற்கள் இறந்தகாலத்திலும் எதிர்காலத்திலும் வருதலை இந்நூல் குறிப்பிடுகிறது.

வினையெச்சம் வினைமுற்றைக் கொண்டு முடியும் எனத் தொல்காப்பியம் (சொல். 432) கூறுகிறது.

தொல்காப்பியம் வினையெச்ச விகுதிகளைப் பகுத்துக் காட்டவில்லை. எனினும் உரையாசிரியர்கள் பகுத்துக் கூறுவதோடு, வினையெச்சங்கள் வருதற்குரிய காலத்தையும் சுட்டிக் காட்டுகின்றனர். சேனாவரையர் உ, ஊ, பு, என, இயர், இய, இன், அ, கு என்பவற்றை வினையெச்ச விகுதிகள் என்கிறார். செய்து, செய்யா, செய்யூ என்பன இறந்த காலத்திலும் செய நிகழ் காலத்திலும் வருகின்றன. செயின், செய்யிய, செய்யியர் ஆகியன எதிர்காலத்திற்கு உரியன. செய்பு வாய்பாட்டுச் சொற்களின் காலம் குறித்து வெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. சேனாவரையர் இச்சொற்கள் நிகழ் காலத்திலும்

தெய்வச் சிலையார் மூன்று காலங்களிலும் வரும் எனக் கூறுகின்றனர். நச்சினார்க்கினியரோ இறந்த காலத்திலும் எதிர்காலத்திலும் வரும் என்று கூறுகிறார்.

உரையாசிரியர்கள் இன்னொரு கருத்தையும் உரைக்கின்றனர். சேனாவரையர் செய்து வாய்பாட்டுச் சொற்கள் யகரமாகவும் இகரமாகவும் திரியும் எனக் கூறுகின்றார். இவை இரண்டும் உண்மையில் செய்து வாய்பாட்டுச் சொற்களிலிருந்து வேறானவை. இகரமும் யகரமும் இறந்த காலத்துடன் வினையெச்சத்தையும் உணர்த்துகின்றன.

சேனாவரையர் தொல்காப்பியம் கூறும் வினையெச்சங் களுடன் பாக்கு (உண்பாக்கு), ஆன் (உண்பான், வருவான்), உம் (நடக்கலும்), ஆல் (அற்றால்), மல் (கூறாமல்), மை (கூறாமை) என்னும் வினையெச்சங்களையும் குறிப்பிடுகிறார்.

"வினையெச்சங்களுள் செய்தென என்பது செய்து, என என்னும் இரு எச்சங்களின் கூட்டு வடிவமாகும். செயற்கு என்னும் சொல் செயல் என்னும் தொழிற் பெயருடன் குகர உருபு இணைந்தது. பாக்கு என்பதில் பகர இடைநிலையும் ஆன் என்னும் எச்ச விகுதியும் குகர உருபும் காணப்படுகின்றன. 'ஆன்கு' என்பது ஆக்கு என ஓரினமாகி உள்ளது" (பெ. சுயம்பு, தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும் - ஓர் ஒப்பாய்வு, பக்கம் 238).

செயின் வாய்பாட்டுச் சொற்கள் நிபந்தனைப் பொருளிலும் செய, செய்யிய, செய்யியர், செய்வான், செய்பான், செய்பாக்கு, செயற்கு ஏழும் நோக்கப் பொருளையும் உணர்த்துகின்றன.

பின், முன், கால், கடை, வழி, இடத்து ஆகியன ஏழாம் வேற்றுமையில் வருவன. இவை பெயரெச்சச் சொற்களுடன் இணைந்து வினையெச்சமாக வருகின்றன. இச்சொற்கள் தொடர் அமைப்பு உடைமையால், தொல்காப்பியம் செய்து முதலிய உருபன் அமைப்புச் சொற்களிலிருந்து இவற்றை வேறுபடுத்தும் நோக்கில் தனி நூற்பாவில் விவரிக்கிறது.

ஆ. வேலுப்பிள்ளை (தமிழ் வரலாற்றிலக்கணம், பக்கம் 92) பின் முதலியவற்றை இடம் அல்லது காலம் உணர்த்தும் பெயர்ச்சொற்கள் என்கிறார். மோ. இசரயேல் (வினையடைப் பெயர்கள், பக்கம் 420-422) இவை சாரியை ஏற்றல், பெயரடைகளாகச் செயலாற்றுதல் போன்ற பெயர்ச் சொற்களின் இயல்புகளும் வினையடைகளாகச் செயலாற்றுதல் போன்ற வினைச் சொற்களின்

இயல்புகளும் பெற்றுள்ளமையை விளக்கி, இவற்றைப் வினையடைப் பெயர்கள் எனக் கூறுகிறார்.

பாக்கு, ஆன், உம், ஆல், மல், ஏல், மை ஈற்று வினையெச்சங்கள் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

| | |
|---|---|
| *நீக்குவான் பாய்வாள்* | *(பரிபாடல், 7)* |
| *காண்பான் யான்தங்கினேன்* | *(கலித்தொகை, 97)* |
| *அன்றாராயினும்* | *(புறநானூறு, 26)* |
| *என்றால்* | *(கலித்தொகை, 6)* |
| *உரையாமல்* | *(கலித்தொகை, 77)* |
| *திறன் உண்டேல்* | *(கலித்தொகை, 38)* |
| *துவ்வாமை வந்தக்கடை* | *(கலித்தொகை, 22)* |

நேமிநாதம் (70) செய்து, செய, செய்யா, செய்யிய, செய்தென, செய்பு, செயின், செயியர், செயற்கு என்னும் ஒன்பதுடன் பின், முன், பான், பாக்கு என்பனவும் வினையெச்சச் சொற்கள் ஆகும் என்று கூறுகிறது. இந்நூல் உருபன் அமைப்புச் சொற்களுள் செய்யூ என்பதை நீக்கியுள்ளது.

'செய்யூ' வாய்பாட்டுச் சொற்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றாலும், அவற்றுக்குப் பிந்தைய பதினெண் கீழ்க்கணக்கு உள்ளிட்ட இலக்கியங்களில் காணப்படவில்லை.

நன்னூல் (341) வினையெச்சத்தின் வரைவிலக்கணத்தை,

*தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை*
*ஒழிய நிற்பது வினையெச் சம்மே*

என்று விளக்குகிறது. மேலும், அது (342) பன்னிரண்டு வாய்பாடு களில் வினையெச்சம் வருதலையும் அவை வருதற்குரிய காலங்களையும் பட்டியலிடுகிறது.

*செய்து செய்பு செய்யாச் செய்யூச்*
*செய்தெனச் செயச் செயின் செய்யிய செய்யியர்*
*வான்பான் பாக்கின வினையெச் சம்பிற*
*ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்*

செய்து முதலான ஐந்து வாய்பாட்டுச் சொற்கள் இறந்த காலத்திலும் செய வாய்பாட்டுச் சொற்கள் நிகழ்காலத்திலும் செயின் முதலான ஆறும் எதிர்காலத்தும் வழங்கும் என்பது நன்னூல் கருத்து.

இலக்கண விளக்கம் (246) செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு, செய்யா, செய்வான், செய்பான், செய்பாக்கு என்னும் வாய்பாடுகளில் வினையெச்சம் அமைதலைக் கூறுகிறது. மேலும், இதனுரை பின், முன், கால், கடை, வழி, இடத்து என்பனவும் ய், இ, ஆல், மை, மல் என்பனவும் வினையெச்சமாக வருதலையும் வினையெச்ச விகுதிகளைப் பகுத்தும் கூறுகிறது.

இலக்கண விளக்கம் வினையெச்சங்கள் காலம் காட்டுதலையும் குறிப்பிடுகிறது. செய்து, செய்பு வாய்பாட்டுச் சொற்கள் இறந்த காலத்திலும் நிகழ் காலத்திலும் வரும். செய்யூ, செய்தென, செய்யா ஆகியன இறந்த காலத்தில் வரும். செய்யியர், செய்யிய, செயின், செயற்கு, செய்வான், செய்பான், செய்பாக்கு என்னும் ஏழும் எதிர்காலத்தில் வரும். செய வாய்பாட்டுச் சொற்கள் முக்காலத்திற்கும் ஒத்தியல் பொருள் குறித்து நிகழ்காலத்திலும் காரணம், காரியம் ஆகிய பொருள்களில் இறந்த காலத்திலும் நோக்கப் பொருளில் எதிர்காலத்திலும் வரும்.

இலக்கண விளக்க உரைச்செய்தி தொல்காப்பிய உரைகளைத் தழுவிக் காணப்படுகிறது.

தொன்னூல் விளக்கம் (117) நன்னூல் கூறிய வரைவிலக்கணத்துடன் வினையெச்சங்களை விவரிக்கிறது.

**காலமும் வினையும் தோன்றிப் பால் தோன்றாது**
**வினைகொள்ளும் அதுவினை யெச்சம்**

வினையெச்ச விகுதிகளை இந்நூல் (119) பிரித்தெடுத்துக் கூறுகிறது. இ, உ, என, ஊ, பு, ஆ என்னும் விகுதி பெற்ற வினையெச்சங்கள் இறந்த காலத்தில் வரும், ய், அ விகுதி பெற்றவை நிகழ்காலத்தில் வரும். இல், இன், இய, இயர், வான், பான், பாக்கு விகுதிச் சொற்கள் எதிர்காலத்தில் வழங்கும்.

முத்துவீரியம் (623, 624) தொல்காப்பியம் கூறிய வினையெச்சங்களுடன் வான், பான் இரண்டையும் இணைத்து விளக்குகிறது.

### பெயரெச்சங்கள்

தொல்காப்பியம் (சொல். 236) பெயரெச்சம் செய்யும், செய்த என்னும் இரு வாய்பாடுகளில் வரும் எனவும் நிலம், பொருள், காலம்,

கருவி, வினைமுதல், வினை ஆகிய ஆறு பெயர்களுள் ஒன்றனைக் கொண்டு முடியும் எனவும் கூறுகிறது. இன்னதற்காக, இது பயனாக, தீர்தல் ஆகிய பொருள் குறித்த பெயர்களை முடிக்கும் சொல்லாகப் பெயரெச்சம் கொள்ளுதலையும் நச்சினார்க்கினியர் (தொல்.சொல். 236) கூறுகிறார்.

செய்யும் வாய்பாட்டுச் சொற்கள் 'செய்ம்' என்று வழங்குதலையும் தொல்காப்பியம் (சொல். 244) கூறுகிறது. மேலும், இடையியலில் (44),

**உம்உந் தாகும் இடனுமார் உண்டே**

என்னும் விதியும் காணப்படுகிறது. இதற்குச் சேனாவரையர், 'இத்திரிபு பெயரெச்சத்திற் கீறாயவழி யென்பது கருதிப் போலும்' என்று கூறுகிறார்.

வீரசோழியத்தில் பெயரெச்சம் பற்றிய குறிப்பு இடம்பெறவில்லை. நேமிநாதத்தில் (71) 'ஆறன்மேற் செல்லும் பெயரெச்சம்' என்ற தொடர் மட்டுமே காணப்படுகிறது.

நன்னூல் (339) செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் மூன்று வாய்பாடுகளில் பெயரெச்சம் வரும் எனவும் நிலம் முதலிய ஆறு பெயர்களுள் ஒன்றனைக் கொண்டு முடியும் எனவும் கூறுகிறது. செய்யும் வாய்பாட்டுச் சொற்கள் செய்ம் என்று ஆதலையும் செய்யுளில் செய்யுந்து என்று வழங்குதலையும் இந்நூல் (340) குறிப்பிடுகிறது. செய்த, செய்கின்ற, செய்யும் வாய்பாட்டுச் சொற்கள் முறையே இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனும் காலங்களுக்கு உரியன என்பது நன்னூற் கருத்து.

இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் போல்வன நன்னூற் செய்திகளை வழி மொழிகின்றன.

இலக்கண விளக்கத்தில் நன்னூலில் கூறப்படாத செய்தி ஒன்றும் காணப்படுகிறது. பெயரெச்சம் இன்னதற்காக, இது பயனாக, தீர்தல் என்னும் பொருள் குறித்த பெயர்களுள் ஒன்றனை முடிக்கும் சொல்லாகக் கொள்ளுதலையும் இந்நூல் குறிப்பிடுகிறது. இக்கருத்து நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாகும்.

செய்கின்ற வாய்பாட்டுச் சொல் சங்க காலத்தில் பரிபாடலில் (22) மட்டும் ஓரிடத்தில் வருகிறது. பிற்காலத்தில் இதன் வருகை மிகுதியாகக் காணப்படுகிறது. எனவே தன்கால மொழி வழக்கை

ஏற்று நன்னூல் முதலியன இவ்வாய்பாட்டுச் சொற்களை நிகழ்காலத்திற்கு உரியன எனக் கூறுகின்றன.

"தொல்காப்பியக் காலத்தில் செய்த வாய்பாட்டுச் சொற்கள் இறந்த காலத்திலும் செய்யும் வாய்பாட்டுச் சொற்கள் இறவாக் காலத்திலும் வழங்கியதால் தொல்காப்பியம் இவ்விரு வாய்பாட்டுச் சொற்களையும் கூறுகிறது" (M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, page 223 - 224).

## குறிப்புவினைகள்

குறிப்புவினையைத் தொல்காப்பியம் குறிப்பு என்று கூறுகிறது. உரையாசிரியர்கள் குறிப்பு வினை, வினைக்குறிப்பு என்ற சொற்களைக் கையாளுகின்றனர். இச்சொற்கள் பிற்கால இலக்கண நூலாசிரியர்களால் ஏற்கப் பெற்றுள்ளன.

குறிப்பு வினைகள் குறிப்பாகக் காலம் உணர்த்தும் என்பதனை,

**"இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா**
**அம்முக் காலமும் குறிப்பொடும் கொள்ளும்**
**'குறிப்பே காலம்', 'குறிப்பொடு வரூஉம் காலக்கிளவி'**

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

சேனாவரையர் (தொல்.சொல். 201) குறிப்புவினைச் சொற்கள் காலத்தையும் தொழில் தன்மையையும் குறிப்பாக உணர்த்தும் எனக் கூறுகிறார்.

தொல்காப்பியம் (சொல். 213, 214, 220) உடைமை, நிலம், ஒப்பு, பண்பு, அன்மை, இன்மை, உண்மை, வன்மை, பண்பினாகிய சினைமுதல் என்னும் பொருண்மை கொண்ட வினைப்பகுதிகளுடன் மூவிட வினை விகுதிகள் சேர்ந்து குறிப்பு வினைகள் அமைதலைக் குறிப்பிடுகிறது. இவை தவிர, இன்மை செப்பல் (இல், இல்லை), வேறு என்னும் சொற்களையும் இந்நூல் குறிப்பு என்று கூறுகிறது. குறிப்பு வினைகளும் தெரிநிலை வினைச் சொற்களைப் போன்று உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை என மூன்றாகப் பகுத்து விவரிக்கப்படுகின்றன.

நேமிநாதம் (73, 74) சில சொற்களை 'வினைக்குறிப்பு' என்று கூறுகிறது. நெடியன், உடையன், நிலத்தன், இளைஞன், கடியன், மகத்தன், கரியன், தொடியன் என்பன உயர்திணை வினைக்குறிப்பு

என்றும் கரிது, அரிது, தீது, கடிது, நெடிது, பெரிது, உடைத்து, வெய்து, பிறிது, பரிது என்பன அஃறிணை வினைக்குறிப்பு என்றும் கூறப்படுகின்றன.

நேமிநாதம் (71) அன்று, அல்ல, வேறு, இல்லை, உண்டு என்னும் சொற்களை விரவுத்திணை வினைகளுடன் சேர்த்துக் கூறுகிறது. ஆனால் இச்சொற்கள் குறிப்புவினை என்று சுட்டப்படவில்லை.

நன்னூல் (320) குறிப்புவினையை,

பொருள்முத லாறினுந் தோற்றிமுன் னாறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே

என்று குறிப்பிடுகிறது. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழிற்பெயர்களுடன் பால் - எண் விகுதிகள் இணைந்து குறிப்பு வினைகள் அமைதலை இந்நூற்பா உணர்த்துகிறது. 'வினை முதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே' என்று குறிப்பிடுவதன் வழி நன்னூல் பால்-எண் விகுதிகளை ஏற்கும் அறுவகை ஆக்கச் சொற்களைக் குறிப்பு வினை என்று குறிப்பிடுகிறது.

நன்னூல் (329) வேறு, இல்லை, உண்டு என்னும் சொற்களை இருதிணைப் பொது வினையாகக் கருதுகிறது.

இலக்கண விளக்கத்தின் குறிப்பு வினைக் கருத்து தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றின் தொகுப்பாகக் காணப்படுகிறது.

தொல்காப்பியம் உண்டு என்பது பற்றி யாதும் கூறவில்லை. ஆனால் பிற்கால இலக்கண நூல்கள் இதனை விரவுத்திணை வினை என்று கூறுகின்றன. இச்சொல் தொல்காப்பிய மொழியில் அஃறிணை ஒன்றன் பால் வினைமுற்றாகவும் சங்க இலக்கிய மொழியில் விரவுத்திணை முற்றாகவும் வருகிறது.

கொடுப்போர் இன்றியும் கரண முண்டே (தொல்.பொருள். 141)

மாரியும் உண்டு (புறநானூறு, 107)

காய்தலும் உண்டு அக்கள் வெய்யோனே (புறநானூறு, 258)

உண்டு என்பது அஃறிணையில் வழங்கிய போதிலும், தொல்காப்பியம் அதனைக் குறிப்பிட வில்லை. ஆனால் அச்சொல் பிற்காலத்தில் விரவுவினையாக வழங்கியதால், பிற்கால நூல்களான நன்னூல் முதலியன விரவுவினை எனக் கூறுகின்றன.

தொன்னூல் விளக்கம் வினைக்குறிப்பை defective verbs எனக் கூறுகிறது. இந்நூல் (123),

**வினைக்குறிப் பென்ப வினைபோல் விகுதி**
**பெற்றிடம் பாற்கும் பெயர்ப்பகு பதமே**

என்று கூறுகிறது. வீரமாமுனிவர்,

> மேலே பெயர்ப் பகுபதங்களை விளக்கிய விடத்தில் அவை யெலாமற்றைப் பெயர்களைப் போலே வேற்றுமை யுருபு பெறுவனவன்றியே வினையைப் போல நடப்பன வாமென்பதாயிற்று; அங்ஙன நடப்புழி வினைக்குறிப் பெனப்படும். இவையே பெயரியலிசைத்த சொல்லாயினும் வினையின் றொழிலைக் குறிப்பனவும் வினையைப் போல நடப்பனவு மாகையில் வினையை விளக்கிய விடத்து வந்த முறை யெனக் காண்க. வினைக்குறிப் பெல்லா மூவிடத்தைம்பால் வினைச் சொற்கேற்ற விகுதியைப் பெற்று முடியும். (உ-ம்) பூணினேன் - யான், பூணினேம் - யாம், பூணினை - நீ, பூணினார் - அவர், பூணிற்று - அது, பூணின - அவை, என வரும். பொருண் முதலாறு காரணங்களால் வரும் பெயர்ப் பகுபதமெல்லாம் வினைக்குறிப்பாக நடப்பனவாமெனக் கொள்க. அன்றியும், வினைக்குறிப்பு வினையைப் போலப் பெயர் முதலாயின வேற்றி மற்றொன்றை வேண்டாது நிற்பது வினைக்குறிப்பு முற்றெனப்படும்.

என்று குறிப்பு வினையை விவரிக்கிறார். இச்சொற்களை முனிவர் செந்தமிழில் குறிப்புப் பெயர் (Appellative Nouns) என்றும் வேறு எந்த மொழியிலும் காணப்படாதவை என்றும் கூறுகிறார்.

குறிப்பு வினைச் சொற்கள் வினையியல்புகளை விடவும் பெயரியல்புகளையே மிகுதியாகப் பெற்றுள்ளன. இச்சொற்கள் காலஇடைநிலைகளையும் எதிர்மறைக் குறியீடுகளையும் ஏற்கா. அவை ஏவலாகவும் வியங்கோளாகவும் அமையா; பிற வினையாகவும் செயப்பாட்டு வினையாகவும் வருதல் இல்லை. பெரும்பான்மையான குறிப்பு வினைச் சொற்கள் வினையெச்சம், வினையடைகளைத் தழுவுதல் இல்லை; ஆனால் அவை வேற்றுமை உருபுகளை ஏற்று பெயரடைகளையும் பெயரெச்சங்களையும் தழுவுகின்றன. எனினும் அவை பயனிலையாக வருதல், பால்-எண் விகுதிகளைப் பெறுதல் ஆகிய இயல்புகளைப் பெற்றிருப்பதனால் குறிப்பு வினைச் சொற்களாகக் கருதப்படுகின்றன.

முத்துவீரியம் தொல்காப்பியச் செய்திகளை வழி மொழிகிறது.

## காலஇடைநிலைகள்

தொல்காப்பியம் வினைச்சொற்கள் காலம் காட்டும் எனவும் அக்காலம் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூவகைப்படுதலையும் குறிப்பிடுகிறது. மேலும், அது வினைச் சொற்களைக் காலக்கிளவி என்று பலஇடங்களில் கூறுகிறது. எனினும் கால இடைநிலைகளைப் பகுத்துச் சுட்டவில்லை.

சேனாவரையர் (வினையியல், 3, 5),

> இறப்பாவது தொழிலது கழிவு. நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாத நிலைமை. எதிர்வாவது தொழில் பிறவாமை

என்று முக்காலங்களையும் விளக்குவதோடு, க, ட, த, ற, இன் ஆகியன இறந்த காலத்தையும் நில், கின்று, கிட, இரு என்பன நிகழ்காலத்தையும் ப, வ இரண்டும் எதிர்காலத்தையும் உணர்த்தும் எனவும் கூறுகிறார்.

நச்சினார்க்கினியர் (வினையியல், 4),

> இம்முக்காலத்தும் வருதற்குரிய காலங்காட்டு மெழுத்துக் களை யாசிரியரெடுத்தோதா ராயினார். பின்னுள்ளோர் காலங்கட்குரியவாக வெடுத்தோதிய வெழுத்துக்கடம்முண் மயங்கியும் வருதலின்

என்று உரைக்கிறார். கால இடைநிலைகள் குறிப்பிட்ட ஒரு காலம் மட்டுமே உணர்த்துதல் இன்றி, ஒன்றற்கு மேற்பட்ட காலத்தினை உணர்த்தி மொழியில் வருகின்றமையாலேயே, தொல்காப்பியம் அவற்றை வினைச்சொற்களிலிருந்து பகுத்துக் கூறவில்லை என்பது நச்சினார்க்கினியர் கருத்து. தொல்காப்பியம் சொற்களைப் பகுதி, இடைநிலை, விகுதி எனப் பகுத்துக் காட்டுதல் இன்றி இலக்கணம் கூறுவதால், கால இடைநிலைகளைப் பகுத்துச் சுட்டிக் காட்ட வில்லை.

வீரசோழியம் (66) வினைப்பகுதியைத் தொடர்ந்து கால இடைநிலைகள் வருதலைச் சுட்டித் த, ன, ய மூன்றும் இறந்த காலத்தையும் கிற, சு, ஆநின்ற மூன்றும் நிகழ்காலத்தையும் கும், உம், ம் என்பன எதிர்காலத்தையும் உணர்த்தும் என்கிறது. உரையாசிரியர் செய்சாத்தன என்பதில் சு இடைநிலை வருகிறது என்கிறார்.

வினைத்தொகையை இவர் நிகழ்காலச் சொல் எனக் கருதுகிறார். கும், உம், ம் என்பவற்றில் மகரம் எதிர்கால இடைநிலையாகும்.

பிற்கால இலக்கண நூல்களுள் நன்னூலே காலஇடைநிலைகளைச் சொற்களிலிருந்து பகுத்து எடுத்து மொழிவதில் முதலிடம் பெறுகிறது. த், ட், ற், இன் நான்கும் இறந்த கால இடைநிலைகள். ஆநின்று, கின்று, கிறு மூன்றும் நிகழ்கால இடைநிலைகள். ப், வ் இரண்டும் எதிர்கால இடைநிலைகள். நன்னூலின் (141-143) விளக்கம் இது.

இலக்கண விளக்கம் (47-49) நூற்பாவிலும் உரையிலுமாகக் கால இடைநிலைகளை நன்னூலை விடவும் விரிவாக எடுத்துக் கூறுகிறது. க், ட், த், ற், இன், ய், அன், ன் ஆகியன இறந்த கால இடைநிலைகள் என இந்நூல் குறிப்பிடுகிறது. அன் இடைநிலைக்குச் சான்றாகப் போயன என்னும் சொல்லை இதன் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். இச்சொல்லில் யகரத்தினை உடம்படுமெய் எனக் கொண்டு, அன் என்பதனை இறந்தகால இடைநிலை என்று கூறுகிறார். ஆனால் இதில் யகரமே இறந்தகால இடைநிலையாகவும் அன் சாரியையாகவும் அமைந்துள்ளன.

இலக்கண விளக்கக் கருத்துச் சேனாவரையர், நச்சினார்க்கினியர் உரைகளைத் தழுவிக் காணப்படுகிறது.

க், ட், த், ற் என்னும் நான்கும் த் என்னும் இடைநிலையின் ஒலியன் கட்டுப்பாட்டு மாற்றுருபுகளாக அமைகின்றன. இராபர்ட் கால்டுவெல் (A Comparative Grammar of Dravidian or South Indian Family of Languages, page 50) இன் என்பது இ என்னும் இறந்தகால இடைநிலையும் ன் என்னும் இசைநிறை வடிவமும் சேர்ந்த கூட்டு வடிவம் எனக் கூறுகிறார். எம்.பி. எமனோ (Dravidian Linguistic, Ethnology and Folk Tales, page 372) இ, ன் என்னும் இரு இறந்த காலக் குறியீடுகளின் கூட்டு வடிவமே இன் என்கிறார். இ (கலங்கி), ன் (போன) என்னும் இரண்டுமே இறந்தகாலம் உணர்த்துநின்றமையால் இதனை இ, ன் என்னும் இரு இறந்தகால இடைநிலைகளின் கூட்டு வடிவம் எனக் கொள்ளுதலே ஏற்புடையது (பெ. சுயம்பு, தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும் - ஓர் ஒப்பாய்வு, பக்கம் 269).

க், ட், த், ற், ய், ன், இன் அமைந்த சொற்கள் தொல்காப்பிய மொழியிலும் இலக்கிய மொழியிலும் இறந்த காலத்தில் வழங்குகின்றன.

| | |
|---|---|
| புக்கு | (தொல். பொருள். 72) |
| கொண்டு | (தொல். பொருள். 17) |
| பெய்து | (தொல். பொருள். 266) |
| நின்று | (தொல். பொருள். 71) |
| விராஅய | (தொல். பொருள். 367) |
| நக்கனன் | (அகநானூறு, 22) |
| கொண்டாள் | (கலித்தொகை, 66) |
| செய்தேன் | (கலித்தொகை, 37) |
| சென்றேன் | (கலித்தொகை, 143) |
| போன | (பரிபாடல், 22) |

இலக்கண விளக்கம் ஆநின்று, கின்று, கிறு, கிட, இரு, ற், த், ப், வ் ஆகியவற்றை நிகழ்கால இடைநிலைகள் எனக் கூறுகிறது.

உண்ணாநின்றான், உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான் என்பன உண்ணா என்னும் 'செய்யா' வாய்பாட்டு வினையெச்சமும் நின்றான், கிடந்தான், இருந்தான் என்னும் இறந்தகால வினைமுற்றுக்களும் சேர்ந்த கூட்டு வடிவங்களாகும். இவற்றில் நில், கிட, இரு மூன்றும் செயல் நிகழ்ச்சியினை உணர்த்துகின்றன. ஆநின்று என்பது 'செய்யா' வாய்பாட்டு வினையெச்சத்தின் விகுதி ஆ என்பதும் 'நில்' என்பதன் இறந்தகால வினையெச்சம் 'நின்று' என்பதும் சேர்ந்த கூட்டு வடிவம் ஆகும். இலக்கண நூல்கள் ஆ விகுதியினையும் நின்று என்பதையும் சேர்த்துப் பிறழப் பிரித்து ஆநின்று என்பதனை நிகழ்கால இடைநிலை எனக் கூறுகின்றன. (மோ. இசரயேல் நிகழ்காலத்தின் தோற்றமும் வளர்ச்சியும், பக்கம் 125-126) இங்கு வரும் நில் என்பது தொடக்க நிலையில் நிகழ்ச்சித் தொடர்ச்சியை உணர்த்திப் பின்னர்ச் செயல் நிகழ்ச்சியைக் குறித்திருக்கலாம் என்கிறார்.

ப், வ் இரண்டும் தொல்காப்பிய மொழியில் நிகழ்காலம் உணர்த்துகின்றன.

| | |
|---|---|
| நிற்பவை | (தொல்.பொருள். 99) |
| உயங்குவனன் | (தொல்.பொருள். 144) |

கின்று, கிறு, ற், த், ப், வ் என்பன இலக்கியங்களில் நிகழ்காலம் உணர்த்துகின்றன.

| | |
|---|---|
| சேர்கின்ற | (பரிபாடல், 22) |
| சாதிக்கிற | (மணிமேகலை, 22: 299) |
| சேறும் | (புறநானூறு, 113) |

வருதி (புறநானூறு, 8)
அமைப்போர் (பரிபாடல், 12)
துழவுவோள் (புறநானூறு, 278)

இலக்கண விளக்கம் ப், வ், க், ட், த், ற் ஆகியன எதிர்கால இடைநிலைகளாகும் எனக் கூறுகிறது.

ப், வ் இரண்டும் தொல்காப்பிய மொழியிலும் ப், வ், க், ட், த், ற் ஆறும் இலக்கியங்களிலும் எதிர்காலத்தை உணர்த்துகின்றன.

என்ப (தொல். எழு. 1)
செய்வோர் (தொல். பொருள். 77)
காண்பேன் (நற்றிணை, 259)
அறுத்திடுவேன் (புறநானூறு, 278)
உசாவுகோ (கலித்தொகை, 7)
கேட்டீமின் (கலித்தொகை, 25)
கடத்திர் (கலித்தொகை, 7)
சென்றீமோ (கலித்தொகை, 64)

கால இடைநிலைகளுள் க், ட், த், ற் என்பன ஒன்றற்கு மேற்பட்ட காலத்தில் வருகின்றன. ப், வ் இரண்டும் நிகழ்காலமா எதிர்காலமா என்ற வரையறையின்றி வருகின்றன. இவற்றைத் தொல் திராவிட மொழியின் இறவாக் கால இடைநிலை என அறிஞர்கள் மீட்டுருவாக்கியுள்ளனர்.

தொன்னூல் விளக்கம் நன்னூல் கருத்துக்களை வழிமொழிகிறது.

சுவாமிநாதம் (25) நன்னூல் கூறிய இடைநிலைகளுடன் கிற்று என்னும் நிகழ்கால இடைநிலையினையும் சேர்த்துக் கூறுகிறது. இவ்விடைநிலையைக் 'கில்' என்னும் சொல்லிலிருந்து உருவானது எனலாம். இது 'தகுதி' அல்லது 'இயலுதல்' பொருளில் பக்தி இலக்கியங்களில் வருகிறது.

உலகில் வாழ்கிலேன் (திருவாசகம், வாழாப்பத்து 8)

ஆற்றகிற்கின்றிலேன் (திவ்வியப்பிரபந்தம், 2590)

முத்துவீரியம் கால இடைநிலையைக் குறிப்பிடவில்லை. இந்நூல் பல கருத்துக்களில் தொல்காப்பியத்தைப் பின்பற்றுகிறது. எனவே கால இடைநிலையைக் கூறாததற்கும் இந்த அணுகுமுறையே காரணமாக இருக்கலாம்.

## இடைச்சொல்

தொல்காப்பியம் இடைச்சொற்கள் பெயரையும் வினையையும் சார்ந்து வருதலன்றி, தனித்து வரும் ஆற்றல் அற்றவை எனக் கூறுகிறது.

**இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்**
**நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே (தொல்.சொல். 251)**

இடைச்சொற்கள் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களின் பொருளை இலக்கணநிலையிலும் உணர்ச்சி நிலையிலும் வேறுபடுத்த வல்லவை. இதனைத் தொல்காப்பியம் (சொல். 455).

**இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே"**

எனக் குறிப்பிடுகிறது.

இடைச்சொல் என்ற கலைச்சொற்கு வரையறை இலக்கணம் உரைப்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் (சொல். 249) இவை பெரும்பான்மையும் பெயர்ச்சொற்களிலும் வினைச்சொற்களிலும் இடையில் நிற்றலால் இடைச்சொல் எனப் பெயர் பெற்றன என்று உரைக்கின்றனர். ஆனால் தெய்வச் சிலையாரோ, 'பெயரும் வினையும் இடமாக நின்று பொருள் உணர்த்துதலின் இடைச் சொல்லாயிற்று' என்று உரைக்கின்றார்.

இடைச்சொற்களை விரிவாக ஆராய்ந்த மோ. இசரயேல் (இடையும் உரியும், பக்கம் 3) பெயர் வினைகளைச் சார்ந்து அவற்றினிடமாக நின்று பொருள் உணர்த்தலால் இடச்சொல் என்று பெயர் பெற்று, அது போலியால் இடைச்சொல் என்றாயிற்று எனக் கருதுதல் பொருத்தம் உடைத்து எனக் கூறுகிறார். மேலும், இவர் இணைப்புச் சொற்கள் (Connectives), ஒட்டிகள் (Clitics), துணை வினைகள் (auxiliary verbs), அன்பேவற் சொற்கள் (mild imperatives), வினைப்பொருள் இழந்த வினை வடிவங்கள், பகுத்தற்கரியனவாகிய ஒரு நிலைச் சொற்களையும் (particles) ஒட்டுக்களையும் தொகுத்துத் தொல்காப்பியம் இடைச்சொல் என விவரிக்கிறது என்கிறார்.

தொல்காப்பியம் நாற்பத்து மூன்று இடைச்சொற்களை விவரிக்கிறது. இச்சொற்கள் பிறழப் பிரித்தனவாகவும் தமது இயல்பான பொருளை இழந்து, தம்மால் சாரப்படுகின்ற பெயர், வினைச்சொற்களுக்கு உணர்ச்சிப் பொருளைத் தருவனவாகவும் காணப்படுகின்றன. உணர்ச்சிப் பொருள் தருகிற வினைச்சொல்

அமைப்பிலான இடைச்சொற்கள் தற்காலத்தில் துணைவினைகள் எனப்படுகின்றன.

சேனாவரையர் (தொல்.சொல். 251) 'தமக்கெனப் பொருளின்மை இடைச்சொற்குச் சிறப்பிலக்கணமாம்' என்கிறார். இச்சொற்களுக்கு எனத் தனிப்பொருள் இல்லை. இவை தாம் சார்ந்து வருகிற பெயர், வினைச் சொற்களின் சார்பினால் பொருளை உணர்த்துகின்றன.

புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக்கு உதவுநவும்
வினைசெயல் மருங்கின் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபு ஆகுநவும்
அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்
இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்
தத்தம் குறிப்பின் பொருள் செய்குநவும்
ஒப்பில் வழியான் பொருள் செய்குநவும்

என்று தொல்காப்பியம் இடைச்சொற்களை ஏழாக வகைப்படுத்துகிறது.

உரையாசிரியர்கள் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் ஒப்பில் வழியான் பொருள் செய்குந என்பதற்கு உவமை உருபுகள் எனப் பொருள் கூறுகின்றனர். ஆனால் இளம்பூரணரும் தெய்வச்சிலையாரும் ஒப்புமைப் பொருளை உணர்த்தாது, உரையசையாக வரும் போலும் என்னும் சொல் (ஒப்பில் போலி) என்று பொருள் உரைக்கின்றனர். மேலும், தெய்வச் சிலையார் ஒப்புமைப் பொருள் உடைய 'போல, அன்ன, ஏய்ப்ப, உறழ என்பன சாத்தன் புலி போலும் எனவும் புலி போலப் பாய்ந்தான் எனவும் புலி போன்ற சாத்தன், புலி போலும் சாத்தன் எனவும் இவ்வாறு பிறவும் முற்றும் வினையெச்சமும் பெயரெச்சமுமாகி வருதலினாலும் அவை யெல்லாம் வினைக்குறிப்பென்று கொள்க' என்று விளக்குகிறார்.

தொல்காப்பிய இடைச்சொற்களுள் எல்லே என்பதை விளக்குவதில் உரையாசிரிர்கள் வேறுபடுகின்றனர். இளம்பூரணர் நூற்பாவை 'எல்லே விளக்கம்' என்று குறிப்பிடுகிறார். ஆனால் சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார் மூவரும் 'எல்லே இலக்கம்' என்று கூறுகின்றனர். அடிகளாசிரியர் (இளம்பூரணர் உரை, 263) விளக்கம் என்பதும் இலக்கம் என்பதும் உரிச்சொற் பொருளாயிருத்தலின் 'எல்லே விளிக்கும்' என்று பாடம்

இருக்கலாமோ என்று அறிஞர் கருதுகின்றனர் எனக் கூறுகிறார்.

எல் என்பதன் அடியாகப் பிறந்த எல்லா (கலித்தொகை, 64), எல்லே (திருப்பாவை, 15), ஏல, ஏலே (தென் தமிழகப் பேச்சு மொழி) என்னும் சொற்கள் விளியாக இலக்கியங்களிலும் பேச்சு வழக்கிலும் வருகின்றன. எனவே 'எல்லே விளிக்கும்' என்பதே இந்நூற்பாவின் முந்தை வடிவமாக இருத்தல் வேண்டும். 'விளிக்கும்' என்பது நாளடைவில் ஏடுபெயர்த்து எழுதுவோரால் 'விளக்கம்' என்று மாற்றி எழுதப்பட்டுவிட்டது.

வீரசோழியம் இடைச்சொற்களுக்கெனத் தனி இயல் அமைக்கவில்லை. எனினும் வேற்றுமை உருபுகளை வேற்றுமையியலிலும் கால இடைநிலையுடன் இணைந்த வினை விகுதிகளைக் கிரியா பதப்படலத்திலும் விவரிக்கிறது. இடைச்சொற்களுள் இவை இரண்டும் சொல்லாக்கத்திலும் தொடரமைப்பிலும் பரந்த நிலையில் பயன்படுதலால், மொழியமைப்பில் முதன்மை பெற்றுள்ளன. எனவே இவை இரண்டையும் வீரசோழியம் விவரிக்கிறது. ஏனையவற்றை இந்நூல் இன்றியமையாதன எனக் கருதவில்லை.

நேமிநாதம் (77) சாரியை, வேற்றுமை உருபு, குறிப்புப் பொருட் சொற்கள், அசைநிலைச் சொற்கள், வினை விகுதிகள், இசைநிறைச்சொற்கள் என்னும் ஆறு வகையுள் இடைச்சொற்களை அடக்கிக் கூறுகிறது.

தொல்காப்பியத்தின் 'ஒப்பில் வழியான் பொருள் செய்குந' என்னும் இடைச்சொல் வகையை நேமிநாதம் நீக்கியுள்ளது. இந்நூலுக்கு உரை எழுதியோர், 'ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும்' என்று தொல்காப்பியம் ஒப்பில் போலி அசைநிலையாக வரும் எனக் கூறுவதை மேற்கோள் காட்டி, 'அஃது அசைநிலையுளே யடங்கும். ஆதலின் இங்குக் கொண்டதில்லை' என விளக்கம் தருகிறார்.

நன்னூல் (419) வேற்றுமை உருபுகள், வினை விகுதிகள், சாரியைகள், உவமை உருபுகள், தத்தம் பொருட் சொற்கள், இசை நிறைச் சொற்கள், அசைநிலைச் சொற்கள், குறிப்புப் பொருட் சொற்கள் என்னும் எட்டு வகையாக இடைச்சொற்களைப் பகுத்துக் கூறுகிறது. ஆனால் இலக்கண விளக்கமோ தொல்காப்பியத்தைப் போன்று ஏழு வகைகளையே குறிப்பிடுகிறது. இதன் ஆசிரியர் நன்னூல் எட்டு வகைப்படும் என்றதை மறுத்துரைக்கிறார்.

குறிப்பென ஒன்று கூட்டித் திறம் எட்டென்பாரும்
உளராலோவெனின் அது,
'தத்தம் பொருள'
என்பதனுள் அடங்குதல்,
'வினைபெயர் குறிப்பிசை'
என்பதனாற் பெறப்படுதலின் மிகைபடக் கூறலென
மறுக்க

என்று சுட்டிக்காட்டுகிறார்.

தொல்காப்பியத்தின் 'தத்தம் குறிப்பின் பொருள் செய்குந' என்பதை நன்னூல் இரண்டாகப் பகுத்துக் கூறுகிறது. இவ்விரண்டும் வருகிற இடத்திற்கேற்பக் குறிப்புப் பொருளையே உணர்த்துவன. எனவே நன்னூலின் பகுப்பு ஏற்றதாக இல்லை.

நன்னூல், இலக்கண விளக்கம் இரண்டின் இடைச்சொல் கருத்தாக்கம் தொல்காப்பிய உரைகளைப் பெரிதும் சார்ந்துள்ளது.

தொன்னூல் விளக்கம் (130) இடைச்சொற்களை நன்னூலைத் தழுவி எட்டு வகையாகப் பகுக்கிறது. இந்நூல் ஏ, ஓ முதலியவற்றைத் தத்தம் பொருளன என்றும் விண்ணென, ஒல்லென, கல்லென போன்ற ஒலிக்குறிப்புச் சொற்களைக் குறிப்பு என்றும் உரைக்கிறது.

சுவாமிநாதம் ஒன்பது வகையாக இடைச்சொற்களைப் பிரிக்கிறது. வேற்றுமை உருபுகள், சாரியைகள், விகுதிகள், இடைநிலைகள், தத்தம் பொருளை உணர்த்துவன. (குறிப்புப் பொருட் சொற்கள்), எழுத்தணவல், உவம உருபுகள், அசைநிலைகள், இசைநிறைகள் என்பன அவை. எழுத்தணவல் என்பது புதியது. இதனை எழுத்துச்சாரியை என்று செ.வை. சண்முகம் (சுவாமிநாதம், பக்கம் 119) கூறுகிறார். இவையும் இடைச்சொற்களே. எனினும் பிற நூல்கள் இவற்றைச் சுட்டவில்லை.

முத்துவீரியம் வேற்றுமை உருபுகள், வினை விகுதிகள், சாரியைகள், உவமை உருபுகள், இசைநிறைச் சொற்கள், அசைநிலைச் சொற்கள் என்னும் ஆறும் இடைச்சொல்லின் வகைகள் எனக் கூறுகிறது. ஆனால் இதற்கு மாறாக இடைச்சொற்களின் பொருளை உணர்த்துதல் காணப்படுகிறது. மன், கொன், உம், ஓ, ஏ போன்ற இடைச்சொற்கள் பலவற்றுக்கு அச்சம், பயமிலி, காலம், பெருமை, எதிர்மறை, சிறப்புப் போன்ற குறிப்புப் பொருட்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

## உரிச்சொல்

இலக்கண நூல்கள் உரிச்சொற்களை விவரிக்கும் திறன் அவற்றை இத்தகையன என்று திடமாக உணரும் வகையில் காணப்படவில்லை. இச்சொற்களின் விளக்கத்தில் நூல்கள் வேறுபட்ட கொள்கைகளை வெளிப்படுத்துகின்றன.

தொல்காப்பியம் இடைச்சொற்களையும் உரிச்சொற்களையும் பெயர், வினை இரண்டற்கும் இணையான சொற்களாகக் கருதவில்லை. எனினும் இவற்றுக்கும் தனி இயலை அமைத்து விளக்குகிறது. எனவே இச்சொற்களும் தமிழ்மொழி ஆக்கத்தில் இன்றியமையாதவையே என்பது இந்நூலின் கருத்தாகும்.

உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு மூன்றின் அடிப்படையில் தோன்றும்; பெயர்ச்சொல் போன்றும் வினைச்சொல் போன்றும் அவற்றின் வடிவம் காணப்படும் என்னும் தொல்காப்பிய விளக்கம் இச்சொற்களை அறிஞர்கள் வேர் அல்லது அடிச்சொற்களாகக் கருத இடமளித்துள்ளது.

தெய்வச்சிலையார் (தொல்.சொல். 293), "எழுத்ததிகாரத்துள் இதனைக் குறைச்சொற்கிளவி என்று ஓதினமையால், வட நூலாசிரியர் தாது என்று குறிப்பிட்ட சொற்களே இவையென்று கொள்ளப்படும்" எனக் கூறுகின்றார். பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரி (தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்புரை, பக்கம் 172) "செயலைக் குறிக்கும் பகுதிகளுக்குத் தாது எனப் பெயராதலினும் சில பெயர்கள் தாதுவிலிருந்து பெறப்பட்டன என்று கொள்ளுவது எளிதன்றாகலினும் எல்லாப் பெயர்களும் தாதுவிலிருந்து பெறப்பட்டன என்று கொள்ள முடியாது" எனத் தெய்வச்சிலையாரை மறுக்கிறார். மேலும், அவரே "உரிச்சொல்லென்பது பெயர், வினை இவற்றின் பகுதி எனக் கூறுதல் தகும் இதற்குச் சான்றாகத் தொல்காப்பியனாரே இதனைக் குறைச்சொற்கிளவி என எழுத்ததிகாரத்தின்கட் கூறியதும், ஈண்டு 'எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல் பின்றே' எனக் கூறியதும் காண்க" என்று கூறுகின்றார். சி. இலக்குவனாரும் (தொல்காப்பிய ஆராய்ச்சி, பக்கம் 110), தெ.பொ. மீனாட்சி சுந்தரனும் ('உரிச்சொல்', இலக்கண ஆய்வுக்கட்டுரைகள், பக்கம் 122) உரிச்சொற்களை வேர்ச்சொற்கள் எனக் கூறுகின்றனர்.

தொல்காப்பிய உரிச்சொல் விளக்கத்தில்,

ஒருசொல் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபின் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்

என்னும் பகுதி உரிச்சொற்களின் பொருள் உரிமைத் தகுதியையும் அவற்றின் பொருளை உணர்ந்து கொள்ளுதற்கான நெறியையும் குறிப்பிடுகிறது.

ஒரு சொல்லுக்குப் பல பொருள், பல சொல்லுக்கு ஒரு பொருள் என்னும் இரு பொருள்உரிமைத் தகுதிகளுள் ஒன்றை உரிச்சொற்கள் பெற்றிருக்கும் என்பது தொல்காப்பிய நூற்பாச் செய்தி; ஆயினும் நாற்பத்தொன்பது சொற்களுக்கு ஒரு பொருளை மட்டுமே தொல்காப்பியம் சுட்டுகிறது. இது முரண்பாடாகத் தோன்றுகிறது. எனவே ஒரு பொருள் கூறப்பட்ட சொற்களும் பல பொருளை உடையன என்றும் அப்பல பொருள்களுள் வழக்கில் பயின்று வராத பொருள் மட்டுமே உரியியலில் கூறப்படுகிறது என்றும் கொள்ளலாம். இதற்குச் சான்றாகப் புரை, மாலை என்னும் சொற்களைக் குறிப்பிடலாம். இச்சொற்களுக்கு முறையே உயர்பு, இயல்பு என்று தொல்காப்பியம் பொருள் கூறுகிறது. ஆனால் அதன் மொழியில் இவை குற்றம் (தொல்.பொருள். 105), இருட்டுப் பொழுது (தொல்.பொருள். 6) என்னும் பொருளில் வருகின்றன. எனவே இச்சொற்கள் ஒரு சொல்லுக்குப் பலபொருள் என்னும் வகையைச் சார்ந்தவை என்பது தெளிவாகிறது. தொல்காப்பியம்,

கூறிய கிளவிப் பொருள்நிலை அல்ல
வேறுபல தோன்றினும் அவற்றொடு கொளலே

(தொல்.சொல். 390)

என்று கூறுவதும் இத்தகைய சிக்கலுக்குத் தீர்வாக அமைகிறது.

வீரசோழியம் உரிச்சொல் குறித்து யாதும் கூறவில்லை.

நேமிநாதம் (82) உரிச்சொற்கள் பெயரையும் வினையையும் சார்ந்து வரும்; பல சொல் ஒரு பொருளுக்கு உரிமை பூண்டும் ஒரு சொல் பல பொருளுக்கு உரிமை பூண்டும் வரும் என விளக்குகிறது.

நேமிநாதத்தில் தொல்காப்பியம் விவரித்த சில சொற்களுக்குப் பொருள் கூறப்படுகிறது. இவை தவிரக் கொம்மை, நொடை, எல் என்னும் மூன்றும் புதிதாகப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

*விலை நொடை (நேமிநாதம், 83)*

*கொம்மை இளமை (நேமிநாதம், 85)*

*எல்லும் விளக்கம் (நேமிநாதம், 86)*

எல் என்ற சொல்லைத் தொல்காப்பியம் இடைச்சொல்லாகக் கருதுகிறது.

நன்னூல் உரிச்சொற்களுக்குப் புதிய விளக்கத்தைத் தருகிறது.

*பலவகைப் பண்பும் பகர்பெயராகி*
*ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை*
*ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல் (நன்னூல், 441)*

உரிச்சொற்கள் பண்புகளை உணர்த்தும்; பெயர், வினைச்சொற்களைத் தழுவி வரும்; செய்யுட்கு உரிமை உடையன என்பது நன்னூலின் வரைவிலக்கணமாகும்.

நன்னூல் உயிரினங்களை ஐந்தாக வகைப்படுத்தி, உயிர்ப் பொருளுக்கும் உயிரல் பொருளுக்கும் உரிய பண்புகளையும் உரியியலில் விவரிக்கிறது.

நன்னூல் தருகிற விளக்கம் உரிச்சொற்களைப் பெயரடைகளாகவும் வினையடைகளாகவும் கருத இடமளிக்கிறது.

இலக்கண விளக்கம் தொல்காப்பியத்தைத் தழுவி, அந்நூலைப் போன்று விரிவாக உரிச்சொற்களை விவரிக்கிறது. தொல்காப்பிய உரிச்சொற்கள் யாவும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இலக்கண விளக்கத்தின் உரிச்சொல் பற்றிய வரைவிலக்கணம் தொல்காப்பியச் செய்திக்கு விளக்கமாக அமைகிறது. இந்நூல் உரிச்சொற்களை நால்வகைச் சொற்களுள் ஒன்றாகக் கூறிவிட்டு, அவை பெயர்ச் சொற்களுக்கும் வினைச் சொற்களுக்கும் அடியாக வரும் எனக் குறிப்பிடுகிறது.

*பெயரும் வினையும் போன்றவை யிரண்டற்கு*
*மடியு மாகி யவற்றேற் புழிநின்று*

என்னும் விளக்கம் முரணாக உள்ளது. இவ்விளக்கம் சேனாவரையரையும் நச்சினார்க்கினியரையும் தழுவியதாகும்.

பிரயோக விவேகம் (18) சமாசப் படலத்தில் உரிச்சொல்லுக்கு,

> **இதனால் சொல் எல்லாம் உரிச்சொல்லேயாம் எனத் துணிக**

என்றும்

> **உரிச்சொல்லாவது பொருளைக் காரணமாய் நின்று உணர்த்துதற்கு உரிய சொல்**

என்ற விளக்கம் தருகிறது. இது அகராதிப் பொருளை உணர்த்தும் அடிச்சொற்களையே உரிச்சொற்கள் என்று சுட்டுகிறது.

தொன்னூல் விளக்கம் உரிச்சொற்களை அடைமொழி எனக் கூறுகிறது. இந்நூல் நன்னூலைப் பின்பற்றி உரிச்சொற்களை விவரிக்கிறது.

முத்துவீரிய உரிச்சொல் இலக்கணம் தொல்காப்பியச் செய்திகளின் சுருக்கமாகக் காணப்படுகிறது.

********

## கருவி நூல்கள்


அகத்தியலிங்கம், ச., சொல்லியல் - பெயரியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர், 1979.

- - - - - - - - - - - - சொல்லியல் - வினையியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர், 1982.

ஆண்டியப்பன், தே. காப்பியர் நெறி - எழுத்தியல்

ஆதித்தன், ஏ., இலக்கணப் புதுமை, சங்கு முத்து வெளியீடு, மதுரை, 1982.

ஆறுமுகநாவலர் (பதி.) தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, இலக்கணக் கொத்து, வித்தியாநுபாலன அச்சகம், சென்னை, 1956.

இசரயேல், மோ., இலக்கண ஆய்வு - பெயர்ச்சொல், சிந்தாமணி வெளியீடு, மதுரை, 1976.

- - - - - - - - - - - இலக்கண ஆய்வு - வினைச்சொல், மதுரை பப்ளிஷிங் ஹவுஸ், மதுரை, 1976.

- - - - - - - - - - - இடையும் உரியும் , சிந்தாமணி வெளியீடு, மதுரை, 1977.

- - - - - - - - - - - 'நிகழ்காலத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' பரிதிமாற்கலைஞர் நூற்றாண்டு விழா மலர், பக். 121-127.

இலக்குவனார், சி., தொல்காப்பிய ஆராய்ச்சி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1961.

இளங்குமரன், இரா.(பதி.) இலக்கண வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1988.

இளம்பூரணர், தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் உரை, கழக வெளியீடு, சென்னை, 1955.

- - - - - - - - - - தொல்காப்பியம் - சொல்லதிகார உரை, கழக வெளியீடு, சென்னை, 1963.

- - - - - - - - - - தொல்காப்பியம் - பொருளதிகார உரை, கழக வெளியீடு, சென்னை, 1969.

| | |
|---|---|
| குணவீர பண்டிதர் | நேமிநாதம்,<br>கழக வெளியீடு, சென்னை, 1966. |
| சண்முகம், செ.வை., | எழுத்திலக்கணக் கோட்பாடு,<br>அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்,<br>அண்ணாமலை நகர், 1980. |
| - - - - - - - - - - | சொல்லிலக்கணக் கோட்பாடு<br>அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்,<br>அண்ணாமலை நகர், 1984. |
| சண்முகம், செவை. (பதி) | சுவாமிநாதம் உரை,<br>அண்ணாமலை நகர், 1975. |
| சுப்பிரமணிய தீட்சிதர், | பிரயோக விவேகம்,<br>சரஸ்வதி மகால், தஞ்சாவூர். |
| சுயம்பு, பி.பெ., | 'அழன்',<br>தமிழ்ப் பொழில், 56 (182), பக். 175-179. |
| சுயம்பு, பெ., | தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும் - ஓர் ஒப்பாய்வு, வெளிவராத முனைவர் பட்ட ஆய்வேடு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1985. |
| - - - - - - - - - - - - | தமிழ் மொழி அமைப்பும் வரலாறும்,<br>இலக்குமி நிலையம், சென்னை, 2004. |
| - - - - - - - - - - - - | இலக்கண நூற்களஞ்சியம்,<br>சென்னை, 2004. |
| - - - - - - - - - - - | 'தொல்காப்பிய இலக்கணமும் மொழியும்'<br>செந்தமிழ் - உலகத் தமிழ் மாநாட்டு மலர். |
| சுவாமிநாத தேசிகர் | இலக்கணக் கொத்து,<br>சரஸ்வதி மகால், தஞ்சாவூர். |
| தெய்வச்சிலையார், | தொல்காப்பியம் - சொல்லதிகார உரை,<br>கழக வெளியீடு, 1972. |
| நச்சினார்க்கினியர், | தொல்காப்பியம் - எழுத்ததிகார உரை,<br>கழக வெளியீடு, 1974. |
| - - - - - - - - - - - - | தொல்காப்பியம் - சொல்லதிகார உரை,<br>கழக வெளியீடு, 1962. |
| பெருந்தேவனார், | வீரசோழியம் - உரை,<br>கழக வெளியீடு, சென்னை, 1970. |

மயிலைநாதர், — நன்னூல் உரை,
உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 1995.

மீனாட்சி சுந்தரன், தெ.பொ., — 'உரிச்சொல்,
இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், 1974,
பக். 121-138.

- - - - - - - - - - - - - தமிழ் மொழி வரலாறு,
சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை.

முத்துவீர உபாத்தியாயர், — முத்துவீரியம்,
கழக வெளியீடு, சென்னை, 1972.

வீரமாமுனிவர், — தொன்னூல் விளக்கம்,
கழக வெளியீடு, 1980.

வேங்கடராசுலு ரெட்டியார், வே., — தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி,
சென்னைப் பல்கலைக்கழகம்.

வேணுகோபாலப் பிள்ளை, மே.வீ., — யாப்பருங்கல விருத்தி,
அரசு கீழைப்புலச் சுவடி நூலகம்,
சென்னை, 1960.

வைத்தியநாத தேசிகர், — இலக்கண விளக்கம்,
கழக வெளியீடு, சென்னை, 1973.

Abercrombie, David, — Elements of General Phonetics,
Edinburgh University Press, Edinburgh, 1980.

Andre's F. Sjoberg, — 'Evidence for a Locative Case in Telugu'
Dravidian Linguistic (seminar Papers),
1969, pp. 59-64.

Athithan, A., — Language Structures in Tamil - A Historical Study,
Madurai Kamaraj University, Madurai, 1989.

Beschi, C.J., — A Grammar of the High Dialect of the Tamil Language,
Saraswati Mahal Library, Tanjore, 1974.

- - - - - - - - - - - - Clavis,
The Evangelical Lutheran Mission Press, 1876.

- - - - - - - - - - - - A Grammar of the Common Dialect of the Tamil Language,
Saraswati Mahal Library, Tanjore, 1974.

Burrow, T. and Emeneau. M.B., A Dravidian Etymological Dictionary, Clarendon Press, Oxford, 1961.

- - - - - - - - - - A Dravidian Etymological Dictionary (Supplement), Clarendon Press, Oxford, 1968.

Caldwell, Robert, A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, London, 1856.

Emeneau, M.B., Dravidian Linguistics, Ethnology and Folk Tales, Annmalai University, 1967.

Glasov, yuri, Y., 'Non-Past Tense Morpheme in Ancient Tamil' Studies in Indian Linguistics (Prof. M.B. Emeneau Sastipurti Volume), Deccan College, Poona University and Annamalai University, 1968, pp. 103-109.

Gleason, H.A., An Introduction to Descriptive Linguistics, New Delhi, 1968.

Israel, M., The Treatment of Morphology in Tolkappiyam, Madurai University, Madurai, 1973.

Ladefoged, P., Elements of Accoustic Phonetics, Oliver & Boyd, Edinburgh, 1966.

Natarajan, T., The Language of Sangam, Literature and Tolkappiyam, Madurai Publishing House, Madurai, 1977.

Subrahmanian, S., Phonology, Part I, Volume I, S.T. Hindu College, Nagercoil, 1977.

Vijaya Venugopal, G., A Modern Evaluation of Nannul, Annamalai University, Annamalai Nagar, 1968.

Zvebil, Kamil, V., Comparative Dravidian Phonology, Mouton, The Hague, 1970.


********

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| இலக்கிய இதழ்கள் | 110.00 |
| தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின்தமிழ்த்தொண்டும்மொழியியல்பங்களிப்பும் | 25.00 |
| இஸ்லாமியத்தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும் | 40.00 |
| பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும் | 80.00 |
| தமிழெனப்படுவது | 115.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியியல் | 105.00 |
| வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும் | 70.00 |
| தொல்லியல் நோக்கில் சங்ககாலம் | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி.500 வரை) | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி.501 - கி.பி.900) | 70.00 |
| பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் | 35.00 |
| திருமணம் செல்வக்கேசவராய முதலியார் | 30.00 |
| அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார் | 55.00 |
| சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார் | 40.00 |
| மூதறிஞர் மு. இராகவையங்கார் | 40.00 |
| ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1 | 80.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2 | 85.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3 | 95.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 180.00 |
| நாவல்கலையியல் | 50.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி | 60.00 |
| சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |

**Pub.No. 528** இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி **35.00**